
இலங்கையில் ஆங்காங்கே ஆட்சிபுரிந்த ஐந்து
மன்னர்களின் கற்பனை கலந்த சில முகங்கள்

# மனவைரம்

(வானொலி நாடகங்கள்)








'மறவன்புலோ' செல்லம் அம்பலவாணர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனைவைரம்

(வானொலி நாடகங்கள்)

**இலங்கையில் ஆங்காங்கே ஆட்சிபுரிந்த ஐந்து மன்னர்களின்**
**கற்பனை கலந்த சிலமுகங்கள்**

2019 அரச இலக்கிய விழாவில்
சிறந்த சிய நாடக இலக்கியத்துக்கான
இலங்கை அரசின் (சாகித்திய) விருது
பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆசிரியரின் பிற ஆக்கங்கள் :


| | | | |
|---|---|---|---|
| 1. | பஞ்சாமிர்தம் | சிறுவர் நாடகங்கள் | 2015 |
| 2. | சட்டத்தின் திறப்பு விழா | வானொலி நாடகங்கள் | 2016 |
| 3. | பஞ்சாயுதம் | நாடகங்கள் | 2017 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

manavairam

# மனவைரம்

இலங்கையில் ஆட்சிபுரிந்த ஐந்து மன்னர்களின் கற்பனை கலந்த சிலமுகங்கள்




ஆசிரியர்

## 'மறவன்புலோ' செல்லம் அம்பலவாணர்

## 'maravanpulo' sellam ambalavanar



ஆசிரியர் வெளியீடு

2018



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'மனவைரம்'

(வானொலி நாடகங்கள்)

(c) மறவன்புலோ செல்லம் அம்பலவாணர்

முதற்பதிப்பு : 2018

ISBN: 978-955-42626-3-8

தேசிய நூலக ஆவணவாக்கல் மத்திய நிலையத்தினால்
அங்கீகரிக்கப்பட்டு வடிவமைக்கப்பட்ட வெளியீட்டு பட்டியல் தரவு

அம்பலவாணர், செல்லம் மறவன்புலோ
மனவைரம் / மறவன்புலோ செல்லம் அம்பலவாணர்
கொழும்பு : ஆசிரியர் , 2018. -
ப. XXVI, 150 செமீ. 21
ISBN 978-955-42626-3-8
i. 894.8112 டிவி 23 ii. தலைப்பு
1. நாடகம்

பதிப்பாசிரியர் : செ. அம்பலவாணர்,
478/28 அளுத்மாவத்தை வீதி,
கொழும்பு-15
தொலைபேசி : 0714280809
e-mail : ambalam@slt.com.lk

அச்சுப்பதிப்பு : K.J.Enterprises
63, விகாரைலேன், கொழும்பு 06
0112058489

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சமர்ப்பணம்.....

தம் கண்மணியை என் இதயத்தில் இருத்தி..

என்னைத் தம் இதயத்தில் அமர்த்தி...

என் கண்மணிகளை தம் இதயத்தில் சுமந்து..

இன்றும் தெய்வமாகி எம்மைக்காத்து நிற்கும்...

என்னை மரு(று)மகனாக ஏற்று..

மனைவாழ்வை மலர்ப் பஞ்சணையாக்கிய...

அருமை மாமா மாமிக்கு..!!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

## வவுனியா, வைரவப் புளியங்குளம்
## அருள்மிகு ஞானவைரவர் ஆலய
## பிரதம சிவாச்சாரியார்
## பிரம்மஸ்ரீ குமாரசாமி ஐயர் கணேசக்குருக்கள் வழங்கிய

# ஆசியுரை

தேவராஜ ஸேவ்யமான பாவனாங்க்ரி பங்கஜம்
வ்யாலயஜ்ஞ ஸூத்ர மின்து சேகரம் க்ருபாகரம்
நாரதாதியோகி வ்ர்ந்த வந்திதம் திகம்பரம்
காசிகா புராதிநாத காலபைரவம் பஜே !



சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் கதிரேசுவீதி, வைரவப்புளியங்குளம் வவுனியாவை வதிவிடமாகவும் கொண்ட திரு தம்பிராசா தம்பதிகள், வைரவப் புளியங்குளம் அருள்மிகு ஞானவைரவப் பெருமான் பக்தர்கள். குடும்பத்தவர்கள் அனைவரும் எம்பெருமானின் அனைத்து நிகழ்வுகளிலும் தவறாது கலந்து கொண்டு ஆத்மரீதியாக தமது பங்களிப்பை வழங்குவதனாலும், திருமதி அன்னபூரணி தம்பிராசா வவுனியாவில் பிரசித்தி பெற்ற ஆரம்பப்பிரிவு ஆசிரியையாக இருந்ததனாலும், அவர்களின் பிள்ளைகள் மூவர் ஆசிரியர்களாக அமைந்திருந்ததாலும், இறைபக்தி கொண்ட இக் குடும்பம் வைரவருடனும், எங்கள் குடும்பத்துடனும் மிகவும் ஐக்கியமானது. விசேடமாகக் குடும்பத்தின் சோதிட விடயங்கள் தொடர்பாக என்னுடன் கலந்தாலோசிப்பது வழமையாகியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏறத்தாழ இருபத்தைந்து வருடங்களுக்கு முன்னர் தனது மூத்தமகளுக்கு ஒரு சம்மந்தம் பேசி வந்திருப்பதாக இரு சாதகங்களையும் தம்பிராசா அவர்கள் என்னிடம் தந்தார். பொருத்தம் நன்றாக இருக்கின்றது. இதனைக் கைவிடவேண்டாம், இதுவே நிறைவேறும் என்று உறுதியாகக் கூறினேன். எம்பெருமானின் திருவருளினால் எல்லாம் சிறப்பாக நிறைவேறியது.

அன்று திரு செல்லம் அம்பலவாணர் சாவகச்சேரி, மறவன்புலோவைச் சேர்ந்தவர் என்பதும் கொழும்பில் ஸ்ரீலங்கா ரெலிகொம்மில் பணிபுரியும் ஒருபொறியியலாளர் என்பதும் மட்டுமே நான் அறிந்ததொன்றாக இருந்தது. அத்துடன் அவரும் சிறுவயதிலிருந்தே தமது குலதெய்வமாகிய வைரவப் பெருமானின் மீது பக்தியுடைய பிறவியிலேயே புலாலுண்ணாதவர் என்பதால் இன்னும் எம்மிடையே நெருக்கம் அதிகமானது.

அண்மையில் அவருடன் கலந்துரையாடியபோது தான், அவருடைய மறுபக்கமாகிய கலைத்துறை மற்றும் ஆன்மீகத்துறை மீதுள்ள ஈடுபாட்டினை என்னால் விபரமாக அறியமுடிந்தது. அவர் கேட்டுக்கொண்டதற்கிணங்க அவரால் எழுதி வானொலியில் ஒலிபரப்பான நாடகங்களின் தொகுப்பாகிய **'மனவைரம்'** என்ற வானொலிநாடக நூலுக்கு எனது ஆசியுரையை வழங்குவதில் பெருமகிழ்வடைகின்றேன்.

இந்தப் புத்தகத்தினை வாசித்தபோது அவர் மக்களின் வாழ்க்கை, சமய கலாசார பழக்க வழக்கங்கள், பண்புகளை மிக ஆழமாக உள்வாங்கி பக்குவமாக தன்னுடைய மனதிலுள்ள கற்பனைகளைத்தட்டிக் கொடுத்து சமூக விழுமியங்களுக்கும் முன்னுரிமை கொடுத்து இந்த நாடகங்களை உருவாக்கியுள்ளார் என்பது தெளிவாகின்றது. பலநூற்றாண்டுகளுக்கு முன்பு எமது மண்ணில் நிகழ்ந்த கதையை மீண்டும் எங்களுக்குத் தந்துள்ளார். இந்நாடகங்களின் மூலம் எமது மண்ணின் மகிமையை வெளிக்கொணர்ந்து, மண்ணை ஆட்சிசெய்தவர்களின் விசேட தனித்துவமான பண்புகள், குணவியல்புகள், நெறிமுறைகள், நீதித்திறன் போன்றவற்றை இன்றைய சமுதாயம் அறிந்து கொள்வதற்கு வழிசமைத்துள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தான் பிறந்த கிராமமான மறவன்புலோவை, பெருமையாகத் தனது பெயருடன் இணைத்திருப்பதுவே மண்ணின்மீதுள்ள பற்றுதலுக்கு ஒரு சான்றல்லவா. சிறந்த முயற்சி. பாராட்டப்படவேண்டியதொன்று.

ஒரு பொறியியலாளராக இருந்து, ஒருகலைஞனாகவும், ஆன்மீகத்துறையில் புராணபடனம், திருமுறை முற்றோதலில் ஈடுபாட்டுடன் பங்குகொள்ளும் சிவனடியானாகவும் திகழும் உங்களுக்கு இவை எம்பெருமான் திருஅருளால் கிடைத்த பேறுகளே. எம்பெருமான் திருவருளுடன் தாய்தந்தையரின் அன்பும், ஆசீர்வாதமும் தாம் பெற்ற பிள்ளையைத் தாரைவார்த்துத் தந்த மாமா மாமியின் ஆசிகளும் என்றும் உங்களுக்குத் துணைநிற்கும்.

செல்லம் அம்பலவாணர் நிறைந்த வாழ்வு பெற்று தமிழுக்கும் இறைவனுக்கும் தொடர்ந்தும் தவறாது தொண்டாற்றி நோய் நொடியற்ற நிறைவான வாழ்வுவாழ எல்லாம் வல்ல வைரவப்பெருமான் திருவருள் கிடைக்கப் பிரார்த்தித்து நல் ஆசிகளை நல்குகின்றேன்.

**குமாரசாமி ஐயர் கணேசக் குருக்கள்**
**4வது ஒழுங்கை**
**51, குருமன்காடு**
**வவுனியா**
***10.12.2018***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

## சைவப்புலவர், கலாபூஷணம்

## திரு சு.செல்லத்துரைஅவர்கள் வழங்கிய

# அறிமுகவுரை

## பல்பரிமாண நாடகக் கலைஞர்



மறவன்புலோ செல்லம் அம்பலவாணர் அவர்கள் நவீன அறிவியல்துறையில் பொறியியலாளராகத் திகழ்கிறார். அதேவேளை நாடக இலக்கியத் துறையில் பல்பரிமாண நாடகக் கலைஞராகவும் தன்னை அடையாளப் படுத்தியுள்ளார்.

நாடகக் கலையில் மேடைநாடக நடிகர், கூத்து நடிகர், வானொலி நாடக நடிகர், நாடக எழுத்தாளர் என நான்கு பரிமாணங்கள் இவருக்கு உண்டு. மேடை நாடகத்தில் பாத்திர குணநலன் வெளிப்பட வசனம் பேசி மெய்ப்பாடு காட்டி நடிப்பார். கூத்தில் தாளக்கட்டுப் பிசகாமல் பாடி ஆடி நடிப்பார். வானொலி நாடகத்தில் வசனத்திலேயே மெய்ப்பாடுகளைக் காட்டித் தன் குரல்வளத்தால் நடிப்பைக் காட்டுவார். நாடக எழுத்துருவில் அந்தந்தப் பாத்திரத்துக்குரிய மொழியில் இலக்கியச் சுவையுடன் உணர்ச்சி ததும்ப எழுதுவார். அதைப்படிக்கும் போதே அக்காட்சியில் நாடகத்தைக் காணவைப்பார்.

இந்த நான்கு பரிமாணங்களுக்கும் சாட்சியாய் இதுவரை முப்பது வரையிலான சிறுவர் நாடகங்களையும் இருபது வானொலி நாடகங்களையும் படைத்து எண்பது வானொலி நாடகங்களில் நடித்துள்ளமையையும் காணமுடிகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர் நூலாக வெளியிட்ட 'சட்டத்தின் திறப்பு விழா' - 2017 இலும், 'பஞ்சாமிர்தம்' - 2018 இலும் அரச விருது நிகழ்வில் சுய நாடகப் பிரிவில் சான்றிதழ் பெற்றமை இவரது நாடகக் கலைத்திறனுக்கு உரைகல் ஆகும்.

இப்பொழுது வெளிவரும் 'மனவைரம்' எங்கள் நாட்டை ஆண்ட ஐந்து தமிழ் மன்னர்களின் ஆட்சியில் நிகழ்ந்த ஐந்துவித அவலங்களைக் கருவாகக் கொண்டது.

அநுராதபுர மன்னன் எல்லாளனைக் காட்டுவது '**மனவைரம்**'
யாழ்ப்பாண மன்னன் சங்கிலியனைக் காட்டுவது '**விதி**'
வன்னி மன்னன் பண்டாரவன்னியனைக் காட்டுவது '**துரோகம்**'
இலங்கை மன்னன் இராவணனைக் காட்டுவது '**பெண்மை**'
மாந்தை அரசி அல்லிராணியைக் காட்டுவது '**சாபம்**'

மறவன்புலோ செல்லம் அம்பலவாணர் ஒரு பல்பரிமாண நாடகக் கலைஞர் என்பதற்குச் சான்றாக மேற்கூறியவை என்றும் நின்று நிலைக்கும் என்பது உறுதி.

ஆட்சி உரிமை அனைத்தையும் இழந்து அரசியல் ஏதிலிகளாக நிற்கும் நம் தமிழர்களுக்கு, நம் நாடாண்ட தமிழ் மன்னர்களை நினைவுகூர வைத்திருப்பது காலத்தினால் செய்த நன்றி ஆகும்.

வரலாறு திரும்பிவரும் என்பது உண்மையாக வேண்டும்.

**கலாபூஷணம், சைவப்புலவர்**
**சு.செல்லத்துரை**
**இளவாலை**
***10.12.2018***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னாள் அரச அதிபர் மற்றும்
கல்வி அமைச்சின் மேலதிக செயலாளர், 'கலாகீர்த்தி'
'உடுவை' எஸ். தில்லைநடராசா அவர்களின்

# அணிந்துரை



கூத்து, இசை நாடகம், சரித்திர நாடகம், புராண நாடகம் சமூக நாடகம் எனப் பல பெயர்களால் மேடைகளில் அரங்கேற்றப்பட்ட நாடக வடிவங்கள் வானொலியின் வருகையை அடுத்து வானொலியில் ஒலி பரப்பாகின. சில மேடை நாடகங்கள் வானொலி நாடகங்கள் திரைப்படங்களாகவும் மாற்றம் பெற்றன. தொலைக்காட்சிப் பெட்டிகள் பல இல்லங்களை அலங்கரிக்க ஆரம்பித்தபின், தொலைக்காட்சி நாடகங்களும் ஒளிபரப்பில் முக்கிய இடத்தைப் பிடித்துக்கொண்டன. பொதுவாக திரையரங்குகளுக்கும் நாடக மேடைகளுக்கும் செல்ல வசதியற்றோருக்கு வானொலி நாடகங்கள் பெருவிருந்தாக அமைந்தன.

வானலை வழியாக நாடகங்கள் வரும் வேளையிலும் கேட்டு இன்புறக்கூடிய வசதி எல்லோருக்கும் அமைவதில்லை. நாடகங்களைப் படித்து இன்புறக்கூடிய வசதியும் ஆர்வமும் உள்ளோர் படிக்கத்தக்கதாக நாடகங்கள் நூல்வடிவம் பெறுவதும் வரவேற்கத்தக்கது.

அந்த வகையில் ஏற்கெனவே இலங்கை வானொலியில் ஒலிபரப்பான, பன்முக ஆளுமை மிக்க கலைஞர் மறவன்புலோ செல்லம் அம்பலவாணரின் இலங்கை அரச வம்சத்தைச்சேர்ந்தவர்களின் வாழ்வைச் சித்தரிக்கும் ஐந்து நாடகங்கள் 'மன வைரம்' என்னும் நாடக நூலாக வெளிவருகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆன்மிகத் துறையிலும் அதிக ஈடுபாடு மிக்க செல்லம் அம்பலவாணரின் பிறந்தமண் யாழ் மாவட்டத்திலுள்ள மறவன்புலோ ஆகும். கொழும்பு பல்கலைக்கழக முதுமாணிப்பட்டதாரியான பொறியிலாளர் செல்லம் அம்பலவாணர் தற்போது ஸ்ரீ லங்காரெலிகொம் நிறுவனத்தின் பிரதிப்பொது முகாமையாளர் என்பதும் குறிப்பிடத்தக்கது. இனிமையான தமிழ்ப்புலமை மிக்க அம்பலவாணர் நாடகப்பிரதி எழுதுவதிலும், நாடகங்களில் நடிப்பதோடும் தன் திறமைகளை மட்டுப்படுத்தாது தொலைக்காட்சி நாடகங்களுக்கும் குரல் வழங்கியுள்ளார். ஏற்கெனவே நூல்வடிவம் பெற்றுள்ள இவரது நாடக நூல்களான பஞ்சாமிர்தம், சட்டத்தின் திறப்பு விழா மற்றும் பஞ்சாயுதம் ஆகியன கலாசார அமைச்சின் பாராட்டுகளைப் பெற்றுள்ளது.

அது மட்டுமல்ல மூத்த ஊடகவியலாளர்களான ஜோர்ஜ்.சந்திரசேகரன், எழில்வேந்தன் ஆகியோரின் விசேடபாராட்டைப் பெற்றுள்ளதோடு, பிரபல வானொலிக் கலைஞர்களான வானொலிக்குயில் இராஜேஸ்வரி சண்முகம் ஜோக்கிம் பெர்னான்டோ, லூக்கஸ் திருச்செல்வம், மயில்வாகனம் சர்வானந்தா, றொபேட் வேதநாயகம், கே.சந்திரசேகரன், ஜெயரஞ்சன் யோகராஜன், ஏ.எம்.சி.ஜெயஜோதி ஆகியோருடன் இணைந்தும் நடித்துள்ளார்.

வானொலியில் ஒலிபரப்புவதற்கான நாடகங்களை எல்லோராலும் எளிதாக எழுதிவிட முடியாது. மேடை மற்றும் திரைப்படம் தொலைக்காட்சி போல பாத்திரங்களின் முகபாவம், உடல்மொழி, காட்சியமைப்பு ஆகியவற்றுக்கு வானொலி நாடகங்களில் இடமில்லை. நடிகர்களின் குரல்வளம், தயாரிப்பாளர் மற்றும் ஒலிப்பதிவாளர் இணைக்கும் ஒலிக்குறிப்புகள். தொய்வின்றி சீரான வேகத்துடன் நாடகம் அமைவதோடு வர்ணனைகளைக் குறைக்கும் அதே நேரம் காட்சிச்சூழலை புலப்படுத்தத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தக்க சொல்லாளுமை, விறுவிறுப்பு குன்றாமல் கருவை மையமாகக் கொண்டு போராட்டம் சிக்கல்களை உருவாக்கி உச்ச கட்டத்தையும் ஏற்படுத்தி சிக்கலுக்கு முடிவு காண்பதும் முக்கியம். வானொலி நாடகங்களுக்கு அமைய வேண்டிய முக்கிய அம்சங்களில் அம்பலவாணர் அதிக கவனம் எடுத்துள்ளதை, காற்றலையில் கலந்துள்ள அவரது படைப்புகளில் அவதானிக்க முடிந்துள்ளதை அணிந்துரையில் குறிப்பிடுவது மகிழ்வைத்தருகிறது.

**மன வைரம்**

"முகத்தில் செந்நிறப் பொலிவும் நீண்ட விழிகளின் காந்தவிழி வீச்சும்" ... என ஆரம்பித்து "இது கனவோ அன்றி கற்பனையோ" என வரும் வசனங்களில் அம்பலவாணரின் வண்ணத்தமிழைக் காண முடிகின்றது.

ஒரு பெண் நினைத்தால் அதை நிறைவேற்றுவாள் என்பதை, "அநுராதபுர ஆட்சியைக்கைப்பற்றி அம்மாவை அரியணையேற்றும் செல்வனல்லவா! என் மன வைரத்தை கருவிலேயே அவன் அறிய வேண்டும். அப்போது தான் கருத்துச் சிதறாமல் வளர்வான்" என சித்தரிக்கப்பட்டுள்ளது.

அநுராதபுர நிகழ்வில் இளவரசி மகாதேவி எல்லாளனை மணமுடிக்க விரும்புகின்றாள். எல்லாளன் மறுத்து விடுகின்றான். மன வைரத்துடன் காக்கை வண்ணனை மணந்து தன் மகன் காமினி மூலம் மன வைரத்தால் எல்லாளனைக் கொல்லும் கதை இது.

**விதி**

நூலாசிரியர் சங்கிலியனைப் பேச வைக்கின்றார் -" அரசியல் என்பது ஒரு சதுரங்கம்.. முள்படுக்கை. அதைப்புரிந்து கொள்ளும் கெட்டிக்காரர்களும் சமயோசிதிகளும் மட்டுமே பிழைக்க முடியும். யாழ்ப்பாண இராச்சியத்தின் மன்னன் மகனாகப்பிறந்தேன்.. ஆனால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைப்பாட்டி மகன் என்ற பெயர் என்னோடு ஒட்டிக் கொண்டது. கேலிக்கு ஆளானேன்.. இராச்சியத்தின் முடி கிடைக்க வாய்ப்பே இல்லை என்ற நிலைமை.. விடவில்லை.. எப்படியும் அடைந்தே தீர வேண்டும் என்ற வைராக்கியம்.. எல்லாம் விதி என்றுதான் கூற வேண்டும்.

நான் மன்னனாகிய வழி தவறானது. எனினும் நாட்டுக்கோ நாட்டு மக்களுக்கோ துரோகம் செய்யவில்லை. செய்யப்போவதுமில்லை. இது நாட்டின் விதி. ஆம் "விதி"

## துரோகம்

"உண்மையான நட்பு எனும் போது மனம் மகிழ முடியும்.. ஆனால் உள்ளொரு நோக்கம் வைத்து புறமொன்று பேசும் நட்பு ஆபத்தானது" என்கிறான் வன்னியின் இறுதி மன்னன் பண்டார வன்னியன்.

நாடகங்களில் சுவையான வசனங்கள் இன்னும் சில- "திருமணம் என்பது ஆயிரம் காலத்துப்பயிர்... தங்கையின் வாழ்வில் தலையிட எனக்கு விருப்பமில்லை. அதே போல் அவள் விருப்பத்துக்கு குறுக்கே நிற்கவும் நான் விரும்பவில்லை"

"பணிந்து வாழ்தல் எங்கள் பரம்பரையிலேயே கிடையாது. அதை அறிந்து கொள்ளுங்கள்"

"ஆணவமாகப் பேசினால் ஆபத்து நேரிடும்"
"பண்டார வன்னியன் பாம்புக்குப் பருந்தாய் இருப்பானேயன்றி விருந்தாயிருக்க மாட்டான்"


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பெண்மை

எண்ணிக்கையில் அதிக பாத்திரங்களைக் கொண்ட இராமாயணத்தில் ஐந்து பாத்திரங்களை பத்துக் காட்சிகளில் நடிக்க வைத்து இலங்கை வேந்தன் இராவணேஸ்வரனின் பலருக்கும் தெரியாத பக்கங்களை புதிய கோணத்தில் அற்புதமாக நாடகமாக்கியுள்ளார்.

"வஞ்சத்தில் மடிவதைவிட வெஞ்சமரில் வீரனாக மடிவதுதானே வீரனுக்கு உண்மையான அழகு.. நான் அந்த இராமன், வாலியைக் கொன்றது போல் ஒளித்து விளையாட விரும்பவில்லை. முன்னின்று போரிட்டு வீரனாகவே மடிகின்றேன்" என்றுரைக்கும் இராவணனும் "அந்த மகான் இராவணன் ஒரு தடவையாவது என்னைத் தொடவில்லை.. இராவணன் மட்டுமல்ல எந்தவொரு பிற ஆடவனும் என்னை அணுகவில்லை" என்று சொல்லும் சீதையும் "இலங்காபுரி ஆடவர்கள் புனிதமானவர்கள்.. பெண்மையை மதிப்பவர்கள்" என எடுத்துரைக்கும் மண்டோதரியும் நாடகத்தில் தோன்றுகிறார்கள்.

## சாபம்

"அன்பிலும் இரக்கத்திலும் தாயிலும் சிறந்த தாய் என எமது மக்கள் மனதில் இடம் பிடித்த மங்கை, மாந்தை வாழ் மக்களின் செல்வப்புதல்வி, கடற்கலையில் வல்லாள், போர்முனையில் சூரி, பயந்தரும் பலமுடையாள், எதிரிகளின் உயிர் உறிஞ்சும் காளி, மாந்தை மண்ணை ஆளும் வீர மங்கை" என அல்லியை அழகாக வர்ணித்துள்ளார், அம்பலவாணர்.

சாதாரணமாக சர்க்கஸ் வித்தைகளில் வருவதை விட ஆச்சரியம் தரும் வகையில்..... "எழுபதடிக் கம்பம் ஒன்றை நட்டு அதன்மேல் இளநீர் ஏழை வைத்து அவற்றின்மேல் ஏழு விளாம்பழங்களை வைத்து அவற்றுக்கும் மேலாக ஏழு எலுமிச்சம் பழங்களையும் வைத்து அதன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலே ஏழு கொட்டைப்பாக்குகளையும் வைத்து அதன் மேலாக ஏழு குன்றிமணிகளையும் வைத்து, அதுவும் போதாதென்று குன்றிமணிகளுக்கு மேல் ஏழு கடுகுகளை வைத்து அதன்மேலே ஏழு செப்பு ஊசிகளை வைத்து அதன் மேலே ஏறி நின்று கோரத்தவம் செய்தானாம்", என அருச்சுனனின் ஆற்றலை அற்புதமாகச் சொல்கின்றார் அம்பலவாணர். வானொலி வாயிலாக காற்றலையில் கலந்தவற்றை பதிவு செய்யா விட்டால் காலப்போக்கில் அவை மறையலாம்., அவற்றை மறக்கலாம். இந்நூலில் இடம் பெறும் நாடகங்கள் வன்னி, முல்லை, திருமலை, மன்னார் யாழ்ப்பாணம் மற்றும் அநுராதபுரம் தொடர்பான களங்களில் பல்வேறு வரலாற்றுடன் தொடர்பானவை.

எனவே நடிக்கவும் படிக்கவும் சுவையான நாடகங்களைத் தந்த நூலாசிரியரைப் பாராட்டி மேலும் நாடகப்பிரதிகள் ஆக்குவதை ஊக்குவிக்க உள்ளம் விரும்புகின்றது.

**உடுவை.எஸ்.தில்லைநடராசா**
**கொழும்பு**
***12.12.2018***


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாடகக் கலைஞர் , கலாபூஷணம்
# உடப்பூர் வீரசொக்கன் அவர்களின்

## வாழ்த்துரை



வெகுஜனத் தொடர்புச் சாதனங்களில் ஒருகூறாக முகிழ்ந்து நிற்கும் வானொலிநாடகக் கலையானது சமூக தாக்கங்களை உள்ளீர்க்கும் கலையாகப் பேசப்பட்டு வருவதை அறிகின்றோம். இச் சமூக நெறிகளுடன் உள்வாங்கப்பட்டு கேட்டு லயித்துக் கிரகிக்கக் கூடியதாக இருக்கும் அதேவேளை, இந்நாடகங்கள் சமூக விழிப்புணர்வு ஏற்படுத்தக்கூடிய வகிபாகத்தை வகுத்து நிற்கின்றன என்பதுவும் வெள்ளிடைமலை.

ஒலிவடிவத்தை மட்டுமே மூலதனமாகக்கொண்டு வடிக்கப்படும் வானொலி நாடகங்கள் இசைலாவண்யத்துக்கும், குரல்வளத்திற்கும், சத்தங்களின் உணர்ச்சி வெளிப்பாட்டுக்கும், குறி இசைவடிவத்திற்கும் முன்னுரிமை வழங்கப்படுவது குறிப்பிடத்தக்கது. இவ்வகையான கட்டமைப்பைக் கொண்ட வானொலி நாடகங்கள் கேட்டு ரசிக்கும் போது எம்மை மெய்மறக்கச் செய்கின்றன.

வானொலிக்கு நாடகங்களை எழுதுவது ஓர் தனிக்கலை. அதை எல்லோராலும் எழுதமுடியாது. அதற்கென ஓர் ஆற்றலும், ஆர்வமும் வேண்டும். இதற்கென்று தன்னை வரிந்து கட்டிக்கொண்டு அடையாளப்படுத்தியிருக்கின்றார் நண்பர் மறவன்புலோ செல்லம் அம்பலவாணர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்துடன், இந்த வானொலி நாடகங்களின் வெற்றிக்குத் தூண்களாக மிளிர்வது ஒரு குறிப்பிட்ட வகையான நெறியாக்கம், பன்மைத்தன்மை, குழுரீதியான பங்களிப்பு, நடிப்புணர்வுடன் கூடிய பேச்சு வாண்மை என்பனவற்றைக் குறிப்பிடலாம். இதற்கு நண்பர் அம்பலவாணரின் நாடகங்கள் சான்றாகத் துலங்குகின்றது.

வானொலிக்காக எழுதப்படும் நாடகங்கள் காற்றுடன், செவி வழியுடன் சங்கமித்து ரசித்த உள்ளங்களுக்கு கண்விழிமூலம் படித்து லயிக்க அன்பர் அம்பலவாணர் நூல்வடிவில் ஆவணப்படுத்தியுள்ளார். இம்முயற்சியை நிச்சயம் பாராட்டத்தான் வேண்டும்.

எழுத்தாளரும், வானொலி நாடக நடிகருமாகிய செல்லம் அம்பலவாணர் ஒரு பொறியியலாளராகத் தன்னை அடையாளப்படுத்தி நிரூபித்தாலும், தான் வாசித்தறிந்த அறிவாலும், தமிழ்மொழிமீது கொண்ட பற்றினாலும், மேற்கொள்ளப்பட்ட அறிவுத்தேடலின் முதிர்வினாலும், கலை இலக்கிய உந்துதலாலும் ஒரு சிறந்த வானொலி நாடக எழுத்தாளனாக முகிழ்ந்து நிற்பதைக் காண்கின்றோம்.

எமது தமிழ்ப் பாரம்பரியப் பிரதேசத்தில் பல வரலாற்றுத் தடங்களை விதைத்து, தமிழரின் வீரவரலாற்றினை அடையாளப்படுத்திய தமிழ் மன்னர்களான எல்லாளன், சங்கிலியன், பண்டாரவன்னியன், இராவணேசன், அல்லிராணி போன்ற தமிழ் மன்னர்களின் வீரவரலாறுகள், வீரதீரச் செயல்கள், மறைத்தும் மறந்தும் போகின்ற சமகாலச் சூழலில் தமிழ்மண்ணை அரசாட்சிபுரிந்த மேற்குறிப்பிட்ட மன்னர்கள் மூலம் தமது கலாசார பின்புலம், பண்பாட்டு விழுமியங்கள், வீரம் செறிந்த வீரச் செயல்கள், தீரமிகு செந்நெறிகள், பண்டைய மக்களின் பண்பாட்டு அடையாளங்கள் போன்றவற்றைக் கூட அம்பலவாணர் வடிகால் அமைத்து வாய்க்காலைத் திறந்துள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறவன்புலோ மண்ணிற்கு வரலாற்றுச் சிறப்புண்டு. பலஆன்மீக அறிஞர்களையும், அறிவுசார்ந்த பல ஆளுமைகளையும் தன்னகத்தே கொண்டிருந்த, கொண்டிருக்கின்ற பூமி. வடபுலத்தில் தனித்துவத்தைப் பறைசாற்றும் இடம். அம்மண்ணுக்குப் புகழாரம் சேர்க்கும் வகையில் முகிழ்ந்து நிற்கும் உழவன்பன் செல்லம் அம்பலவாணர் வரலாற்றினை வானொலிக்காக கற்பனைஓட்டத்தில் சிருஷ்டித்து தன்னை ஆதரித்த ஐந்து நாடகங்களை சமூகம் சார்ந்த பற்றுறுதியுடன் **"மனவைரம்"** நூலை ஆவணப்படுத்தியுள்ளார்.

ஆசிரியரின் முயற்சியைப் பாராட்டிப் பெருமைப்படுத்த வேண்டும். இவ்வகையான படைப்புக்களைத் தொடர்ந்தும் தர வேண்டும். இத்தமிழுலகம் பெறவேண்டும் என்பதனைக்கூறி நண்பர் செல்லம் அம்பலவாணர் எழுத்துலகில் பிரகாசிக்க வாழ்த்தி நிற்கின்றோம்.

**கலாபூஷணம்**
**உடப்பூர் வீர சொக்கன்**
**3ஆம் வட்டாரம்**
**உடப்பு**
***18.12.2018***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்னுரை...



எமது மண்ணில் ஆட்சிபுரிந்த ஐந்து மன்னர்களின் வரலாற்றில் இடம்பெற்ற சிறு சம்பவங்களை அடியொற்றி, கற்பனை கலந்து வானொலிக்கென எழுதிய பிரதிகளை நூலுருவில் 'மனவைரம்' என்ற பெயரில் கொணர்ந்து உங்களை மீண்டும் சந்திக்கின்றேன்.

இலங்கை ஒலிபரப்புக்கூட்டுத்தாபன தமிழ்ச்சேவை நாடகத் தயாரிப்பாளர்களது ஊக்கமும் வானொலி நேயர்களினதும் ரசிகர்களினதும் ஆதரவும்தான் வானொலியுடனான எனது உறவினை இறுக்கமாக்கி ஏறத்தாழ இருபத்தைந்து சிறுவர்நாடகங்களையும் இருபது முப்பதுநிமிட நாடகங்களையும் எழுதும் உத்வேகத்தைத் தந்ததுடன், வானொலி நாடகக்கலைஞனாக எண்பது வரையான நாடகங்களுக்கு குரல்கொடுக்கும் பாக்கியத்தையும் பெற்றுத்தந்தது.

வானொலி நாடகத்தில், அதற்கான வரைவிலக்கணங்களுடன் அது ஒலிபரப்பாகும் நேரஅளவு மற்றும் கதையின் களம் போன்றவற்றை மையமாக வைத்து பாத்திரங்களின் எண்ணிக்கை மட்டுப்படுத்த வேண்டியது அவசியமானதாகும். இலங்கை ஒலிபரப்புக்கூட்டுத்தாபன முப்பது நிமிட நாடகங்களைப் பொறுத்த மட்டில் பாத்திரங்கள் நான்கு அல்லது ஐந்திற்கு மட்டுப்படுத்தவேண்டியது கவனத்திற் கொள்ளப்பட வேண்டும். வரலாற்று நாடகங்கள் என வரும்போது பாத்திரங்களை மட்டுப்படுத்துவது சில சம்பவங்களை சிறப்பாக வெளிப்படுத்துதலில் தாக்கத்தை ஏற்படுத்தும். இவை எல்லாவற்றையும் கருத்திற்கொண்டு குறித்தநேரத்தினுள் எடுத்துக் கூறவந்த சம்பவத்தை நிறைவு செய்வது மிகமுக்கியமானது.

இவற்றைப் பேணி இலங்கையில் அநுராதபுரத்தினை ஆட்சி செய்த **'எல்லாள மன்னன்'**, யாழ்ப்பாணத்தை ஆட்சிசெய்த **'சங்கிலிய மன்னன்'**, வன்னியை ஆட்சிபுரிந்த **'பண்டார வன்னியன்'**, இலங்கையை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆட்சிபுரிந்த **'இராவணேசன்'**, மாந்தையை ஆட்சிசெய்த **'அல்லிராணி'** ஆகியோரின் ஆட்சிக் காலத்தில் இடம்பெற்ற ஆவணங்கள் மூலமாகப் பெறக்கூடியதாகவிருந்த சிறுசம்பவங்களை மூலாதாரமாகவைத்து எனது பார்வையில் எழுதப்பட்டவையே **'மனவைரம்'**, **'விதி'**, **'துரோகம்'**, **'பெண்மை'**, **'சாபம்'** என்ற இந்த ஐந்து நாடகங்களுமாகும். இவற்றில் அல்லிராணியின் சரித்திரத்தினை அடிப்படையாக வைத்து எழுதப்பட்ட 'சாபம்' மூலப்பிரதிகளில் இருந்த சம்பவ விலகல்களால் கற்பனையும் கலந்து எழுதப்பட்டது. மற்றையவை வரலாற்றுடன் ஒருங்கிசைந்தே அமைந்துள்ளது.

கொழும்பு றோயல் கல்லூரியின் தமிழ்நாடக மன்ற வெளியீடான **'விம்பம்'** என்ற இதழில் எனது ஆக்கங்கள் முதன் முதலில் வெளிவந்த போது எனது நாடகங்கள் அனைத்தையும் நூலுருவாக வெளியிட வேண்டும் என்று தோன்றிய ஆவல், கன்னிப் படைப்பான 'பஞ்சாமிர்தம்' இலங்கை கலாசாரத் திணைக்களத்தின் திறந்த கையெழுத்துப்பிரதி எழுதும் போட்டியில் இரண்டாமிடத்தையும், 'சட்டத்தின் திறப்புவிழா' 2017ஆம் வருடத்திலும், 'பஞ்சாயுதம்' 2018 ஆம் வருடத்திலும், அரசவிருது வழங்கல் விழாவில் இறுதிச்சுற்றுக்குத் தெரிவு செய்யப்பட்ட மூன்று நாடகங்களில் ஒன்றாகத் தெரிவு செய்யப்பட்டு சான்றிதழ் பெற்றமை, மற்றும் இந் நாடகங்கள் வானொலியில் ஒலிபரப்பாகியபோது சமூக வலைத் தளங்களினூடாக நண்பர்கள், கலைஞர்கள், தயாரிப்பாளர்கள், அறிஞர்கள் பகிர்ந்து கொண்ட விமர்சனங்கள், இவை எல்லாவற்றிற்கும் மேலாக எமது தென்மராட்சி சங்கத்தானை பிரதேசத்தைச் சேர்ந்த பிரபல பாடகர், தொலைக்காட்சி பார்க்கும் திறனற்ற, இன்றும் இலங்கை வானொலி தமிழ்ச் சேவை நாடகங்களைத் தவறாது கேட்டுவரும் திரு. தம்பிஐயா என்ற இந்தப் படத்தில் காணப்படும் பெரியவர் 'விதி' நாடகம் ஒலிபரப்பாகிய போது மறவன்புலோ என்ற ஊர்ப்பெயரைக் கேட்டு, அங்குசென்று விசாரித்து, எனது தற்போதைய சாவகச்சேரி இருப்பிடத்தை





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கேட்டறிந்து வந்து நேரடியாகப் பாராட்டியமை போன்றவையே இவற்றையும் நூலுருவில் வெளியிட உந்துசக்தியாயமைந்தன.

எல்லாவற்றிற்கும் மேலாக ஆவணப்படுத்துதல் என்பது எவ்வளவு முக்கியமானது, அவசியமானது, பெறுமதியானது என்பதனை நாம் இன்று கண்கூடாகக் கண்டு அனுபவித்து வருகின்றோம். நாம் இவ்விடயத்தில் எவ்வளவோ பின்நிற்கின்றோம் என்பதனை முற்று முழுதாக ஏற்றுக் கொள்ளத்தான் வேண்டும். இதனால்தான் எவ்வளவோ பெறுமதியான எமது கலாசாரப் பொக்கிசங்களை, வரலாற்றுப் பொக்கிசங்களைத் தொலைத்து விட்டோம், இழந்துவிட்டோம். இழந்து கொண்டிருக்கின்றோம். சிதைய விட்டுக் கொண்டு இருக்கின்றோம். ஆம். இவை, எதுவுமே எழுத்து மூலம் நிரந்தரமாகப் பதிவாகியிருந்தால்தான் அவை காலங்களையும் எல்லைகளையும் கடந்து வாழும் என்ற உண்மையைப் புலப்படுத்தி நிற்கின்றன. இதுவும் எனது எழுத்துக்களை நூலுருவாக்க வேண்டும் என்ற எண்ணக்கரு தோன்றுவதற்கு மூல காரணமாய் அமைந்திருந்தது.

அதன் பிரகாரம் 'இயலாமை என்ற நிலைமை ஏற்படுவதற்கு முன்னரே ஊடாடித் திரியும் காலத்திலேயே இயன்றளவில் எனது எழுத்துக்களை ஆவணப்படுத்துதல்' என்ற எனது எண்ணக்கருவினை நிறைவேற்றும் அதேவேளை ஒவ்வொரு வெளியீட்டினையும் என்னைச் செதுக்கியவர்களுக்குச் சமர்ப்பணமாக்குதல் என்ற எனது அவாவின்படி பெற்றவரும் உடன் பிறந்தோரும், மனைவியும் மைந்தர்களும், உருவாக்கிய ஆசான்கள் என்ற வரிசையில் என்னை மரு(று)மகனாக ஏற்று மனைவாழ்வை மலர்ப் பஞ்சணையாக வாழ வழிகாட்டி எனக்கென ஒரு வரலாற்றினை உருவாக்க உரமாகநின்று தெய்வங்களாகிவிட்ட அன்புள்ளங்களுக்கு இந்த வரலாற்று நாடகங்களின் தொகுப்பினை சமர்ப்பணமாக்குவதில் மகிழ்வடைகின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்நாடகங்களுக்கு உயிரூட்டி உணர்வூட்டிய கலைஞர்கள், நாடகத் தயாரிப்பாளர்கள் எவ்வளவோ வேலைப்பளுவின் மத்தியிலும் மறுக்காது ஆசியுரை, வாழ்த்துரை, அணிந்துரை, அறிமுகவுரை போன்றவற்றை மனமுவந்தளித்த அறிஞர்கள், பெரியோர்கள் மற்றும் பலவிதத்திலும் உறுதுணையாகவிருந்த அனைத்து அன்புள்ளங்களுக்கும் நன்றிகூறி எனது மனவைரத்தில் வெளிவரும் 'மனவைரத்தை' உங்கள் முன் சமர்ப்பிக்கின்றேன்.

**நன்றி**

**அன்புடன்**

**உங்கள் அம்பலம்**

***11.12.2.018***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளே...




1. மனவைரம் - 03
[எல்லாளன்]

2. விதி - 25
[சங்கிலியன்]

3. துரோகம் - 57
[பண்டாரவன்னியன்]

4. பெண்மை - 89
[இராவணேசன்]

5. சாபம் - 115
[அல்லிராணி]



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 1. மனவைரம்


(அனுராதபுரத்திலிருந்து கி.மு 145 இலிருந்து கி.மு 101வரை 44 ஆண்டுகள் ஆட்சிபுரிந்தமன்னன் எல்லாளனின் வரலாற்றிலிருந்து)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 1. மனவைரம்

**நாடக மாந்தர்கள் :**

- **எல்லாளன்** – **அநுராதபுர மன்னன்**
- **நந்தசாரதி** – **எல்லாளமன்னனின் தளபதி**
- **கொடுமுடி** – **எல்லாளமன்னனின் ஒற்றர்**
- **மகாதேவி** – **கல்யாணி அரசின் இளவரசி**
- **கல்யாணிதீசன்** – **கல்யாணி அரசின் மன்னன்**
- **காக்கைவண்ணதீசன்** – **உருகுணையின் மன்னன்**

**காட்சி : 1**

**களம் : கல்யாணிதீசனின் அரண்மனை**

**மாந்தர்கள் : கல்யாணிதீசன், எல்லாளன், மகாதேவி , நந்தசாரதி**

(அனைவரும் ஒருமித்த குரலில் எல்லாளமன்னனை வரவேற்றுப் பாடுதல்)

பல்லாண்டு பல்லாண்டு பல்லாயிரம் ஆண்டு
பலகோடி நூறாண்டுகள்
நல்லோர்கள் துணைகொண்டு அநுராதபுரம் ஆளும்
மன்னவா நீ வாழ்கவே
கல்யாணி தனைக்காண களிப்போடுமே வந்த
மன்னனே நீ வருகவே
எங்களின் இராச்சியம் ஏகினாய் எல்லாள
மன்னனே நீ வருகவே
எங்களின் இராச்சியம் ஏகினாய் எல்லாள
மன்னனே நீ வருகவே

கல்.தீசன் : வரவேண்டும் மன்னவரே.. அநுராதபுரம் ஆளும் மன்னனே.. எல்லாள மன்னரே.. உம்மை இந்தக் கல்யாணி தேசத்து மக்களின் சார்பில் வரவேற்கிறேன். தங்கள் வருகையால் இந்த கல்யாணி அரசானது பெருமையடைகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லா : கல்யாணிதேசத்தைக் கண்போலக் காத்து நல்லாட்சி நல்கும் கல்யாணதீச மன்னரே.. மிக்க மகிழ்ச்சி மன்னவரே.. இந்தச் சந்தர்ப்பம் என்வாழ்நாளில் கிடைத்த பெரும்பேறாக எண்ணுகின்றேன். எனது அநுராதபுரத்து மக்களின் வாழ்த்தினையும் இந்தச் சந்தர்ப்பத்தில் தங்களுடன் மகிழ்வுடன் பரிமாறிக் கொள்ளுகின்றேன்.

கல்.தீ : எப்படி.? சேத்தியகிரி மகாதேரர் சௌக்கியமாக உள்ளார் தானே.?

எல்லா : ஆமாம் நலமாயுள்ளார் கல்யாணி தீசரே. மகாவிகாரை மகாதேரர் சுமங்கலரின் ஆசியுடன் இருமொழி விற்பன்னராகிய காசிபதேரர் அரச குருவானவராக அமைந்தது நான் செய்த பெரும் பாக்கியமே.

(மகாதேவி வருதல்)

மகாதே : (வந்து கொண்டு) அப்பா..!

கல்.தீ : வா.. மகளே மகாதேவி.. உன்னை அழைக்க வேண்டும் என்றிருந்தேன்.. நீயே வந்துவிட்டாய். அநுராதபுர மன்னர் எல்லாளன் எமது கல்யாணி இராச்சியத்திற்கு திக்விஜயம் செய்யவுள்ளதாகத் தெரிவித்திருந்தேன் அல்லவா.. இதோ அவரை அறிமுகப்படுத்துகிறேன் மகாதேவி.

மகாதே : நன்றி அப்பா.. வணக்கம் எலார மன்னரே...

எல்லா : நன்றி மகாதேவியாரே...

மகாதே : (தனக்குள்) ம்..ம்..ம்.. அநுராதபுரத்து மன்னர் இவ்வளவு இளமையும் அழகும் கம்பீரமும் கொண்டவராயிருப்பாரென நான் கனவிலும் நினைக்கவில்லை.. ஒரே பார்வையிலேயே..

கல்.தீ : (இடைமறித்து) என்னம்மா உனக்குள் முணுமுணுக்கிறாய்..

மகாதே : (தடுமாறி) அ..அது வந்து.. ஒன்றுமில்லையப்பா.. மன்னர் எலாரவைப்பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறேன்.. இன்று நேரில் காணும் போது.. அதுதான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ந.சார : (மனதுள்) ம்.. இப்படி ஒரு அழகு யௌவனமா..? முகத்தில் செந்நிறப் பொலிவும் நீண்ட விழிகளின் காந்த வீச்சும்... என்னை நிலைகுலையச் செய்கின்றனவே... எத்தனை களங்களைக் கண்டு பலவிதமான ஆயுதங்களைத் தடுத்து வெற்றி கொண்ட என்னை இந்த அழகுப் படைக்கலங்கள் மண்டியிட வைக்கின்றனவே... இது கனவோ அன்றி கற்பனையோ.. (தானாகவே முன்வந்து) ம்....ம்... நான்தான் பிரதம தளபதி நந்தசாரதி...

மகாதே : ஓ.... (ஏளனமாக).. ஆ.. அப்படியா.. சொல்லித்தான் தெரிய வேண்டியிருக்கின்றது பிரதம தளபதி என்று (சிரித்தல்)..

கல்.தீ : கோபம் கொள்ளாதீர் பிரதம தளபதி நந்த சாரதியாரே.. மகாதேவி அப்படித்தான், குறும்புக்காரி.. சூது வாது தெரியாதவள். ம்..(பெருமூச்சு விட்டு) என் எண்ணப்படி எல்லாம் காலாகாலத்தில் அமைந்து விட்டால் அனைத்தும் சரியாக வரும்.

ந.சார : (இடைமறித்து) அப்படி என்னவோ.. அதை நாமும் அறியலாமா மன்னவா..?

மகாதே : ஓ..(ஏளனமாக) இன்னொருவரைப் பற்றி அறிய அவ்வளவு ஆவலா..?

எல்லா : இளவரசி மகாதேவியாரே மன்னித்துக் கொள்ளுங்கள். எனது தளபதி எதிலும் அவசரக் குடுக்கை..

மகாதே : இவ்விடயங்களில் மட்டும் தானா..?

எல்லா : அதுவந்து இளவரசியாரே....

கல்.தி : (இடைமறித்து) பரவாயில்லை எல்லாளரே... அதைவிடும்.. அதுவந்து.. வந்து.. உருகுணையின் மன்னர் எனக்கு மருமகன் முறையினன். அதனால்தான் இராசகுமாரி மகாதேவியை மணம் முடித்துக் கொடுத்து அதனால் ஏற்படும் உறவின் மூலம் எதிர்காலத்தில் ஏற்படவிருக்கும் அனர்த்தங்களைத் தவிர்த்துக் கொள்ள விரும்புகின்றேன்.. அவ்வளவுதான்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லா : அதற்கும்.. இதற்கும்.. ஒன்றுமே புரியவில்லை கல்யாணி தீசரே..

கல்.தீ : உருகுணை மன்னரின் தந்தையார் காலத்தில் உருகுணையில் இருந்த அனைத்துச் சத்திரியர்களும் அழிக்கப்பட்டனர்.. தீகவாவி சிற்றரசன், சேரு சிற்றரசன்.. அனைவரும் உருகுணை மன்னனின் ஆட்சியினுள் அடங்கி விட்டனர். அடுத்த இலக்கு கல்யாணி அரசுதான்..

எல்லா : ஓ.. அப்படியா.. அப்போ அதற்கடுத்து..

கல்.தீ : (இடைமறித்து) இல்லை மன்னா.. அநுராதபுரத்தின் மீது படையெடுக்கும் தைரியம் உருகுணை மன்னனிற்கு ஒருபோதும் ஏற்படப் போவதில்லை...

மகாதே : (ஏளனமாக) அப்படியென்றாலும் உங்கள் தளபதி நந்தசாரதி தவிடுபொடியாக்கி விடுவாரே..

எல்லா : ஆம் இளவரசியாரே.. அது நூற்றுக்கு நூறு உண்மையே.. நந்தசாரதி இருக்கும் வரைக்கும் நமது இராச்சியம் பாதுகாப்பானது என்றே கூறத் தோன்றுகின்றது.

கல்.தீ : (இடைமறித்து.. இழுத்து) ஆனால் அநுராதபுர ஆ.. ட்..சி.. கல்யாணியை..

எல்லா : ஆனால் என்ன.....கல்யாணி தீசமன்னரே.. உமது சுதந்திரத்தில் ஒருபோதும் அநுராதபுரத்து ஆட்சி தலையிடாது. கல்யாணி ஒரு இறைமை உள்ள தனியரசு.. அதனை அநுராதபுரத்து அரசு அங்கீகரிக்கின்றது தீசரே... (சிரித்து) ஆனால் ஒன்று...

கல்.தீ : (இடைமறித்து) சொல்லுங்கள் எல்லாள மன்னரே.

எல்லா : செந்தாமரை போன்ற பேரழகியான உங்கள் அழகுச் சிலையை அந்தக் காக்கை வண்ணதீசருக்கு....

கல்.தீ : (இடைமறித்து) அதுசரிதான் எல்லாள மன்னா.. பெண்களுக்கு அறிவும் அழகும் தேவை.. ஆனால் ஆண்களுக்கோ.. தகுதியும் பலமும் தேவை.. அவை.. அவரிடம் உள்ளது..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகாதே : (மனதுள் பெருமூச்சுவிட்டு) ம்... எனது ஏக்கம் இவர்களுக்கு எங்கே புரியப் போகின்றது.. ச்சீ.. உங்களுக்கு.. போங்கப்பா..

கல்.தீ : மகளே..

எல்லா : விடுங்கள்.. அது தான் பெண்மை மன்னவா..

மகாதே : (சிணுங்கிக் கொண்டு) ம்... பொல்லாதவர்..

அனை : சிரித்தல்

........ காட்சி மாற்றம் .......

**காட்சி : 2**

**களம் : கல்யாணி நதிக்கரை**

**மாந்தர்கள் : மகாதேவி, நந்தசாரதி**

(ஆறுஓடும் சலசலப்பு)

மகாதே : (ஏளனமாக) என்ன தளபதி நந்தசாரதியாரே... தனிமையில்... நதிக்கரையில்... தன்னை மறந்து லயித்திருக்கின்றீரோ...

நந்த : (தடுதடுத்து) அது வந்து... வந்து... நீங்களா.. மகாராணியாரே.. இல்லை.. நீங்கள்.. இங்கு.. இல்லை... மகாதேவியாரே.. இல்லை.. இளவரசியாரே..

மகாதே : (சிரித்துக்கொண்டு) என்ன தளபதியாரே... வந்து போய்.. என புசத்துகிறீர்.. ஏதும் பித்தம் தலைக்கேறி விட்டதோ..

நந்த : (சுதாகரித்து) அப்படித்தான் வைத்துக் கொள்ளுங்களேன்.. அழகுப் பதுமையைக் கண்டதால் வந்த பித்தம். ம்.ம். தங்களைக் கண்டதால் வந்த பித்தம்..

மகாதே : (சிரித்துக்கொண்டு) ஆ..ஆ..ஆ.. அப்படியா.. என்ன அழகுப் பதுமையைக் கண்டதால் வந்த பித்தமா படைத்தளபதியாரே.. ம்... நல்லாய் இருக்கின்றது. (சிறிது கோபத்துடன்) படைத்தளபதி நந்தசாரதியாரே... முடவன் கொம்புத் தேனுக்கு ஆசைப்படலாமா... (பெருமையாக) இந்த மகாதேவி அரியணையில் அமரப் பிறந்தவள்.. நாட்டை ஆளப் பிறந்தவள்.. அதை நினைவில் வைத்திரும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நந்த : (ஆச்சரியத்துடன்) மகாதேவி...

மகாதே : நந்தசாரதியாரே... மகாதேவியல்ல.. இளவரசி.. ஆம்.. காக்கைவண்ணதீசரோ.. எலாரவோ... நாட்டை ஆள்பவர்களுக்கு மகாராணியாகப் பிறந்தவள். தளபதிகளுக்கு தலையை நீட்டவல்ல.. அதை மறந்திடாதையும் தளபதியாரே..

நந்த : நான் எண்ணியதே தப்பு மகாதேவியாரே.. மன்னித்துக் கொள்ளுங்கள்.

மகாதே : வந்த விருந்தினராயிற்றே என்று பார்க்கிறேன். அதுமட்டுமல்ல எலாரமன்னனின் தளபதியார் என்று பார்க்கிறேன்... (போய்க் கொண்டு) நான் வருகிறேன்..

....... காட்சி மாற்றம் ......

**காட்சி : 3**

**களம் : கல்யாணி நந்தவனம்**

**மாந்தர்கள் : மகாதேவி, எல்லாளன்**

(நந்தவனத்தின் சலசலப்பு)

எல்லா : என்ன அழகு... என்ன அழகு... சலசல என ஓடும் கல்யாணி கங்கை... அன்றலர்ந்த மலர்களைத் தழுவி வருவதால் நறுமணமுடைய இதமான தென்றல் காற்று.. கண்ணுக்கும் மனத்திற்கும் அமைதி தரும் மரம். செடி.. கொடிகள். (உயர்த்தி) ம்.. தென்னிலங்கை மன்னர்கள் இயற்கையை ரசிக்கத் தெரிந்தவர்கள் போலும்..

மகாதே : (சிரித்தல்)

எல்லா : என்ன இளவரசியாரே நீங்களா... அதுவும் தனிமையில்... இந்த நேரத்தில்...

மகாதே : (நாணத்துடன்) தோழிகளுடன் வந்தேன்.. தாங்கள் தனிமையில் இருப்பதையும் எனது மனநிலையையும் புரிந்து கொண்டு அவர்கள் சென்று விட்டார்கள்..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லா : அப்படியா இளவரசி...

மகாதே : (குழைந்து) தங்கள் தனிமையைக் குலைத்து விட்டேனா அரசரே... அப்படியாயின் மன்னித்துக் கொள்ளுங்கள் மன்னரே..

எல்லா : அவ்வாறில்லை இளவரசி. உங்கள் இந்த ஆற்றங்கரையில் மிக ரம்மியமான சூழலில் உங்களின் இயற்கையினுடனான உறவாடலை ரசித்துக் கொண்டிருக்கிறேன். இந்த நந்தவனம் மிக மிக அழகாக இருக்கின்றது இளவரசியாரே..

மகாதே : (இடைமறித்து) அநுராதபுரத்தில் இருப்பனவற்றை விடவா அரசே... அங்கே உள்ள மகாமேருவனத் தோட்டத்திற்கு ஈடிணையாக உலகிலேயே வேறு இல்லையென்றும் அநுராதபுரத்தில் செந்தாமரைத் தடாகங்களுக்கும், நீலோற்பவத் தடாகங்களுக்கும் எண்ணிக்கையே இல்லையென்றும் கேள்விப் பட்டிருக்கிறேன்.. அதுமட்டுமா தீச வாவிக் கரையில் அழகேயுருவான நந்தவனம் வேறு இருக்குதாமே.. அவற்றின் அழகுக்கு இந்தச் சிறிய நந்தவனம் இணையாகுமா எலார மன்னரே.. (சிரித்துக் கொண்டு) இக்கரைக்கு அக்கரை பசுமை தானே..

எல்லா : அப்படித்தான் எடுத்துக் கொள்ளுங்களேன். அநுராதபுரத்தைப் பற்றி இவ்வளவு தூரம் அறிந்து வைத்திருக்கின்றீர்கள். அங்கு வந்து பாருங்கள் அவற்றை.. எங்கள் விருந்தினராக எப்பொழுதும் வரலாம் மகாதேவியாரே..

மகாதே : (சோர்வுடன்) என்ன விருந்தினராகவா..?

எல்லா : ஆ..ஆ..ஆமாம் இளவரசி..

மகாதே : (பெருமுச்சுடன்) அப்படியாயின்.. விருந்தினராகவெனின் வேண்டாம் மன்னரே..

எல்லா : அப்படியாயின் எவ்வாறு வர விரும்புகின்றீர்கள் மகாதேவி...

மகாதே : அ.. து.. அது.. வந்து..

எல்லா : எப்படியென்றாலும் கூறுங்கள்... தயக்கமேன்..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகாதே : (ஏக்கத்துடன்) தங்கள் மனைவியாக..

எல்லா : (ஆச்சரியமாக) இளவரசீ..!

மகாதே : ஆம் எலாரமன்னரே.. நான்.. ஏதாவது தப்பாகப் பேசிவிட்டேனா..?

எல்லா : அப்படியல்ல.. ஆனால்.. நீங்கள்.. உங்கள் கோரிக்கை நியாயமானதா என்று..

மகாதே : (இடைமறித்து) நியாயமிருக்கிறது. நான் கல்யாண அரசின் இளவரசி. நீங்களோ அநுராதபுரம் ஆளும் மன்னர்.. பிறகென்ன.. உங்களை மணக்கும் தகுதி எனக்கிருக்கின்றது. எனது ஆசையில் கோரிக்கையில் நியாயமிருக்கின்றது. ஆம்.. மன்னவா..

எல்லா : ஆனால்.. எனக்கு.. எனக்கு உன்னை மனைவி ஆக்கும் தகுதியில்லை.. ஏற்கெனவே மணம் முடித்தவன்.. அரசதேவியின் கணவன்.

மகாதே : ஆ.. அதுவா.. நான் வேறெதுவோ என்று நினைத்து விட்டேன்.. (உரக்கச் சிரித்து) அரசகுலத்தில் எந்த மன்னன் ஒரு பெண்ணுடன் வாழ்ந்திருக்கின்றான்.. கூறுங்கள் பார்ப்போம்.. அதில் தப்பேதுமில்லை மன்னரே..

எல்லா : இருக்கலாம். ஆனால் அவ்வாறு இருக்க என்னால் முடியாது இளவரசி.. நான் ஏகபத்தினி விரதன்.. ஒருத்தனுக்கு ஒருத்தி என்று வாழவிரும்புபவன். (தயங்கி) அதுமட்டுமல்ல

மகாதே : தயக்கமேன்.. கூறுங்கள் என் இதயம் நிறை எலாரமன்னரே..

எல்லா : தங்கள் தந்தை உருகுணை மன்னனுக்கு உறுதியளித்திருக்கிறார் மகாதேவி..

மகாதே : (ஏளனமாகச் சிரித்து) அதுதான் தடையா.. பரவாயில்லை.. அதைநான் சமாளித்துக் கொள்ளுகிறேன். (பணிந்து) மறுக்காதீர்கள் மன்னவா.. உங்களைக் கெஞ்சிக் கேட்கிறேன்.. என்னை உங்களின் மனைவியாக ஏற்றுக் கொள்ளுங்கள் மன்னரே..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லா : பெண்ணே.. தகாத ஆசைகளை வீணாக வளர்க்காதே... மனதிலிருந்து அகற்றி விடு.. அவை வீணான விளைவுகளை விதைத்து விடும்..

மகாதே : (அழுது) இது தகாத ஆசையா அன்பரே.. மனம் விரும்பிய ஒருத்தனை மணக்க விரும்புவது தகாத ஆசையா..? உங்கள் மனச்சாட்சியைக் கேளுங்கள் மன்னவரே

எல்லா : பெண்ணே.. திருமணம் என்பது இரு மனங்களின் இணைப் பினாலானது.. இளவரசி.. உனது அழகிற்கும் அந்தஸ்திற்கும் எத்தனை அரச குமாரர்கள் போட்டி போட்டுக்கொண்டு வருவார்கள் தெரியுமா. என்னை மறந்து விடு.. என் மனைவி தன் கர்ப்பத்தில் என் குழந்தையைச் சுமந்து கொண்டிருக்கும் இந்நேரத்தில் என்னை இக்கட்டில் மாட்டி விடாதே..

மகாதே : (தழுதழுத்து) அப்படியானால்... என்.. என்.. என் ஆசை நிராசையா மன்னரே.. எனக்கு உங்கள் மனைவியாகும் பாக்கியம் கிடையாதா மன்னரே.. நான்.. நான்.. அநுராதபுர அரியாசனத்தில் உங்களுடன் அமரும் பாக்கியம் கிடைக்காதா அன்பரே.. உங்களுக்கு கருணையே கிடையாதா.. நான்.. நான்.. இந்தப்பேதை கோரிய ஒரே ஒரு வரத்தினை உங்களால் தரமுடியாதா எலார மன்னரே..

எல்லா : இளவரசி.. தயைகூர்ந்து என்னை மன்னித்து விடுங்கள்.. இதை மட்டும் கேட்காதீர்கள்.. வேறு எதை என்றாலும் கேளுங்கள்.. இதை என்னால் நினைத்துப் பார்க்கவே முடியாது..

மகாதே : இது தான் தங்கள் இறுதி முடிவா.. (உயர்த்தி) மா.. மன்னரே.. இது தான் தங்கள் இறுதி முடிவா..?

எல்லா : வேறு வழி தெரியவில்லை இளவரசி..

மகாதே : (கோபத்துடன்) எலாரா.. இரந்து கேட்பதனால் இளக்காரமாய் நினைக்கிறாயா.. என்னையா அலட்சியம் செய்தாய்.. ம்... நானும் பார்த்து விடுகிறேன்.. ம்.. அநுராதபுரத்தின் மாமன்னன் என்ற மமதையா.. எலாரா.. எந்த அரியணை என்னைத் துச்சமென



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மதிக்க உன்னைத் தூண்டியதோ அது நிலைக்கக் கூடாது. நான் அமராத அரியணையில் வேறொருத்தி அமரக் கூடாது.. மன்னரே.. மறந்து விடாதீர்.. (சென்று கொண்டு) இந்த மகாதேவி நினைத்ததைச் சாதிக்காமல் விடமாட்டாள். காலம் பதில் சொல்லும். காத்திரும் அது வரையில்.. நான் வருகிறேன்..

..... காட்சி மாற்றம் ......

**காட்சி : 4**

**களம் : அநுராதபுர அரண்மனை**

**மாந்தர்கள் : எல்லாளன், நந்தசாரதி, கொடுமுடி**

எல்லா : என்ன ஒற்றர் கொடுமுடியாரே.. உமது முகம் ஏதோ கூறுகின்றதே.. பரவாயில்லை.. இங்கு தளபதி நந்தசாரதி மட்டும் தான் இருக்கிறார். தயங்காமல் கூறும்.

கொடு : கல்யாணதேசத்து இளவரசி மகாதேவி காக்க வண்ணதீசனை மணந்து உருகுணை இராச்சியத்தின் பட்டத்து மகிஷியாக மகாதேவியை மன்னன் அறிவித்துள்ளானாம்..

நந்த : அது எப்படி.. காக்கைவண்ணதீசன் ஏற்கெனவே ஐஸ்வரியாவை மணந்து திக்கபாயன் என்ற மகனும் உள்ளானே..

எல்லா : தளபதி நந்தசாரதியாரே.. அதுவும் சரி (சிரித்து) இதுவும் எதிர்பார்த்தது தான்..

நந்த : அவளது அழகுக்கு.. ம். காக்கைவண்ணதீசனா..?

எல்லா : தளபதியாரே. அரச மணங்கள் அழகுபார்த்துத் தீர்மானிக்கப் படுபவை இல்லைத்தானே.

நந்த : அதுசரி மன்னரே.. ஏதோமனதில் பட்டதைச் சொன்னேன்.. அவ்வளவுதான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லா : (நகைத்து;) வேறொன்றுமில்லைத்தானே நந்தசாரதியாரே.. மணம் முடிப்பவர்களும் அவர்களைச்சார்ந்த இருபக்கத்தினரும் சம்மதித்தால் நமக்கென்ன..

கொடு : இல்லை மன்னரே.. இங்கு நடந்ததுவோ வேறு.. மிகப்பெரிய துரதிஸ்டம் கல்யாணிதீசனுக்கு ஏற்பட்டு விட்டது அரசே..

நந்த : பீடிகையை விடுத்து நடந்தவற்றைக் கூறும் கொடுமுடியாரே..

எல்லா : (நகைத்து) தளபதியாரின் அவசரத்தைப் பாரும் ஒற்றரே.. தகவல் பெறுவது என்றால் தளபதியார் பொறுமை காக்க வேண்டும்.

நந்த : (வேண்டா வெறுப்பாக) சரி ஏதோ கூறுங்கள்.

கொடு : கல்யாணிதீசனின் மனைவி மகாராணி சித்த தேவிக்கும், கல்யாணிதீசனின் தம்பி அய்ய உத்திகனுக்கும் கள்ள உறவு இருந்துள்ளது. அது மன்னனுக்குத் தெரியவரஅய்ய உத்திகன் பயந்து மலையதேசத்திற்குத் தப்பியோடி விட்டான்.

எல்லா : (நகைத்து) ம்.. நான் அன்றே அவர்களின் நடத்தையில் சந்தேகித்தேன்

நந்த : அப்படியாயின் மகாராணி சித்ததேவிக்கு என்ன நடந்தது... ஒழுக்கநெறி தவறியவர்களைக் கழுவேற்றி இருக்க வேண்டும்.

கொடு : ஆம். ஆனால் அங்குதான் தவறுநிகழ்ந்து விட்டது தளபதியாரே.. இதற்கு மகாதேரரும் உடந்தையென தவறாகமுடிவெடுத்து மகாதேரர் அரித்தரதும் சித்ததேவியினதும் சிரசைக் கொய்து சமுத்திரத்தில் உடல்களை வீச மன்னன் உத்தரவிட்டு விட்டான்.

நந்த : அப்புறம்..

கொடு : அப்புறம்தான் சமுத்திராதேவி கோபம்கொண்டு பொங்கி எழுந்து கட்டுக்கடங்காமல் ஆர்ப்பாட்டம் செய்து வானத்தை முட்ட தனது அலைகளை மோதவிட்டு நகரையே துவம்சம் செய்தாள்..

எல்லா : தீரவிசாரிக்காமல் செய்ததன் வினை..ம்..பிறகு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொடு : சுமங்கலதேரரின் ஆலோசனைப்படி சமுத்திரா தேவியின் கோபத்தை அடக்கி நாட்டை அழிவிலிருந்து காப்பாற்ற இளவரசி மகாதேவியை கண்ணீரும் கம்பலையுமாக பொன்னும் பொருளும் பட்டும் நிரப்பி அலங்கரித்த படகொன்றில் ஏற்றி கடலில் விட்டு விட்டார்கள்.

நந்த : இது என்ன அநியாயம்.. தகப்பன் மற்றும் தாய் செய்த தவறுக்கு ஒன்றும் அறியாத இளவரசியாரைக் கடலில் தள்ளுவது எப்படி நியாயமானதாகும்

எல்லா : ம்..

நந்த : அப்புறம்.. சமுத்திரம் தணிந்ததா.. இளவரசி என்னவானாள்.

எல்லா : அதைத்தான் ஒற்றர் கொடுமுடி ஏற்கெனவே சொல்லி விட்டாரே..

கொடு : ஆம் மன்னா.. சமுத்திரத்தாய் இயற்கையாகவே அடங்கி விட்டாள். இளவரசியாரை ஏற்றிய கலம் பவுத்திரமாக உருகுணையின் மகாகமத்தின் கரையில் லங்காவிகாரையின் அருகில் கரை ஒதுங்கியது. தகவலறிந்து அங்கு சென்றான் காக்கைவண்ணன்..

...... காட்சி மாற்றம் .....

**காட்சி : 5**

**களம் : உருகுணை கடற்கரை**

**மாந்தர்கள் : காக்கைவண்ணன், மகாதேவி**

(கடலலைச்சத்தம் சனங்கள் கதைக்கும் ஒலி)

கா.வண் : ம்.. ஆ.. படகினில் இவள் ஒரு அரசகுமாரி என்று எழுதப் பட்டிருக்கிறது. ம்... அவளோ அழகுப் பதுமையாகத் தோற்றமளிக்கின்றாள் (பதிந்த குரலில்) பெண்ணே.. அம்மா.. பெண்ணே.. நீ.. யாரம்மா..?

மகாதே : ஆ.. நா.. நா.. (தழுதழுத்து) நா.. நான்.. எங்கே இருக்கின்றேன். ஐயா.. நீங்கள்..


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கா.வண் : கலங்காதே பெண்ணே.. நான்.. நான்.. உருகுணை மன்னன் காக்கைவண்ணன். பயப்படாதே அம்மா.. நீ தற்போது இருக்குமிடம் லங்காவிகாரை அம்மா.. நீ.. வந்து.. வந்து நீ யாரம்மா..?

மகாதே : நான்.. நான்.. கல்யாணிதீசனின் மகள்.. மகாதேவி..

கா.வண் : (சந்தோசத்துடன்) ஆ.. என் மாமன் மகள்.. நான் தேடிய சொத்தை சமுத்திரத்தாய் என்னிடத்திலேயே பவுத்திரமாகக் கொண்டு வந்து சேர்த்திருக்கிறாள்..

மகாதே : (தடுக்கி) ஆ..

கா.வண் : ஆ... பவுத்திரமாக.. வா..வா அம்மா.. வா இளவரசியே.. ம். வா மகாதேவி.. ஆ.. இப்படி.. வா.. பவுத்திரமாக இறங்கிவா.. இந்த உருகுணைமண்ணில் பவுத்திரமாக அடியெடுத்து வையம்மா.. (இறங்குதல்)

மகாதே : சரி..

கா.வண் : (சந்தோசமாக).. என் மாமன் மகள்.. நான் தேடிய சொத்தை சமுத்திரத்தாய் என்னிடத்திலேயே கொணர்ந்து சேர்த்திருக்கின்றாள் ம்.. விதி.. ஆனால்.. நான் பாக்கியசாலி..

மகாதே : அரசே..

கா.வண் : ஆம்.. இளவரசி.. மகாதேவி.. உண்மையைத் தான் கூறினேன்.. என் வருங்கால பட்டத்து ராணியே. இந்த உருகுணை மண்ணில் பாதங்களைப் பார்த்து பதியம்மா (இறங்குதல்).

மகாதே : (ஆச்சரியத்துடன்) மன்னா !

கா.வண் : ஆம்.. என் வருங்கால பட்டத்து ராணியே.. வா.. எனது.. சீச்சீ.. எமது.. அரண்மனைக்குச் செல்வோம்..

மகாதே : (மகிழ்வுடன்) மகிழ்ச்சி மன்னரே..

கா.வண் : (சந்தோசத்துடன்) மகாசனங்களே.. இவள் என் மாமன் மகள்.. கல்யாணி அரசின் இளவரசி.. மகாதேவி.. லங்காவிகாரைக்கு அருகில் கரைசேர்ந்த கன்னி.. மகாதேவி.. ஆம்.. அதனால் இன்றுமுதல் விகாரமகாதேவி எனப் பெயர் பெறுவாள்..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்குரல்கள் (சனங்கள்): விகாரமகாதேவி... விகாரமகாதேவி... விகாரமகாதேவி

கா.வண் : அத்துடன் நான் இவளை மணம் செய்து உருகுணை இராச்சியத்தின் பட்டத்து மகிசியாக்குகிறேன் என்பதனையும் புனித சங்கத்தினருக்கும் உங்களுக்கும் அறியத்தருகிறேன்.

மகாதே : (சந்தோசத்துடன்) நன்றி காக்கைவண்ண மன்னரே... நான் எதிர்பாராதது.. ஆனால் ஏங்கியது... இன்று நிஜமாகியுள்ளது.. மிக்க மகிழ்ச்சியடைகின்றேன். உண்மையிலேயே இன்றுதான் நான் பிறந்ததன் பலனை அடைவதை உணர்கிறேன்.

கா.வண் : வா தேவி வா.. இப்படி.. இப்படி.. வா..

மகாதே : மன்னா..

கா.வண் : இருவரும் ஒன்றாக எனது இரதத்தில் அரண்மனை செல்வோம்.. (சனங்கள் கதைக்கும் கலையும் ஒலி)

....... காட்சி மாற்றம் ....

**காட்சி : 6**

**களம் : உருகுணை அரண்மனை**

**மாந்தர்கள் : காக்கைவண்ணன், மகாதேவி**

மகாதே : (வாந்தியெடுத்தல்) மன்னரே... என் பிராண நாதா..

கா.வண் : (சந்தோசத்துடன்) கூறு தேவி. வாந்தியெடுத்துக் களைத்திருப்பாய். கொஞ்சம் ஓய்வெடு.. நம் புதல்வன் கருவினிலேயே படு சுட்டிபோல..

மகாதே : என்ன இருந்தாலும் அந்த எலார மன்னனிடமிருந்து அநுராதபுர ஆட்சியைக் கைப்பற்றி அம்மாவை அரியணையேற்றும் செல்வனல்லவா..? என் அபயனல்லவா.. என் மன வைரத்தைக் கருவினிலேயே அவன் அறிய வேண்டும். அப்போது தான் கருத்துச்சிதறாமல் வளருவான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கா.வண் : அப்படியேதான் வைத்துக்கொள்வோமே.... தற்போது மசக்கை காலமல்லவா.. முதலில் உன் உடம்பைக்கவனி தேவி.

மகாதே : (கெஞ்சும்குரலில்) நாதா.. என் பிராணநாதரே.. தங்களிடம் ஒன்று கேட்க...

கா.வண் : (இடைமறித்து சந்தோசத்துடன்) தேவி.. உனக்கு என்ன வேண்டும்.. தயங்காது கேள்.. கருவுற்றிருக்கும் பெண்ணிற்கு அக்கால வேளையிலே விசித்திரமான ஆசைகள் தோன்றுமாம் கேள்விப்பட்டிருக்கிறேன்.. தயங்காதே.. கேள் தேவி.. நிறைவேற்றக் காத்திருக்கின்றேன்.

மகாதே : (கெஞ்சும்குரலில்) நாதா.. பெருந்தொகையான பிக்குகளும் அருந்தி நானும் அருந்தக் கூடியதாக பெரியதோர் தேன்அடை வேண்டும் மன்னவா...

கா.வண் : (சந்தோசத்துடன்) அட இதுவா.. அதற்கென்ன தேவி.. உடனடியாகவே ஏற்பாடுசெய்கின்றேன்.

மகாதே : (கெஞ்சும்குரலில்) நாதா.. அதுமட்டுமல்ல என்னவரே..

கா.வண் : (சந்தோசத்துடன்) சொல்லுங்கள்..

மகாதே : (கெஞ்சும்குரலில்) நாதா.. அந்த.. அந்த.. எலாரமன்னன் ஆளும் அநுராதபுரத்து தாமரைப் பொய்கைகளில் வாடாத தாமரைப் பொய்கைகளில் குறிப்பாக மேற்குவாயில் பொய்கையில் வாடாத தாமரை மலர்கள் காடாகச் சிலிர்த்துக் கிடக்கின்றனவாம்... அவற்றினைப் பறித்து மாலையாக நான் அணிய வேண்டும். ஆம் (மனதுக்குள்) மணமாலையாகச் சூடமுடிய வில்லை ஆனால் மசக்கைமாலையாகச் சூடி மகனின் மனதுள் விதைக்க வேண்டும்..

கா.வண் : (சிரித்தபடி) இதுவா..ம்.ம்.ம் உடனடியாக என் நம்பிக்கைக்குரிய தளபதி வேலுசுமணவை அனுப்பி தேவையான மலர்களைப் பறித்து வரச்சொல்லுகின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகாதே : வேலுசுமணவா.. நல்லது நாதா.. (மனதுள்) இன்று மலர்பிடுங்க.. பின்பு மன்னரைப் பிடுங்க.. என் மனவைரம் எனக்கல்லவா தெரியும்..

கா.வண் : ஆம் வேலுசுமணவே தான்.. மிகவும் நம்பிக்கையானவன்.. ம்.ம்.. அவன் பறித்துவரும் மலர்களைக் கோர்த்து மாலையாக்கி நீ அணிவதால் பிரகாசிக்கும் உன் எழிலை நான் பருகுகின்றேன்.

மகாதே : (கொஞ்சம் ஆணவமாக) அதற்கென்ன.. எனது எழில் உங்களுக்கானது.. தாராளமாகப் பருகுங்கள்.. அதற்குத்தான் தடையேதும் இல்லையே.. (தாழ்ந்து) ஆனால். நான் பருகுவதற்கு எனக்கும் ஒன்று வேண்டும் அன்பே..

கா.வண் : (இடைமறித்து) சொல் அன்பே.. சொல்.. உனக்கில்லாததா..

மகாதே : (தயங்கி).. வந்து.வந்து.. (திடீரென உயர்த்தி) எல்லாள மன்னனின் படைத்தளபதி நந்தசாரதியின் தலையைச் சீவிய இரத்தம் தோய்ந்த வாளினைக் கழுவிய நீரை நான் அருந்த வேண்டும்.. என் உதரத்திலுள்ள புதல்வனுக்கும் அவ்வுதிரம் போய்ச்சேர வேண்டும். அப்போது தான் என் மனவைரம் அவனுக்குள் புகும்.. கருவிலேயே ஊறும்.. பின்பு.. அந்த மதிகெட்ட எலாரவிற்கு என்னை யாரென்று புரியவைப்பான். ஆம்..

கா.வண் : (ஆச்சரியத்துடன்) தேவி நீங்களா.. நம்ப முடியவில்லையே அம்மா....

மகாதே : ஆம் மன்னா... நானேதான் (திமிராக) இவற்றை நிறைவேற்ற முடியுமென்றால் நிறைவேற்றுங்கள்.. இப்படியான காரியத்தை ஆற்றக் கூடிய வீரர்கள் உங்களிடம் இல்லையா.. பத்து மாபெரும் மல்லர்களையும் மாபெரும் சேனையையும் எதற்காக வைத்திருக்கிறீர்கள். அந்த திமிர் பிடித்தவனுக்கு அப்போது தான் நல்லபாடம் படிப்பிக்கலாம்.. ஆம்..

கா.வண் : (ஆச்சரியத்துடன்) சீலமே உருவான நீயா மகாராணி இப்படிக் கேட்பது.. ஊர்கள்தோறும் எத்தனை விகாரைகளை நிறுவியிருப்பாய்.. சீல வாழ்க்கையை மேற்கொண்டு தினமும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புத்தபிக்குகளுக்கு தானம் செய்யாது உணவருந்த விரும்பாத நீயா இப்படி குரூர ஆசை கொண்டிருக்கிறாய்.. (கெஞ்சி) வேண்டாம்.. வேண்டாம் தேவி.. இப்படியான ஆசை இவ்வேளையில் வேண்டாம். இந்த ஆசையை மட்டும் விட்டு விடு..

மகாதே : (ஆணவமாக) அது சீல வாழ்க்கை.. இது மனவைரம்... தங்களால் இயலாது என்றால் விடுங்கள். (ஏளனமாக) ம்.. மனைவியின் சாதாரண மசக்கை ஆசையைக்கூடத் தீர்த்து வைக்க முடியாத கணவனுக்கு... ம்...ம்... இல்லை.. மன்னனுக்கு வாழ்க்கைப்பட்டேனே.. என் மனவைரம் புரியாதவருக்கு வாழ்க்கைப்பட்டேனே என்று என் மனச்சாட்சி உறுத்தும்.. என் அப்பா இப்படி ஒரு பயந்தாங்கோளை எனக் கருவிலிருக்கும் மகன் சிரிப்பான். வேறென்ன..

கா.வண் : (கவலையுடன்) உன் சொற்களால் என்னைச் சுடாதே... வதைக்காதே மகாராணி.. உனக்காகவே என் வாழ்வு.. உன் ஆசை.. உன்ஆசை.. ஒரு போதும் நிராசையாகாது.. நான்.. நான் (தழுதழுத்து) நிச்சயம் நிறைவேற்றுவேன்.. இது.. என் மேல் ஆணையம்மா..

...... காட்சி மாற்றம் ......

**காட்சி : 7**

**களம் : அநுராதபுர அரண்மனை**

**மாந்தர்கள் : எல்லாளன், கொடுமுடி**

(ஏறத்தாழ 40 வருடங்களின் பின்பு)

கொடு : மன்னா.. எல்லாள மன்னா..

எல்லா : கூறும் ஒற்றரே..

கொடு : வரலாற்றில் இல்லாத ஒன்று.. ஒரு சைனியத்துடன் கூட ஒரு பெண்ணும்..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லா : (இடைமறித்து) சற்றுப் புரியும்படியாகக் கூறும் கொடுமுடியாரே...

கொடு : எல்லாளமன்னனே.. உருகுணைப் படையுடன் மன்னன் காமினியுடன் சேர்ந்து மறைந்த மன்னன் காக்கவண்ண தீசனின் பட்டத்து மகிசி விகாரமகாதேவியும் அநுராதபுர யுத்தத்திற்கு புறப்பட்டுள்ளாராம் மன்னவா..

எல்லா : நகைத்து ம்.. அப்படியா சங்கதி நல்லது.. (மனதுள்) பெண்ணே இன்னும் உன் மனவைரம் குறையவில்லைப் போலும். ம்.. ஏறத்தாழ நாற்பது வருடங்களுக்கு முன்பு மதிகெட்ட நீ.. உன் மசக்கை ஆசை என்ற பெயரில் ஒன்றுமறியாத தளபதி நந்தசாரதியை வஞ்சகமாக வேலுசுமண மூலம் சிரச்சேதம் செய்து அவன் பச்சை இரத்தத்தை அருந்தியும் உன் மனவைரம் தணியவில்லையா..? அன்று அவன் உன்மேல் ஆசைப்பட்டதனால். அந்தநிலை என்றிருந்தேன். இன்று.. ம்.. நீ ஆசைப்பட்டது கிடைக்காததால்.. நீயே அடைய.. இல்லை இல்லை அழிக்கப் புறப்பட்டு விட்டாயா... அவ்வளவு கல்நெஞ்சம் கொண்டவளா.. உன் மனவைரம் அவ்வளவு வலிமையானதா... சண்டாளி.. யுத்தம் நடப்பது உறுதி.. யுத்தம் என்று வந்துவிட்டால் ஒருவர் வெல்வதும் மற்றவர் வீழ்வதும் சகசம் தானே.. ஆனால் இங்கோ நீ.. பேராசைக்காரி.. தனி ஒருவளின் மனவைரத்திற்காக ஒன்றுமறியாத பொதுமக்கள். அவர்கள் என்ன பாவம் செய்தார்கள் இருபுறத்திலும் எத்தனை உயிர்களோ.. எத்தனை பாலகர்கள் தம் தந்தையை இழந்து அநாதைகளாகப் போகிறார்களோ..? தாய்மார் தம் புத்திரர்களை இழக்கப்போகிறார்களோ..? விதவைகள் எத்தனைபேரோ..? கடவுளே.. (பெருமூச்சு விட்டு) ஏதோ நடப்பது நன்றாகவே நடக்கட்டும்.. அவரவர் விதி....

கொடு : மன்னா ஒன்றும் புரியவில்லையே..

எல்லா : தற்போது புரியாது தான்.. காலம் புரிய வைக்கும் ஒற்றரே....

..... காட்சி மாற்றம் ......



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காட்சி : 8

களம் : அநுராதபுர அரண்மனை

மாந்தர்கள் : எல்லாளன், கொடுமுடி

கொடு : மன்னா ! நான்கு மாதங்களாக நெருங்கமுடியாதிருந்த அம்பதீர்த்தக் கோட்டை படைத் தளபதி தித்தம்பனின் பெண்சபல புத்தியினால் அனைத்தும் தவிடு பொடியாகியது மட்டுமல்ல.. இன்று யுத்தம் இறுதிக் கட்டத்தை (தழுதழுத்து).. ஐயோ நாக் கூசுகின்றதே.... தனிச்சமருக்கு நெருங்கிவிட்டது மன்னா....

எல்லா : சகலதும் அறிந்தேன் கொடுமுடி.. ம்... (தனக்குள்) அவள் எவ்வளவு மனவைரம் கொண்டவள் என்பது நானறிந்தது.. நாடறிந்தது.. ஆனால் இப்படிச் செய்யவும் துணிந்தாளே.... சீ எப்படி மனம்வந்தது.. வருடங்கள் நாற்பது கடந்து மனவைரம் தணிவதற்குப் பதிலாக வலிமை பெற்றல்லவா வருகின்றது.. அடி பாவிப் பெண்ணே...

கொடு : மன்னா என்ன கூறுகிறீர்கள் மன்னா...

எல்லா : இல்லை.. அது வந்து... அன்று நந்தசாரதி.. இன்று தித்தம்பன்...ம்.. அவளது மனவைரம்.. வாழ்வதும் சாவதும் சகசம் தானே.. (பெருமூச்சு விட்டு) ஏதோ நடப்பது நன்றாகவே நடக்கட்டும்.

கொடு : மன்னா.. இன்னொன்று தனிச்சமருக்கு நீங்கள் செல்வது அநேகருக்கு உடந்தையில்லை. நீங்களோ வயோதிபர்.. உருகுணை மன்னன் இளைஞன்..

எல்லா : (தாழ்ந்து) என்வீரம் மீது உனக்கும் ஐயம் ஏற்பட்டு விட்டதா கொடுமுடி..

கொடு : (அழுதழுது) மன்னா..அப்படி இல்லை மன்னா.. தனிச் சமருக்கான அழைப்பில் ஏதும் வஞ்சகம் இருக்கலாம். அதனால்தான்.. தனது தம்பி சத்தாதீசனையும் இப்படித்தான் அவர்கள்..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லா : (இடைமறித்து) கொடுமுடீ.. சூதோ வாதோ வஞ்சனையோ.. எதுவாகிலும் மன்னனாக இருக்கும்போது நேருக்கு நேர் சமருக்கு அழைக்கும் போது பேடிபோல ஒதுங்கி இருப்பது வெட்கமில்லையா.. காமினி தன் வீரத்தின் மீதுள்ள நம்பிக்கையால் எனக்கொரு சந்தர்ப்பம் அளித்துள்ளான்.. அவன்கரத்தால் என் மரணமோ.. அன்றி என்கரத்தால் அவனோ..

கொடு : (இடைமறித்து) மன்னா.. அப்படிச் சொல்லாதீர்கள். உருகுணை மன்னனின் தாய் வஞ்சகப்புத்தி கொண்டவள்.. ஏ..தேனும்..

எல்லா : (இடைமறித்து..சிரித்து) ஒற்றனே... சகலதும் உன்னைவிட நானறிவேன்... நாளை அதிகாலை தனிச்சமர் நடப்பது உறுதி.. கொடுமுடி.. இது அநேகமாக எமது இறுதிச் சந்திப்பாகவும் அமையலாம். (தனக்குள்) அவளது இறுதி ஆசையாகவும் அமையலாம்.

கொடு : (அழுதழுது) மன்னா.. எல்லாள மன்னா.. எல்லாள மன்னா. வெற்றி நிச்சயம் மன்னா..

...... காட்சி மாற்றம் ....

**காட்சி : 9**

**களம் : அநுராதபுர அரண்மனை**

**மாந்தர்கள் : எல்லாளன், மகாதேவி**

(வாள்சண்டை நடைபெறுகின்றது. யானையின் பிளிறல்களும் பின்னணியில் இசைக்க)

மகாதே : (தனக்குள்) ம்.. எலாரா.. எழுபது வயதிலும் உன்கரங்களிலே இவ்வளவு வலிமையா.. வாள்வீசும் லாவகம்.. கேடயத்தால் தடுக்கும் லாவகம்.. வேலெறியும் (தடுமாறி) எங்கே.. எங்கே... என்... என்மகன்... மகன் காமினி ஈடுகொடுப்பானோ தெரிய வில்லை.. ஆ.. ஆ.. அவனும் ம்.... சளைத்தவனில்லைத்தான்.. (ஆணவத்துடன்) நடவாது.. நான் கருவிலிருந்தே ஊட்டி வளர்த்தவனில்லையா..என் மனவலி.. அதனால் ஏற்பட்ட


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனவைரம்.. அனைத்தையும் சேர்த்து பாலூட்டி வளர்த்தவன் அல்லவா.. என் மனோவலி.. ம்.. ம்.. ஆ.. (தடுமாறி) ஆ..ஆ.. அதோ இல்லை.. காமினி.. இல்லை என் மகன் காமினி பின்வாங்குகின்றானா.. அப்படியிருக்க முடியாது.. எலாரா !.. என்னை ஏற்பதற்கு இந்த இராச்சியம் தானே உனக்குத் தடையாக இருந்தது. உன்னுடன் சேர்த்து இந்த அநுராதபுரத்து அரியணையில் அமர.. எலாரா.. நீ.. ஆம்.. இவள் இந்த சமுத்திரமகள் விகாரமகாதேவி.. அதைமறவாதே.. என் மனவைரம் புரிகின்றதா.. விடமாட்டேன்.. இது.. எப்படி.. அங்கே.. மன்னர்களைப் போலவே யானைகளும் ஒன்றுக் கொன்று சளைத்தவையில்லைத்தான். மகாபர்வதனும் கண்டுவனும்.. ஒன்றுக்கொன்று விட்டுக்கொடுப்பதாயில்லை.. முரண்டுபிடித்து மூர்க்கமாகப் பொருதுகின்றனவே... ஊ.. ஆ..ஆ.. காமினி.. கவனம் பார்த்து... அதோ.. மகன் தோற்கப் போகிறானோ.. சீ விடமாட்டேன் காமினி.. பார்த்து.. (வெளியே வந்து கத்துதல்) எலாரா.. (எதிரொலி)..ஆ..ஆ..ஆ.. மகாராஜா எலாரா.. இவன்..அவன்.. என்மகன்.. என்மகன் காமினி..

எல்லா : அ.... இது (கவனத்தைத்திருப்ப காமினி வேலை வீச எல்லாளன் யானையிலிருந்து விழுந்து இறக்கின்றான்)

எல்லா : ஆ..ஆ..அம்மா..(வேதனையில்) நீ....யா... ம..ம..மகா..தேவி... நீ..நீயா...என்..என்.. கவனத்தைத்... திருப்பியது.. பாவி..நீ.. உன்.. உனது.. ம..ன..து.. மனவைரம்.. ம்..ம்.. இவ்.. வ்..வளவு வலிமையானதா.. ம..கா..தேவி.. பாவி..நீ.. நீ.. உனது.. உனது.. ம..ன..வை..ர..ம்.. வெ..ன்..று..விட்டது.. நீ வென்று விட்..டாய்.. நீ..ஆ..அ..அ..ம்..ம்..மா..ஆ (இறத்தல்)சோகஇசை.....

...... நிறைவு ......

(கி.மு 145 இலிருந்து கி.மு 101 வரையான காலப்பகுதியில் அநுராதபுரத்தில் இடம்பெற்ற நிகழ்வின் ஒருபக்கம்)

(இலங்கை ஒலிபரப்புக்கூட்டுத்தாபன தமிழ்ச்சேவையில் 13.12.2012 ஒலிபரப்பப்பட்டது)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2. வி தி

(யாழ்ப்பாணத்தை நல்லூரிலிருந்து 1519முதல் 1561வரை ஆட்சிபுரிந்த மன்னன் சங்கிலி செகராசசேகரனின் வரலாற்றிலிருந்து)







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



| | | |
|---|---|---|
| அரசதேவி | - | சுரனுதா |
| மன்னன் முதலாம் சங்கிலி | - | வேதநாயகம் |
| யோக்கிம் பெர்னாண்டோ | | |
| தளபதி கனகராஜன் | - | சர்வானந்தா |
| இளவரசன் பரராசசிங்கன் | - | தக்கீசன் |
| பரநிருபசிங்கன் | - | அம்பலவாணர் |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உ. விதி

**நாடக மாந்தர்கள் :**

- **சங்கிலியன்** – **முதலாம் சங்கிலி – ஏழாம் செகராசசேகரன் யாழ்ப்பாணத்தினை கி.மு 1519.முதல் 1561 வரை ஆண்ட மன்னன்**
- **அரசதேவி** – **சங்கிலி மன்னனின் பட்டத்துராணி**
- **பரநிருபசிங்கன்** – **சங்கிலியனின் அண்ணன், பட்டத்து இளவரசன், மகாமந்திரி**
- **பரராசசிங்கன்** – **பரநிருபசிங்கனின் புதல்வன்–இளவரசன்**
- **கனகராஜன்** – **சங்கிலிமன்னனின் உயிர்நண்பன் ஒற்றர்படைத் தலைவன்**

**காட்சி : 1**

**களம் : யாழ்ப்பாணம் பண்ணைத்துறைக் கடற்கரை**

**மாந்தர்கள் : சங்கிலி, கனகராஜன்**

(கடலலைகளின் ஒலியும் இடையிடையே தனி நரி ஊளையிடும் சத்தமும்)

கனக : இளவரசர் சங்கிலியனே.. என்ன பலமான யோசனை.. பண்ணைக் கடலலைகள் உங்களைக் கண்டு ஆர்ப்பரிக்கின்றனவா.. அன்றி (பதிந்து) தங்களின் மனக் குமுறலை வெளிக் காட்டுகின்றனவா..!

சங்கி : உண்மைதான் கனகராஜா.. என் உயிர் நண்பனாகவும் இந்த யாழ்ப்பாண அரசின் வலிமைமிகு ஒற்றனாகவும் இருக்கும் உன்னிடம் மறைக்க முடியுமா.. ஆம் நீ கூறுவது இரண்டும் உண்மைதான்..

கனக : இளவரசே..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சங்கி : (இடைமறித்து) ஆம் நண்பா.. என்னிதயத்தில் கொழுந்து விட்டெரியும் தீயை இந்தப் பண்ணைக் கடலின் ஆரவாரம் தூண்டுகின்றது என்றே எண்ணத் தோன்றுகின்றது..

கனக : நண்பா...

சங்கி : ஆம்.. கேள் கனகராஜா.. இந்துசமுத்திரத்தின் முத்து என்ற இந்தக் குபேரதீவின் வடபாலுள்ள யாழ்ப்பாணம் என்ற இந்தச் சிறிய குடாப்பிரிவினை பெயருக்கு எனது தந்தையார் பரராசசேகரன் ஆண்டு வருகின்றார். தெற்கே வன்னியர்கள்... அவர்கள் திறைசெலுத்தாமல் அடிக்கடி கிளர்ச்சி செய்து கொண்டிருக்கிறார்கள் அதுமட்டுமல்ல தீவுகளின் கால்நடைகளைக் கொள்ளையடித்து பறங்கியருக்கு அவைகளை விற்றும் வருகின்றனர்.

கனக : அதற்கு..?

சங்கி : அதற்கும் அப்பால் சிங்கள மன்னர்கள். தென்னிலங்கையில் போர்த்துக்கேயப் பறங்கிகள் கோலோச்சுவதுடன் தீவைச் சுற்றியுள்ள சமுத்திரத்தில் வியாபாரக் கப்பல்களுடன் மதத்தைப் பரப்பவும் நாட்டைப் பிடிக்கவும் ஆலாய் அலைகின்றார்கள்.

கனக : அதற்கும் இதற்கும்..

சங்கி : ஆம். இவற்றை அடக்க வேண்டுமென்றோ... படைப் பலத்தை அதிகரிக்க வேண்டுமென்றோ மன்னருக்கு அக்கறையில்லை. ஆட்சிக்கு உரியவர்களும் ஏனோ தானோ என்று இருக்கின்றார்கள்.

கனக : ஆ.. அவ்வளவுதானா..?

சங்கி : ஆனால் எனது முன்னோர்களான ஆரியச் சக்கரவர்த்திகள் போல இந்த யாழ்ப்பாண இராச்சியத்தை மாற்றவேண்டுமென நான் கனவு காண்கிறேன். ஆனால் விதி..

கனக : என்ன இளவரசே விதி என்கிறீர்கள்...?

சங்கி : ஆம்... இந்த இராச்சியத்துக்கு உடையவன் பரநிருபசிங்கர் அன்றேல் அவரது மூத்தபுதல்வன் மகன் பரராசசிங்கன் தானாம் நானல்லவாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கனக : அப்படி யார் கூறினார்கள் இளவரசே...

சங்கி : கூறியது வேறுயாருமில்லை.. என்னைப் பெற்றவள் தான். அதுதான் மன்னர் பரராசசிங்கத்தின் மூன்றாவது மனைவி மங்கத்தம்மாள். ம்... நான் வைப்பாட்டி பிள்ளையாம்.. அதனால் அரியணைக்குரிய வாரிசில்லையாம்.. என் விதி..

கனக : விதியையும் சதியினால் (தடுமாறி).. இல்லை இல்லை.. மதியினால் வெல்லலாம் தானே நண்பா.. இல்லை இளவரசே..

சங்கி : (சிரித்து) ஏன் தடுமாற்றம்.. இந்தச்சங்கிலி இளவரசனாக இருந்தாலென்ன நாடாளும் மன்னனாக இருந்தால் என்ன என்றும் கனகராஜனின் உயிர் நண்பன். பிறகென்ன தடுமாற்றம்.

கனக : (பயத்துடன்) ஏதாவது தவறாகக் கூறிவிட்டேனா சங்கிலி இளவரசே..

சங்கி : (சிரித்து)ம்.. ம்.. தடுமாற்றத்திலும் சரியான நேரத்தில் சரியான வார்த்தைகள் தான் உதிர்ந்தன.. இதுவும் விதிதானோ.. ஆம் கனகராஜனே.. விதியை மதியினால் மட்டுமல்ல சதியினாலும் வெல்லலாம் அப்படித்தானே.. பார்ப்போம் (நமட்டுச்சிரிப்பு)..

..... காட்சிமாற்றம் .....

**காட்சி : 2**

**களம் : யாழ்ப்பாணம் நல்லூர் அரண்மனை**

**மாந்தர்கள் : சங்கிலி, கனகராஜன், பரநிருபசிங்கன்**

(நல்லூர் கோவில் மணியோசை கேட்கிறது)

பரநி : நல்லூரா..வேலவா..(சோகத்துடன்) இந்த நல்லூர் அரண்மனைக்கு யார்கண்பட்டதோ.. நம்பினார் குறைதீர்க்கும் நல்லைவாழ் முருகப்பெருமானே.. உனக்கு என்னகுறை வைத்தோம்.. அடுத்தடுத்து இழப்புக்கள்.. சோதனைகள்.. வேதனைகள். சேவற் கொடியோனே.. செந்தில் வேலவனே.. சொல்லப்பா எங்கேயப்பா தவறு நிகழ்ந்தது.. யார்.. உனக்கு என்னகுறை வைத்தோமப்பா..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சங்கி : (வந்துகொண்டு) என்ன அண்ணா.. பட்டத்து இளவரசரே.. யார் யாருக்கு என்ன குறைவைத்தது..?

பரநி : (தடுமாறி) யார்.. சங்கிலியா வா வா.. இந்த நேரம்.. அதுவும் நண்பன் கனகராஜனுடன்..

கனக : வணங்குகிறேன் பட்டத்து இளவரசரே..!

பரநி : வேறு என்ன..? அன்று பட்டத்து இளவரசர் சிங்கபாகு நஞ்சூட்டிக் கொல்லப்பட்டார்.. அதிலிருந்து தொடர்ச்சியாக..

கனக : (இடைமறித்து) அதுதான் பட்டத்து இளவரசர் சிங்கபாகுவை இராசமடப்பள்ளி வன்னியன் தான் கொலை செய்ததாக ஒத்துக் கொண்டாரே..

பரநி : அந்தக் கவலையிலிருந்து விடுபடமுன்பு நந்தவனத்தில் உலாவிய ஒன்றுமறியாத பட்டத்து இளவரசர் வீரபண்டாரம் கத்திக்குத்தில் மரணமடைந்தார். அந்தச் செய்தியைக் கேள்வியுற்ற பெரியன்னை பட்டத்துராணி இராஜலக்குமிதேவி யமுனாஏரியின் படிக்கட்டுகளில்.. ம் (பெருமூச்சு) ஒரே நேரத்தில் இரு இழப்புகள்..

சங்கி : என்ன செய்வது நடந்தது நடந்துவிட்டது. அது அவர்களது விதி..

பரநி : விதியோ சதியோ எல்லாம் அந்த நல்லூரான் தானறிவான்.. ஆனால் நமது இராச்சியத்திற்கு நாலாபுறத்திலிருந்தும் பகைவர்கள் தமது கைவரிசையைக் காட்டத் தொடங்கி விட்டார்கள் என்பது மட்டும் தெட்டத்தெளிவாகத் தெரிகின்றது.

கனக : தென்னிலங்கையிலும் தமிழ்நாட்டிலும் ஆழக் காலூன்றிய போர்த்துக்கீயரும் நேரடியாகவோ, உள்வீட்டுப் பகைவர்கள் மூலமாகவோ, இங்கும் குழப்பத்தை ஏற்படுத்தி காலூன்றத் துடிக்கிறார்கள் இளவரசே.

பரநி : உண்மைதான்.. நாம் எதற்கும் முன்னெச்சரிக்கையாக இருக்க வேண்டும்

சங்கி : எல்லாவற்றையும் கட்டிப்பேணத்தக்கதாக அரச நிருவாகம் அமைந்திருக்க வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரநி : ஆம் அதைப்பற்றித்தான் சிந்திக்கின்றேன்..

சங்கி : முதல்மந்திரி அப்பாபிள்ளையும் பிரதம சேனாதிபதி சண்பகமாதாக்கரும் உறுதுணையாகவிருக்கும் போது எதைப் பற்றிச் சிந்திக்கிறீர்கள்?

கனக : அதுதானே.!

பரநி : அதனாற்தான் சிந்திக்கவேண்டியிருக்கிறது.. காலம் வரும்போது நீயே அறிவாய் சங்கிலி..

இரு : நல்லூரான் துணையிருக்கும்போது மனதைத்தளர விடாதீர்கள். நன்றி நாங்கள் வருகிறோம்..

பரநி : ம்..(பெருமூச்சு)

...... காட்சிமாற்றம் ......

**காட்சி : 3**

**களம் : யாழ்ப்பாணம் நல்லூர் அரண்மனை**

**மாந்தர்கள் : பரநிருபசிங்கன். மகன் பரராசசிங்கன்**

பரநி : ம்... எனது விதி... யாசகம் என்ற போர்வையில் தந்தையாரின் வேண்டுதல் என்னைக் கட்டிப் போட்டுவிட்டது. இதை விதி என்பதா.. அன்றேல் என்மதி கெட்டுவிட்டது என்பதா.. சீ..சீ.. தந்தையார் கூற்றிலும் நியாயம் இருக்கத்தானே செய்கிறது.. ஏதோ மன்னரின் யாசகம் என்ற போர்வையில் சத்தியம் செய்து கொடுத்தாயிற்று..

மகன்ப : தந்தையே என்ன தனிமையில் இருந்து புலம்புகிறீர்கள்..

பரநி : (தடுமாறி) அதுவந்து.. மகனே.. பரராசசிங்கா.. அது வந்து..

மகன்ப : (கோபத்துடன்) வந்தும் போயும்.. எல்லாம் கேள்விப்பட்டேன். எப்படியப்பா உங்களுக்கு மனது வந்தது. உங்களுக்கு பரராசசிங்கன் என்று ஒரு மகன் இருப்பதை மறந்து மாமன்னர் பரராசசேகரருக்கு எப்படியப்பா சத்தியம் செய்து கொடுத்தீர்கள்.?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரநி : அது வந்து.. காலத்தின் கட்டாயம்.. அதுதான் விதியென்றால் எவராலும் மாற்றமுடியாது மகனே..

மகன்ப : தந்தையே நீங்கள் மகாதுரோகத்தைச் செய்து விட்டு இலேசாக விதிமேல் பழியைச் சுமத்தி விட்டீர்கள்.

பரநி : மகனே..

மகன்ப : ஆம் தந்தையே.. நீங்கள் பெற்ற மகனுக்கே துரோகம் செய்து விட்டீர்கள்..

பரநி : நானா துரோகம் செய்தேன்.. எதையும் ஆழமாகச் சிந்தித்துப் பார்த்தால் அதன் உண்மை புரியும்..

மகன்ப : இதில் ஆழமாகச் சிந்திப்பதற்கு என்ன இருக்கின்றது. நீங்கள் செய்ததற்குப் பெயர் என்ன என்பதை நீங்கள் தான் ஆழமாகச் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

பரநி : ராஜ பரம்பரையில் தொடரும் இழப்புகள் மரணங்கள் ஒரு முடிவுக்கு வரவேண்டும். எனது மகன் உயிரோடு வாழ வேண்டும்.. எனது தந்தையின் மகன் உயிரோடு வாழ வேண்டும்..

மகன்ப : அப்படியானால் உயிரோடு வாழ்நாள் முழுவதும் நடைப்பிணமாக வாழவேண்டும் என்று கூறுகிறீர்களா தந்தையே..? மாமன்னர் அதுதான் தங்கள் தந்தையாரும் அதையே கூறித்தான் தங்களிடம் சத்தியம் பெற்றதாகக் கேள்விப்பட்டேன்.

பரநி : உண்மைதான் மகனே.. அப்போது நான் சூழ்நிலைக் கைதியாகி விட்டேனடா.. உனது நன்மை கருதியே சத்தியம் செய்து கொடுத்தேனடா..

மகன்ப : சீ.. அப்படிக்கூற வெட்கமாயில்லை.. உயிர் மேல் இவ்வளவு ஆசையா.. உங்களுக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரநி : (கோபமாக) பரராசசிங்கா..!

மகன்ப : ஆம் அப்பா.. வேறு என்னவென்று சொல்வது.. எனது நன்மை கருதியிருந்தால் உங்களுக்கு உரிமையான அரசை தம்பிக்கு விட்டுக் கொடுத்திருப்பீர்களா.. உங்களுக்கு ஆளப் பலமில்லை என்றால் மகனுக்குமா இல்லை.? நான் யாழ்ப்பாண சிம்மாசனத்திலே அமர வேண்டியவன். அதை மறந்து விட்டீர்கள் தந்தையே..

பரநி : வார்த்தைகளைக் கொட்டாதே.. நீ நினைப்பது போல் அரசாட்சி என்பது விளையாட்டென்று எண்ணாதே.. ஆசைப்பட்டு முடி புனைந்து பின் அவதிப்படுவதிலும் பார்க்க நிலைமையைச் சமாளித்து, திறமையுடையவர்களுக்கு விட்டுக்கொடுப்பது மேல். அதை நினைவில் வைத்திரு..

மகன்ப : எதை.. விதியை என்று கூறவருகிறீர்களாக்கும்.. எது எப்படி இருந்தாலும் நான் மன்னனின் மகனாக வாழவேண்டும். அன்றேல் மன்னனாக வாழ வேண்டும். இரண்டில் ஒன்று..

பரநி : நீ மன்னனாக ஆசைப்படுகிறாய்.. ஆனால் உயிரோடு வாழ்ந்து நீ எனக்கு ஈமக் கிரியைகள் செய்ய வேண்டுமென்று நான் ஆசைப்படுகின்றேன். மன்னரும் அப்படியே... நீ சிறுவன். அரசியலின் நெளிவு சுழிவுகளை அறியாதவன்.

மகன்ப : என்ன நான் சிறுவனென்று எண்ணியா இப்படி ஒரு முடிவை எடுத்தீர்கள்.. அப்போ என்னிலும் பார்க்க வெறும் நான்கே வயது அதிகமான சித்தப்பா சங்கிலி என்னவாம்?

பரநி : அப்போ பரராசா.. உன்சித்தப்பா சங்கிலி, மன்னனாக முடிசூடுவதை நீ விரும்பவில்லையா..?

மகன்ப : சித்தப்பா மட்டுமில்லை... எனக்கு உரித்தான அரசை எவருக்கும் விட்டுக்கொடுக்க நான் தயாரில்லை.. விதியாம் விதி..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரநி : உன்னால் யாழ்ப்பாண அரசின் மகுடத்தைச் சுமக்க முடியுமா..?

மகன்ப : ஏன் முடியாது தந்தையே..

பரநி : நாட்டின் பரிபாலனம் என்பது பஞ்சுமெத்தை அல்ல.. முள்படுக்கை அதை அறிந்து கொள்..

மகன்ப : அதை நானும் நன்கு அறிவேன் தந்தையே..

பரநி : குதர்க்கம் பேசுகிறாய்..

மகன்ப : எனது உரிமைக்காக சில உண்மைகளைச் சொல்லப் போனால் ஏன் குதர்க்கம் என்கிறீர்கள்..

பரநி : மீண்டும் மீண்டும் கூறுகிறேன்.. நான் என் மகனை அது தான் உன்னை இழக்கத் தயாரில்லை.. இழப்புகளுக்கு முற்றுப்புள்ளி வைக்க விரும்புகின்றேன்.

மகன்ப : இழப்புகள் தொடர வேண்டுமென்பது தான் விதியென்றால் அதை உங்களால் மட்டுமல்ல எந்தக் கடவுளாலும் மாற்ற முடியாதப்பா..

பரநி : ஆம்..பரநிருபா... நல்லூரான் மீது ஆணையாகக் கூறுகிறேன்.. உன் மணிமுடியைப் பறிப்பது எனது நோக்கமல்ல.. அரசியல் என்பது ஒரு சதுரங்கம். முள் படுக்கை. அதைப்புரிந்து கொள். கெட்டிக்காரர்களும் சமயோசிதிகளும் மட்டுமே பிழைக்க முடியும்.

மகன்ப : தந்தையே

பரநி : பார் இன்று யாழ்ப்பாண இராச்சியத்தைக் கருமேகங்கள் சூழ்ந்துள்ளன.... ஒருபுறம் வன்னியர்கள்.. மறுபுறம் சிங்கள மன்னர்கள்.. சூழவுள்ள சமுத்திரத்தில் போர்த்துக்கேயப் பறங்கிகள்... அடுத்தடுத்த உள்வீட்டுக் கொலைகள். இவை விதியா அன்றி சதியா.. இந்த இக்கட்டான சூழலில்..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகன்ப : (இடைமறித்து)என்னைப் பயமுறுத்துகிறீர்களா.. அன்றி கோழை என்கிறீர்களா..?

பரநி : இரண்டும் இல்லை.. பயமுறுத்தவுமில்லை உன்னைக் கோழை என்று கூறவுமில்லை.. உண்மையைக் கூறினேன்..

மகள்பர : தந்தையே..!

பரநி : அதனால்தான் இந்தச் சந்தர்ப்பத்தில் நிலைமையைச் சமாளித்து, திறமை உடையவர்களுக்கு விட்டுக் கொடுப்பது மேல் என எண்ணி மாமன்னருக்கு வாக்கைக் கொடுத்து விட்டேன். மன நிலையைப் புரிந்துகொள். என் தந்தைக்கு கொடுத்த வாக்கைக் காப்பாற்ற உதவி செய்.. கொடுத்த வாக்கை மாற்ற மாட்டேன். அது உறுதி..

மகன்ப : நான் உடன் படலாம்.. ஆனால் இந்த அரசுக்கு உரிமை கொண்டாட இன்னும் பலர் இருக்கிறார்கள். அதையும் மறந்திடாதீர்கள் தந்தையே..

பரநி : மகனே !

மகன்ப : ஆம் தந்தையே.. உங்கள் அத்தை.. அதுதான் இறந்துபோன சிங்கபாகு அவர்களின் மூத்த சகோதரி பெரியநாச்சியார் கண்மணிநாச்சிக்கும் திருகோணமலை கோகர்ண வன்னிக்கும் பிறந்த புத்திரனுக்கும் இந்த யாழ்ப்பாண அரசு சொந்தம் என்று கூறுகிறார்களாம். அதற்கு என்ன சொல்லப் போகிறீர்கள்.

பரநி : மகனே அதையும் நான் அறிவேன்..

மகன்ப : அதுமட்டுமல்ல இதுதான் எனது விதியென்று நான் விலகி இருக்கலாம். ஆனால் மகாசனங்கள்.. மற்றது... மந்திரி அப்பா பிள்ளை..

பரநி : நீ சரியென்றுகூறு... மற்றவற்றை நான் சமாளித்துக் கொள்கிறேன்..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகன்ப : ஆகட்டும் தந்தையே.. எது நடக்கவேண்டுமோ அது நடக்கட்டும்.

பரநி : எது எப்படியோ.. வருகிற சுபமுகூர்த்தத்தில் தம்பி சங்கிலி பரராசசேகரம் இந்த யாழ்ப்பாண மண்ணின் மன்னனாக முடிசூடுவான். அவ்வளவு தான் (கோவில் மணி அடிக்க) நல்லூரான் மணிஓசை கேட்கின்றது.. நல்ல சகுனம்தான்..

...... காட்சிமாற்றம் ......

**காட்சி : 4**

**களம் : யாழ்ப்பாணம் நல்லூர் அரண்மனை**

**மாந்தர்கள் : பரநிருபசிங்கன், சங்கிலியன், கனகராஜன்**

(ஒருபெண் கொலுசு ஒலியுடன் ஓடும் சத்தம்)

பரநி : (கோபத்துடன்) கனகராஜா!. உனக்கு என்னடா துணிச்சல்.?

கனக : மகாமந்திரியார்.. ஏழூர் அதிபர் பரநிருபசிங்கரே.. நான் அப்படி என்னதான்....

பரநி : (இடைமறித்து) ஓர் இளவரசியின் கரங்களை நீ தொடுவதா..? மன்னன் சங்கிலியின் நண்பன் என்றால் எதுவும் செய்யலாமா..? நாயைக் குளிப்பாட்டி நடுவீட்டில் வைத்தது போல...

சங்கி : (வந்து கொண்டு) என்ன நடந்தது நண்பா.. மகாமந்திரியார் கோபத்திற்கு காரணம் என்னவோ?

கனக : அது... வந்து... பரவை இளவரசியார்..

பரநி : (இடைமறித்து) முடவன் கொம்புத்தேனுக்கு ஆசைப்படக் கூடாது. தகுதி உணர்ந்து நேசித்திருக்க வேண்டும்..

சங்கி : உண்மைக்காதலென்பது மனங்களைப் பார்ப்பதே தவிர.. தகுதியைப் பார்ப்பதில்லைத் தானே அண்ணா..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரநி : நமது அரசகுலப் பெருமை என்னாவது. பரவை இளவரசி பதவியாவன்னியன் உலோகநாதனுக்கு நிச்சயமான பெண். கனகராசன் உனது நண்பனாக.. ஒற்றனாக இருந்தாலும்.. அரசமடப்பள்ளியின் மகன். அதை மறந்திடாதே..

சங்கி : இதில் ஒன்றும் தவறில்லை..

பரநி : நீ கூறுவதைப் பார்த்தால் இருவருக்கும் நீயே கட்டிவைத்து விடுவாய் போல் இருக்கிறது. நான் இதற்கு ஒருபோதும் ஒத்துக் கொள்ள மாட்டேன்.

சங்கி : மன்னியுங்கள் அண்ணா.. இது அரசியல் அல்ல.. வாழ்க்கை.. என் தங்கையின் வாழ்க்கை.. இருவரும் விரும்பியிருந்தால்.. அது தான் விதி என்றால்.. எவராலும் மாற்ற முடியாது அண்ணா..

பரநி : (கோபத்துடன் சென்று கொண்டு) விதி.. விதி.. விதி.. எல்லாவற்றுக்கும் விதி... நான் வருகிறேன். எதற்கும்.. காலம் பதில்சொல்லும்.

சங்கி : என்ன ஒற்றரே பயந்து விட்டீரா..? எதற்கும் துணிவு வேண்டும்.

கனக : அது வந்து...

சங்கி : (சிரித்துக் கொண்டு) இதுவும் விதிதான்.. பார்த்தாயா விதியின் விளையாட்டை..

கனக : மன்னா !..

சங்கி : (சிரித்துக் கொண்டு) நண்பா என்றே அழை.. ஏன் மைத்துனன் என்றும் அழைக்கலாம் தானே.. பார்த்தாயா.. ஒரு வைப்பாட்டியின் மகன் முறைதவறி, அனைவரின் ஆசீர்வாதப்படி முறைப்படி, மன்னனாக வில்லையா.. முடிக்குரியவர் மகாமந்திரியாகவும், ஏழூரதிபனாகவும், பொக்கிஷ அதிகாரியாகவும் ஆக்கப்பட வில்லையா..? எல்லாம் அறிந்த நண்பன் என்றபடியால் கூறுகின்றேன்.. ஏன்.. காதலித்த உதயதேவி இருக்க அரசகேசரியின் மகள் அரச மாதேவியைக் கைபிடித்து பட்டத்துராணியாக முடிசூடவில்லையா..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கனக : ஆம். விதியின் விளையாட்டை ஏற்றுக் கொள்ளுகிறேன் மன்னா..

சங்கி : ஒற்றனாக இருந்தாலும் எதிலும் மிகுந்த எச்சரிக்கை.. அவதானம்.. வேண்டும். மறந்துவிடாதே.. சென்றுவா..

......... காட்சிமாற்றம் .......

**காட்சி : 5**

**களம் : யாழ்ப்பாணம் நல்லூர் அரண்மனை**

**மாந்தர்கள் : சங்கிலியன், அரசதேவி**

சங்கி : **(முணுமுணுத்தல்)**

**நல்லை நகர் மீதுறையும்**
**வள்ளி மணவாளனே நீ**
**எல்லையில் இருந்து காக்கும்**
**வீரகாளி அம்மாவுடன்**
**நல்லையை நீ காத் திடுவாயே**
**தொல்லையின்றி நல்லையையே**
**காத்திடுவாயே தொல்லையின்றி**
**(கொலுசுச் சத்தம் கேட்டல்)**

அரச : என்ன மன்னர்மன்னருக்கு கவிதையும் வருகின்றது போல..

சங்கி : இந்த அழகே உருவான யமுனா ஏரியும், பூஞ்சோலையைத் தழுவிவரும் இதமான தென்றல் காற்றும், உப்பரிகையில் நின்று பார்க்கும் போது தெரியும் நல்லூரானின் கோபுரக் கலசங்களும் அடிவானிலிருந்து வீரமஹாகாளி அம்மனின் கோபுரத்தினை மருவி நிற்கும் பூரணசந்திரனின் அழகும் என்னை மட்டுமல்ல எவரையும் கவிஞனாக்கி விடும் அரசதேவி..

அரச : அரண்மனை வாயிலில் கம்பீரமாக படபடத்துப் பறக்கும் சேதுக் கொடியை மறந்துவிட்டீர்கள்..


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சங்கி : அதுவா.. ஆம்.. எமது பண்பாட்டை.. எமது விழுமியங்களைப் பறைசாற்றும் கொடியல்லவா.. சேது எமது தமிழ்ப்பண்பாட்டின் ஆணிவேர்.. இது நீ அறியாததா.?

அரச : மன்னர் செகராசசேகரரை 'இடபவான்கொடி எழுதிய பெருமாள்' என்று தட்சிண கைலாய புராணத்தில் எழுதியதை வாசித்துள்ளேன்.

சங்கி : எங்கள் சின்னம் சேது.. அதுதான் நந்தி.. எங்கள் கொடி சேது.. அதுதான் நந்திக் கொடி.. குலச்சின்னம் சேது.. பட்டயமும் சேது சின்னத்தைக் கொண்டது.

அரச : யாழ்ப்பாண மன்னர்களையும் சேதுகாவலர்கள் என்று தானே அழைப்பர்

சங்கி : ஆம் 'கோட்டகம கல்வெட்டிலும்' சேது என எம்முன்னோர்கள் பொறித்துள்ளனர்.

அரச : ஏன் 'செகராசசேகர மாலையிலும்' சேது காவலனை என்று குறிப்பிடப்பட்டு உள்ளதே..

சங்கி : எங்கள் நாணயங்களிலும் சேது என்றே பொறிப்போம். சேது நாணயத்தின் ஒருபுறத்தில் சேது என்ற எழுத்தும் மறுபுறத்தில் குத்துவிளக்கு, மயிலின் தலை, திரிசூலம் பிறைச்சந்திரன் என்பனவும் காணப்படும். தற்போது இவற்றை வார்க்கும் பொறுப்பை அண்ணர் மகாமந்திரி பரநிருபசிங்கர் ஏற்றுள்ளார். மகாராணி அல்லவா இவற்றையும் அறிந்து வைத்திருக்க வேண்டும்..

அரச : (குழைந்து) சேதுகாவலா..

சங்கி : சொல்லு மகாராணி.. முழுநிலவொளியில் இன்னொரு வெண்ணிலா.. கருவிழிகள் மூடியிருக்கும் போது மறுவில்லா வெண்ணிலா..

அரச : ம்.ம். போங்கள்

சங்கி : பார் வெட்கத்தை.. கள்ளி.. (ஓடும் கொலுசுச் சத்தம்)

........ காட்சிமாற்றம் .......


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காட்சி : 6

களம் : யாழ்ப்பாணம் நல்லூர் அரண்மனை

மாந்தர்கள் : சங்கிலியன், கனகராஜன்

கனக : வன்னியர் செயற்பாடுகளை அறிந்திருப்பீர்கள். தீவுகளிலிருந்து மாடுகளைக் களவாகப் பிடித்து போர்த்துக்கேயருக்கு விற்கிறார்களாம். அதுவும் போர்த்துக்கேயர் சேது நாணயத்தை அளவுக்கு அதிகமாகக் கொடுத்து வாங்குகிறார்களாம்..

சங்கி : போர்த்துக்கேயரிடம் அளவுக்கதிகமான சேது நாணயங்களா.. அது எப்படி

கனக : ஆம்.. தங்களின் உளவுப்பிரிவின் தலைவன் என்ற ரீதியில் சொல்லுகின்றேன். யாழ்ப்பாண இராச்சியத்தில் பகைவர் கூடிவிட்டனர். தங்களுக்கு நம்பிக்கையானவர்களே எதிராக நடவடிக்கைகளை மேற்கொள்ளத் துணிந்து விட்டனர்..

சங்கி : யாரைச் சொல்லுகிறாய் கனகராஜா..!

கனக : முதன் மந்திரியார் தற்போது எதிராளியாகிவிட்டார். இராச்சியத்தை விரும்பியோ விரும்பாமலோ விட்டுக் கொடுத்தாலும் தற்போது மனம் மாறிவிட்டார். மகனதும் மனைவியினதும் நச்சரிப்புத் தாங்காமல் உங்களிடமிருந்து எப்படியாவது அரசைத் தட்டிப் பறிக்க முயலுகிறார். என்றாவது ஒருநாள் எப்பாடுபட்டாவது மகன் பரராசசிங்கனை யாழ்ப்பாணத்தின் மன்னனாக்கு வதாகச் சத்தியம் வேறு செய்துள்ளதாகவும் தகவல்.

சங்கி : (ஏளனச்சிரிப்பு) அப்படியா.... மைத்துனா.. இது மட்டுமா.. வேறும் இருப்பது போல் உனது உதடுகள் காட்டுகின்றன. கூறு..

கனக : ஆம்.. மந்திரி அப்பாமுதலியும் பரராசசிங்கரோடு சேர்ந்துள்ளதாகக் கேள்வி.

சங்கி : இவ்வளவுதானா அன்றேல் காக்கைவன்னியர் பற்றியும் தகவலுண்டா..

கனக : (ஆச்சரியத்துடன்) மன்னா..!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சங்கி : ஆம்.. காக்கைவன்னியன், அடங்காப்பற்று வன்னியருடனும் போர்த்துக்கேயருடனும் இறுக்கமான நெருக்கமான தொடர்புகளைப் பேணிவருவதாக அறியக் கிடைத்தது..

கனக : ஆம் மன்னா.. திருகோணமலை வன்னிமையும் பதவியா வன்னிமையும் யாழ்ப்பாணம் வந்துள்ளார்களாம். மகாமந்திரி பரநிருபரை சந்திக்கிறார்களாம்.. அவர்களுடன் அப்பாமுதலியும் காக்கைவன்னியனும் இணைகிறார்களாம்..

சங்கி : மைத்துனா..! சேதுநாணயம் போர்த்துக்கேயர் கைகளில் தாராளமாகப் புழங்குகின்றது என்று கூறியபோதே நினைத்தேன்.. ம்...

கனக : மன்னா...

சங்கி : விதி அதுதான் என்றால் தடுக்கமுடியாது.. நாம் என்ன செய்யலாம்.

கனக : இது விதியல்ல... தங்களுக்கெதிராகச் சுற்றியுள்ளோர் மேற்கொள்ளும் சதி..

சங்கி : இல்லை கனகராஜா... விதி... ஆம் சதியும்.. ஒருபுறம் விதி தான்..

...... காட்சிமாற்றம் .....

**காட்சி : 7**

**களம் : யாழ்ப்பாணம் நல்லூர் அரண்மனை**

**மாந்தர்கள் : சங்கிலியன், அரசதேவி**

(மன்னன் யோசனையுடன் நிற்க அரச தேவி வரல்)

அரச : என்ன.. யோசனை பலமாக இருக்கிறது போல?

சங்கி : (தடுமாறி) ஒன்றுமில்லை அரசதேவி..

அரச : உதடுகள் ஒன்றுமில்லை என்று கூறுகின்றனவே தவிர.. தடுமாற்றம் தங்கள் நிலைமையைப் புரியவைக்கின்றதே..

சங்கி : (தடுமாறி) அதுவந்து ஒன்றுமில்லை அரசதேவி..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரச : அரசகாரியங்களில் தலையிடுகிறேன் என்று எண்ணாதீர்கள்..

சங்கி : பரவாயில்லை.. கூறுதேவி.. என்வாழ்விலும் சாவிலும் நீயும் ஒரு பங்காளி.. கூறவந்ததைக் கூறு தேவி

அரச : அது வந்து.. வந்து..

சங்கி : தயங்காதே கூறு..

அரச : மந்திரி மனையில் திருகோணமலை வன்னிமையும் பதவியா வன்னிமையும் மகாமந்திரி பரநிருபரை சந்தித்திருக்கிறார்களாம். அவர்களுடன் அப்பா முதலியும் காக்கைவன்னியனும் இருந்தார்களாம்..

சங்கி : அப்புறம்..

அரச : பரநிருபரைச் சிம்மாசனத்தில் அமர்த்துவதற்கு போர்த்துக்கேயரின் ஆதரைவைப் பெறுவதற்கு முடிவெடுத்துள்ளதாகக் கேள்வி..

சங்கி : தேவி..

அரச : ஆம்.. தென்னிலங்கையில் மன்னன் புவனேகபாகு தனது ஆட்சியைப் பாதுகாக்க போர்த்துக்கேயருடன் உறவு கொண்டாடுவது போன்று இங்கேயும் தங்களை சிம்மாசனத்திலிருந்து அகற்றுவதற்கு போர்த்துக்கேயரின் ஆதரவைப் பெறுவதில் தவறில்லை என்று முடிவெடுத்து உள்ளார்களாம்.

சங்கி : நல்லது.. விதி எப்படியோ அப்படியே நடக்கட்டும்.

அரச : ஆனால் இது சதியல்லவா.. நாம் எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும்.. தாங்கள் முடிசூடியதையும் அப்படி இப்படிக் கதைத்திருக்கிறார்களாம்..

சங்கி : அதென்ன அப்படி இப்படி.. விபரமாகத்தான் கூறலாமே தேவி..

அரச : ஆம்.. யாழ்ப்பாண இராச்சிய மரபின்படி மூத்த மைந்தனே அரசனாக வேண்டுமாம். சிங்கபாகு மற்றும் வீரபண்டாரம் இருவரும் பட்டத்து இளவரசர்கள் இளவயதில் கொலையுண்டார்கள் அடுத்து பரநிருபசிங்கர் முடிதரித்திருக்க வேண்டும். அவர் மறுத்தால் அவரின் மகன் பரராசசிங்கன் மகுடம் தரித்திருக்க வேண்டுமாம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சங்கி : அவரும் மறுத்திருந்தால் என் அண்ணர் பெரியபிள்ளை சிம்மாசனத்தில் அமர்ந்திருக்க வேண்டும் அவ்வாறு இருக்க அவர்கள் எல்லாரையும் தாண்டி எனக்கு முடிகிடைத்தது எப்படி.. அப்படித்தானே கூற வருகின்றாய்..

அரச : ஆம் நாதா..

சங்கி : அது தான் விதி.. கோழைகள்.. முதுகெலும்பு இல்லாதவர்கள். பயந்தாங் கொள்ளிகள்.. (கோபத்துடன்) அன்று முடிசூட ஒரு மாவீரன் தேவைப்பட்டான்.. கொள்ளிவைப்பதற்கு உறவுகளைப் பாதுகாக்க வேண்டிய தேவையிருந்தது.. இன்று எல்லாம் சுமுகமடைந்து வரும்பொழுது ஆட்சி அதிகாரம் தேவைப்படுகின்றதாக்கும்.

அரச : கோபப்படாதீர்கள் மன்னவா...

சங்கி : கோபப்படவில்லை.. என் மன ஆதங்கத்தைக் கூறுகிறேன்.. உன்னிடமன்றி வேறு யாரிடம் கூறுவது.. எது எப்படியிருந்த போதும் இந்தச் சங்கிலி அரச கட்டிலில் இருக்கும்வரை போர்த்துக்கேயருக்கோ அன்றி வேறு எந்த அந்நியருக்கோ அடிபணியப் போவதுமில்லை நாட்டைக்காட்டிக் கொடுக்கப் போவதுமில்லை.. இதுசத்தியம்..

அரச : அறிந்ததைக் கூறினேன். அவ்வளவு தான்..

சங்கி : சரி தேவி.. நடப்பதை பொறுத்திருந்து பார்ப்போம்.

......... காட்சிமாற்றம் .........

**காட்சி : 8**

**களம் : திக்விஜயத்திலிருந்து திரும்பி வரல்**

**மாந்தர்கள் : சங்கிலியன், கனகராஜன்**

(காட்சி முழுவதும் குதிரையின் குழம்பொலி பின்னணியிலிசைப்பது சிறந்தது)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கனக : மன்னா.. வன்னிக்கான திக்விஜயத்திலிருந்து திரும்பிவரும் இவ்வேளையில்..

சங்கி : (இடைமறித்து) பரவாயில்லை... கூறு கனகராஜா..

கனக : யாழ்ப்பாண முடிக்கான போட்டியில் புதியதொரு வாரிசும் இணைந்துள்ளதாம்..

சங்கி : (ஆச்சரியத்துடன்) யாரது..

கனக : பரராசசிங்கனுக்கு மூத்தவன்..

சங்கி : என்ன.. பரராசசிங்கனுக்கு மூத்தவனா..? நம்பமுடிய வில்லையே.. இருக்கிறான் என்று கேள்விப் பட்டேன்..

கனக : ஆம்.. காசிநயினார்..

சங்கி : யார்.. அந்தச் சேடிப்பெண் நந்தாதேவியின் மகன்தானே.. அவனும் வெளிச்சத்துக்கு வந்துவிட்டானா..?

கனக : ஆம்.. ஆனால் அதில் சோகம் என்னவென்றால்..

சங்கி : கூறு மைத்துனா..

கனக : காசிநயினார் கோட்டைக்குப் போய் போர்த்துக்கேயரிடம் சரணடைந்துள்ளானாம்.

சங்கி : கோழை.. வெளியில் வரத்தெரியாதவன்.. இன்று போர்த்துக் கேயரிடம்.. ம்..

கனக : ஆம் மன்னா.. யாழ்ப்பாண இராசதானியின் முடியைத் தனக்குப் பெற்றுத்தர வேண்டுமென்று கோரிக்கைவிடுத்து போர்த்துக்கேயரிடம் சரணடைந்துள்ளானாம். பெற்றுத்தந்தால் அவர்களைக் கோட்டை கட்டவும் மக்களை மதம் மாற்றவும் அனுமதிப்பதோடு தானும் மதம் மாறச் சம்மதம் தெரிவித்துள்ளானாம்

சங்கி : பார்த்தாயா விதி எப்படியெல்லாம் விளையாடுகிறது என்று..

கனக : (கோபத்துடன்) மன்னா..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சங்கி : ஆம்.. எனது இராச்சியத்தில் எவர் மதம் மாறினாலும் என் வாளுக்கு இரையாக்குவேன். தமது ஆதிக்கத்தை நிலைநாட்ட முதற்படியாக அமைவது மதமாற்றம். அதற்கு துணை நிற்பவர்களை ஒருபோதும் மன்னிக்க மாட்டேன். உன் செய்தியின் படி காசிநயினார் என் வாளுக்கு இரையாகப்போகிறான். அவ்வளவு தான்..

.......... காட்சிமாற்றம் ..........

**காட்சி : 9**

**களம் : அரண்மனை**

**மாந்தர்கள் : சங்கிலியன், கனகராஜன், அரசதேவி**

அரச : என்ன பிராணநாதா.. நான்வந்தது கூடத்தெரியாமல் இருவரும் மௌனவிரதமா..?

கனக : பட்டத்துராணியாரே..

சங்கி : ஆம். என்ன செய்வது தேவி.. என்னைச் சுற்றியிருப்பவர்கள் செய்வதை என்னவென்று சொல்வது.. விதி என்பதா.. அன்றேல் சதி என்பதா.. ஒன்றுமே புரியவில்லை..

அரச : என்ன தங்கள் பெறாமகன் பரராசசிங்கன் போர்த்துக்கேயரிடம் கூறிய சேதியைத் தானே கூறுகிறீர்கள்.

சங்கி : எவ்வளவு துணிவு அவர்களுக்கு.. தொண்டமானாற்றுக் கழிமுக உப்புமாலில் போர்த்துக்கேயருடன் யாழ்ப்பாண முடியைப் பற்றிக் கலந்தாலோசித்தார்கள் என்றால் பார்தேவி.. எவ்வளவு கீழ்த்தரமானவர்கள்..

கனக : அதுமட்டுமல்ல அதில் அப்பா முதலி, காக்கை வன்னியன், பரராசசிங்கன் ஆகியோர் ஒன்றாகக் கலந்துள்ளார்கள் என்றால் அவர்களின் மனவைரம் எப்படி என்று பாருங்களேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரச : அவர்களின் ஓரேநோக்கம் நாட்டை அடகு வைத்தாவது மகுடத்தை கவரவேண்டும் என்பது மட்டுமே.. நாட்டைப் பற்றியோ.. நாட்டு மக்களின் நலனைப் பற்றியோ அவர்களுக்கு சிறிதும் அக்கறை இல்லை..

கனக : ஆம் பரராசசிங்கன், போர்த்துக்கேயரின் அடிவருடி காக்கை வன்னியரை ஓஹோ எனப் புகழ்பாடி யாழ்ப்பாண முடியைப் பெற்றுக்கொடுத்தால் அதற்குப் பிரதியுபகாரமாக மதம் பரப்பவும் வியாபாரம் செய்யவும் போர்த்துக்கேயருக்கு உரிமையளிப்பதாக சத்தியம் வேறு செய்து கொடுத்ததாகவும் தகவல்..

சங்கி : சீ.. வெட்கமில்லாதவர்கள்..

கனக : உண்மைதான்.. ஆனால் நிலைமை கட்டுமீறிப் போக முன்னர் அந்நியருடன் சேர்ந்துவிட்ட துரோகிகள் மூவரையும் இராஜ துரோகக் குற்றம் சாட்டி பிடித்துச் சிறையிலடைக்க வேண்டும்.

சங்கி : இது நடக்கக் கூடியதா...

அரச : ஏன் முடியாது.. சதிகாரர்கள் விடயத்தில் நாம்தான் முன் எச்சரிக்கையாக இருக்கவேண்டும்.

சங்கி : அப்படியே ஆகட்டும்.... விதி எதுவோ அது நடந்தே தீரும்.. கனகராஜனே.. மற்றவர்கள் சென்றால் விபரீதமாகிவிடும். நானே சென்று பார்க்கிறேன்..

........... காட்சிமாற்றம் .............

**காட்சி : 10**

**களம் : அரண்மனை**

**மாந்தர்கள் : பரநிருபசிங்கன், சங்கிலியன்**

பரநி : (ஆத்திரத்துடன்) டேய் சங்கிலி.. என்ன துணிவடா உனக்கு.. என் மகனை இராஜத்துரோகி என்கிறாயே..? உன் முடிக்குப் போட்டியாக வந்துவிடுவான் என்பதற்காக அவனை அழிக்கத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திட்டம் போட்டுவந்து இங்கே ருத்ரதாண்டவம் ஆடுகிறாயா... தனக்குச் சொந்தமான மணிமுடியை உனக்கு விட்டுக் கொடுத்தவனடா.. அதை நினைவில் வைத்திரு..

சங்கி : அதனாற்தான் இன்று காக்கைவன்னியனோடு ஊர்காவற்றுறைக்குப் பாய்ந்து சென்று போர்த்துக்கேயக் கப்பலில் அடைக்கலம் கோரியுள்ளானாக்கும்..

பரநி : அது ராஜதுரோகமல்ல உயிர்ப்பயம். கொலை வெறி கொண்ட உன்னிடமிருந்து தன்னுயிரைக் காக்க..

சங்கி : அரசிற்கு எவனும் துரோகமிழைக்க முடியாது.. நபரோ உறவோ முக்கியமல்ல..

பரநி : (கத்தி) சங்கிலீ.. மன்னனென்ற திமிரா..

சங்கி : துரோகீ.. துரோகீ.. மந்திரிபோல வேடம் போட்டு நாட்டையே காட்டிக் கொடுத்து விட்டாய்..

பரநி : (கத்தி) சங்கிலீ.. அளந்து கதை.. நாட்டின் மீது எனக்கில்லாத அக்கறையா..?

சங்கி : (ஏளனமாக) நாட்டின் மீது அக்கறையா..? உண்ட வீட்டிற்கே இரண்டகம் செய்த உன்னுடன் என்ன கதை.. துரோகி..

....... காட்சிமாற்றம் .........

**காட்சி : 11**

**இடம் : அரண்மனை**

**பாத்திரங்கள் : கனகராஜன், சங்கிலியன்,**

கனக : மன்னா.. ஆபத்து நெருங்கிக் கொண்டிருக்கின்றது போலத் தோன்றுகின்றது.. அது மட்டுமல்ல உள்வீட்டுச்சதி எல்லைமீறிப் போகின்றதோ என எண்ணத் தோன்றுகின்றது..

சங்கி : ஏன் அப்படித் திடீரென்று கனகராஜனே..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கனக : நேற்றையதினம் பரநிருபர் பண்ணைமடத்தில் தங்கியிருந்து, நள்ளிரவுப் பொழுதில் சாதாரண வள்ளம் ஒன்றில் சென்று கண்டிக்குளம் வாயிலூடாக கடனீரேரியுள் புகுந்து போர்த்துக்கேயத் தளபதி செளசாவைச் சந்தித்திருக்கிறார்..

சங்கி : போர்த்துக்கேய தளபதி செளசாவையா.. பரநிருபரா.. நம்ப முடியவில்லையே..

கனக : அதனாற் தான் கூறுகிறேன் மன்னா..

சங்கி : அப்புறம் அங்கு நடந்ததுதான் என்ன..?

கனக : போர்த்துக்கேயரிடம் சரணடைந்த மகனின் நிலைமையைக் கேட்டிருக்கிறார். அப்போது போர்த்துக்கேய தளபதி செளசா எந்த மகனெனக் கேட்டிருக்கின்றான்.

சங்கி : அப்படியா..? அதுதானே...

கனக : அதையே தான் பரநிருபரும் கேட்டிருக்கிறார். அப்புறம்..

சங்கி : (ஆர்வத்துடன்) அப்புறம்... அப்புறம்

கனக : யாழ்ப்பாண அரசிற்கு உரித்தானவர் பரராசசிங்கன் என்று நீங்கள் கூறுகிறீர்கள்.. ஆனால் காசிநயினார் என்பவன் தான்தான் உரித்தானவன்என்று கூறி நாமே தஞ்சமென்று எம்மிடமேயே அடைக்கலம் புகுந்துள்ளான் என ஏளனமாகப் பதிலளித்து விட்டு, போகட்டும் இருவரும் கோவையில் மதம் மாற்றப்பட்டு புதிய பெயரோடு வருவார்கள் என்று கூறியிருக்கிறான்.

சங்கி : அப்படியா?

கனக : ஆம் அதுமட்டுமல்ல முதலில் இன்றைய மன்னன் சங்கிலியை அரச கட்டிலில் இருந்து நீக்க ஒத்துழைப்பைத் தாருங்கள், அதன்பின் நீங்கள் விரும்பிய எவரையென்றாலும் மன்னனாக்கலாம் என்றும் கூறியுள்ளான்.

சங்கி : (ஏளனமாக)ம்.. போர்த்துக்கேயத் தளபதி அல்லவா.. நாசூக்காக நகைத்திருக்கிறான்..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கனக : ஆனால் அதற்கு முதன்மந்திரி கூறிய பதில்தான் சிந்திக்க வைக்கின்றது மன்னா..

சங்கி : அப்படி என்னவோ.. பரவாயில்லை கூறு...

கனக : நாளை முடி யாருக்குரியது என்பது பிரச்சனையல்ல.. இன்று மணிமுடி எனக்கேயுரியது, என்று கூறி தற்பொழுது யாழ்ப்பாணப் படைகள் எதற்கும் தயாராக இருப்பதாகக் கூறி சந்தர்ப்பம் வரும்போது தானாகவே தகவல் தருவதாக வேறு கூறியுள்ளாராம்..

சங்கி : அப்படியா.. அவ்வளவுதூரம் சென்றுவிட்டதா..? தாமதித்தால் தடுமாற வேண்டி வரும். நாளையே திட்டமிட்டபடி எவரும் எதிர்பாராத தருணத்தில் போர்த்துக்கேயப் படைகள் மீது தாக்குதலைத் தொடங்க வேண்டியதுதான். (கோவில் மணி அடித்தல்) பார்த்தாயா கனகராஜா நல்லூரானின் ஆசியும் கிடைத்திருக்கிறது... ஆரம்பிப்போம்..

....... காட்சிமாற்றம் .......

**காட்சி : 12.**

**களம் : அரண்மனை**

**மாந்தர்கள் : கனகராஜன், சங்கிலியன், அரசதேவி**

சங்கி : கனகராஜா.. பார்த்தாயா.. சரியான நேரத்தில்.. சரியான திட்டமிடலால்.. போர்த்துக்கேயப் படைகள் பின்வாங்கி ஓடிவிட்டன.. உனது தகவல் தக்க நேரத்தில் கிடைத்தபடியால் உடனடியாக எடுத்த நடவடிக்கைக்கு பலன் கிடைத்து விட்டது.. போர்த்துக் கேயருக்கும் எமது பலத்தைக் காட்ட ஒரு வாய்ப்பாக அமைந்து விட்டது..

கனக : ஆம்.. மன்னா.. எதற்கும் நாம்தான் தகுந்த எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும். சதிகாரர்கள் எம்முடனேயே உள்ளார்கள். வெளியே அல்ல.. அதை மறந்து விடவேண்டாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சங்கி : சதிகாரர்கள் என்ன திட்டம் தீட்டினாலும்... விதி, நியதி எதுவோ அதன்படிதான் எல்லாம் நடக்கும்

கனக : ஏதோ தங்கள் கணக்கு எந்த விடயத்திலும் எப்போதுமே தவறியதில்லை.. அது விதியோ.. நியதியோ.. சதியோ எதுவாயினும்.

சங்கி : ஒற்றனல்லவா.. சரியாகப் புரிந்து வைத்துள்ளாய்..

கனக : மன்னா..

சங்கி : மைத்துனா..

அரச : (வந்துகொண்டு) என்ன..? (ஏளனமாக) புதிய உறவு வரவிருப்பதால் இருவரும் தற்போதுள்ள உறவு முறைகளைப் பட்டியலிடுகிறீர்கள் போலும்..

சங்கி : புதிய உறவா... யாரது... புரியவில்லையே தேவி!

கனக : (வெட்கப்பட்டு) அதுவந்து...

அரச : மாமனாராகப் போகும் தங்களுக்குப் புரியவில்லை.. புரிந்தவரின் வெட்கத்தைப் பாருங்களேன்...

சங்கி : இருவரும் சொல்வது எதுவும் எனக்குப் புரியவில்லையே..

கனக : தங்கள் தங்கை..

அரச : (இடைமறித்து) முழுகாமலிருக்கிறாள்..

சங்கி : ம்.. இதைத்தவிர மற்றைய செய்திகள் அனைத்தையும் ஒன்றும் விடாமல் கூறிவிட்டார்.. ஒற்றனுக்கு இந்தச் செய்தி கிட்ட வில்லையோ..

கனக : தங்களிடம் கூறாமலா.. இன்று கூறலாம் என்றிருந்தேன்.. அதற்கிடையில் அரசதேவியார் முந்தி விட்டார்..

சங்கி : அப்போ யாழ்ப்பாண இராச்சியத்திற்கு இன்னொரு வாரிசு உருவாகுகின்றது என்று கூறு...

கனக : மன்னா..

சங்கி : விதியிருந்தால்... அதனுடன் மதியும் சேர்ந்தால் எதுவும் நடக்கலாம். (மூவரும் சிரித்தல்)

...... காட்சிமாற்றம் ......



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**காட்சி : 13**

**இடம் : அரண்மனை**

**பாத்திரங்கள் : சங்கிலியன், அரசதேவி**

(சோக இசை ஒற்றன் கனகராஜன் யுத்தத்தில் இறந்துவிடல்)

அரச : மன்னா.. தாங்களே இப்படி மனமுடைந்திருந்தால்.. தங்கை பரவையின் நிலையை எண்ணிப் பாருங்கள்..

சங்கி : அதுசரி.. நான்தான் தவறுசெய்து விட்டேன். சேனாதிபதி சண்பகமாதாக்கனின் சொல்லை நம்பி கோட்டை மன்னன் மாயாதுன்னைக்கு ஆதரவாக போர்த்துக்கேயருக்கு எதிரான போரில் இறங்கியது தவறோ என்று எண்ணத் தோன்றுகின்றது..

அரச : கனகராஜனின் விதி.. என்ன செய்வது.

சங்கி : விதி என்று இலகுவாக முடித்துவிட முடியாது தேவி. கனகராஜனின் இறப்பினால் எனது யாழ்ப்பாணப் படையணியிலும் பாரிய வெற்றிடம் உருவாகியுள்ளதாக உணர்கிறேன்.

அரச : அதனால் தான் விதி என்கிறேன்..

சங்கி : ஆம் உண்மைதான் மதியினால் வென்றிருக்கலாம்.. என்ன செய்வது..

அரச : சகலமுமறிந்தவர் தாங்கள்.. தங்களுக்கு நான் ஆலோசனை கூறுவதா..

சங்கி : அதில் தப்பொன்றுமில்லை.. கூறுதேவி..

அரச : யாழ்ப்பாணப் படையெடுப்புத் தோல்வியினால் பதுங்கியிருக்கும் போர்த்துக்கேயர் இதைத் தங்கள் பலவீனமென எண்ணலாம்.. கூட உள்ள சதிகாரர்களும் தூபமிடலாம்..

சங்கி : அதுமட்டுமல்ல மன்னார்ப் படுகொலை மனதை வதைக்கிறது.. வீதிய பண்டாரத்தின் அவச்சாவு வேறு மனதை வாட்டி எடுக்கிறது..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரச : மன்னார்ப் படுகொலை துரோகத் தனத்துக்கான தண்டனை.. தவிர்க்க முடியாதது.. சில வேளைகளில் சில சம்பவங்கள் கவலைதரக் கூடியனவாக இருந்தாலும் காலத்தின் தேவைகள்..

சங்கி : ஆனால் வீதியபண்டாரத்தின் மரணம்..

அரச : அதற்குத் தாங்கள் காரணமல்லவே.. அவன் தானாகத் தேடிக் கொண்டது.

சங்கி : ம்..

அரச : அதுமட்டுமல்ல அந்த அவச்சாவு தங்களைப் பாதிக்கக் கூடாது என்பதற்காக சோதிடர் கூறியதன் பிரகாரம் பூதவராயர் கோயிலைக் கட்டி வருகிறீர்கள் தானே..

சங்கி : என்னவோ.. கனகராஜனின் இழப்பைத் தொடர்ந்து அனைத்தும் இறங்குமுகமாகச் செல்கின்றனவோ என எண்ணத் தோன்றுகின்றது..

அரச : அது வீண் மனப் பிரமை மன்னா.. (தூரத்தே நரி ஊளையிடுதல்)

சங்கி : பார்த்தாயா தேவி சகுனத்தை... ஏதோ நடப்பது நடக்கட்டும்..

........... காட்சிமாற்றம் .............

**காட்சி : 14**

**களம் : அரண்மனை**

**மாந்தர்கள் : பரநிருப சிங்கன்**

பரநி : (கோபத்துடன்) சங்கிலீ.. பார்த்தாயா.. இதைத்தான் விதி என்பது.. என்னை எதிர்த்து அந்த மடப்பள்ளியின் மகன் கனகராஜனை உன் தங்கைக்குக் கட்டி வைத்தாய்.. அரச கட்டிலில் ஏற்றி வைத்தாய்.. இன்று.. உன் தங்கையும் விதவை.. நீயும் ஒற்றர் தலைவனை இழந்த மன்னன்.. அதுமட்டுமல்ல காக்கைவன்னியனின் சூழ்ச்சியினால் உன்மீது வீதிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண்டாரவின் கொலைப் பழிவேறு.. மன்னார்ச் சம்காரத்தை கோவையிலுள்ள பாதிரியார் பிரான்சிஸ் சவேரியர் கோபாவேசத்துடன் நோக்குகிறார்.. இது போர்த்துக்கேயரின் எரியும் நெருப்பில் எண்ணெய் ஊற்றியது போல நீயே தேடிக்கொண்டது.. உன் மீதுபடையெடுத்து உன்னைத் துவம்சம் செய்ய இதுதான் நல்லதருணமென நான் கொடுத்த தகவலை போர்த்துக்கேயர் அங்கீகரித்து தளபதி கொன்சான்தினோ பிரகன்ஸா தலைமையில் படை நடாத்த தயாரென தகவல் வந்துள்ளது. நானும் இங்கிருந்தே... இல்லையில்லை... கூட இருந்தே குழிபறிப்பேன். உன் தோல்வி நிச்சயம். போர்த்துக்கேய வெற்றியின் பின்பு யாழ்ப்பாண இராச்சியத்தின் மாமன்னன் யார் தெரியுமா.. வேறு யாருமில்லை.. இந்த பரநிருபசிங்கன்.. சங்கிலீ என்னை யாரென்று நினைத்தாய்... இருந்துபார்...

....... காட்சிமாற்றம் ........

**காட்சி : 15**

**களம் : அரண்மனை**

**மாந்தர்கள் : சங்கிலியன், அரசதேவி**

(யுத்தகளேபரம்)

அரசி : மன்னா.. நீங்களே இப்படி..

சங்கி : என்ன! மன்னனே தனது அரண்மனைக்குத் தீவைக்கிறான் என்று நகைக்கிறாயா தேவி.. இது தவிர்க்க முடியாதது.. போர்த்துக்கேய கப்டன் கொன்சான்தினோ பிரகன்ஸா தலைமையில் உக்கிர பீரங்கித் தாக்குதலினால் எமது படைகள் பின் வாங்குகின்றனவாம் தோல்வி நிச்சயம் என்ற நிலையிலுள்ளோம் துரோகிகள் வரிசையில் மகாமந்திரி பரநிருபரும் சேர்ந்து விட்டாராம்..

அரசி : அப்போ அவர் போருக்குப் போகவில்லையா..?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சங்கி : இல்லை.. ஊர்காவற்றுறையில் போர்த்துக்கேயருடன் சேர்ந்து எமது படைகளுக்கு எதிராகப் போரிட்டாராம்..

அரசி : அப்போ எமது தகவல்களைப் பெறுவது போர்த்துக்கேயருக்கு..

சங்கி : (இடைமறித்து) ஆம் எந்தவிதத் தடங்கலும் இருக்காது.. அவர்களிடம் வலுவான பீரங்கிகளும் உள்ளன.. தேவையான தகவல்களை வழங்க நம்மவரும் கூடவே உள்ளனர்.. எனவே.. ம்... (பெருமூச்சுவிட்டு).. ஆம்.. அதனால்தான் நான் ஆண்ட அரண்மனைக்கே தீவைக்கிறேன். தாமதிக்க வேண்டாம்.. கோப்பாய்க் கோட்டைக்கு உடனே திரவியங்களுடன் கிளம்ப வேண்டும்.

அரசி : அங்கிருந்து..

சங்கி : அது களநிலையைப் பொறுத்தது... தாமதியாதே.. தாமதிக்கும் ஒவ்வொரு கணமும் நமக்கு ஆபத்து.

......... காட்சிமாற்றம் ........

**காட்சி : 16**

**களம் : அரண்மனை**

**மாந்தர்கள் : சங்கிலியன், அரசதேவி**

அரசி : அரசே.. நல்லூர் இராசதானிக்குத் தீவைத்து கோப்பாய்க் கோட்டை... அப்புறம் கோப்பாய்க் கோட்டையைக் கொலைக்களம் ஆக்கிவிட்டு..ம். வன்னிக் காடுகளில்.. இப்பொழுது முள்ளியவளை வன்னியர் விஜயாலய முதலியிடம்.. இது தேவைதானா..

சங்கி : ஆம் தேவி.. என்னதான் யுத்தத்தில் படைகளைக்கொன்று குவித்தாலும் மண்ணைப் பிடித்தால் தான் வெற்றி கிட்டியதாகும் அதனால்தான் போர்த்துக்கேயத் தளபதி பிரகன்ஸாவும் நல்லூரை வெற்றி கொண்டும் திருப்தி கொள்ளாது என்னைப் பிடிக்கப் பின்தொடர்ந்து வந்தான்.. என்ன செய்வது அவன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விதி.. அதிகளவு நாட்சென்றதனால் தக்க உணவின்றியும் நோய் வாய்ப்பட்டும் படைகளில் பாரிய அளவினோரை இழந்த படியினால் தானே இன்று என்னுடன் சமரசம் செய்யத் தூது அனுப்பியுள்ளான்..

அரசி : அப்போ பிரகன்ஸாவுடனான சமரசத்திற்குச் செல்லப் போகிறீர்களா..

சங்கி : வேறுவழி.. போர்த்துக்கேயரினால் போர்க்கைதியாகப் பிடிக்கப்பட்ட எமது புதல்வன் பட்டத்து இளவரசன் புவிராசனையும் சேனாதிபதி சண்பகமாதாக்கரையும் விடுவிக்கச் சந்தர்ப்பம் கிடைக்குமா என்று பார்ப்போம்..

......... காட்சிமாற்றம் ...........

**காட்சி : 16**

**களம் : அரண்மனை**

**மாந்தர்கள் : பரநிருப சிங்கன்**

(சோக இசை)

பரநி : சங்கிலி.. மீண்டும் சதி செய்கிறாயா.. தோற்று நாட்டை விட்டோடி காடுகளில் தஞ்சம் புகுந்தும் உன் மகுட ஆசை சமரசத்திற்குத் தூண்டுகின்றதா.. நாம் போர்த்துக்கேயருடன் கதைத்தால் துரோகம்.. நீ போர்த்துக்கேயக் கப்டன் பிரகன்ஸாவுடன் சமரசம் கதைத்தால் ராஜதந்திரம் அப்பிடித்தானே.. அத்துடன் ஆறு அம்ச ஒப்பந்தமா... சதிகாரா.. பொறு... பொறு... பொறுத்திருந்து பார்ப்போம்...

........ காட்சிமாற்றம் .......



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**காட்சி : 17**

**களம் : அரண்மனை**

**மாந்தர்கள் : சங்கிலியன், அரசதேவி**

அரசி : மன்னா.. ஏதோ ஒருவித்தில் மீண்டும் இராச்சியம் கிடைத்து விட்டது தானே.. பிறகுமேன் வீணாக மனதை அலைய விடுகிறீர்கள்

சங்கி : (சங்கிலியன் கவலையுடன்) நடந்தவற்றை எண்ணிக் கொண்டேன்.. இரைமீட்டேன்.. தேவி.. நீ நினைப்பது போல உன் கணவன் உத்தமனல்லன்.. அப்படி ஒரு எண்ணம் இருந்தால் அதை இக்கணமே.. மாற்றிக் கொள்.

அரசி : நாதா... நீங்கள்... இன்று என்னவெல்லாமோ பேசுகிறீர்கள்.?

சங்கி : என்னவெல்லாமோ அல்ல... எல்லாவற்றையும் உன்னிடம் கூறி விடுகிறேன் கேள்.. அப்போதாகிலும் என்மனச்சுமை குறையுதா பார்ப்போம்....

அரசி : சுவாமி..!

சங்கி : யாழ்ப்பாண இராச்சியத்தின் மன்னன் மகனாகப் பிறந்தேன். ஆனால் வைப்பாட்டி மகன் என்ற பெயர் என்னோடு ஒட்டிக் கொண்டது. கேலிக்கு ஆளானேன்..

அரசி : நாதா..

சங்கி : ஆம்.. எனக்கு எவ்விதத்திலும் யாழ்ப்பாண இராச்சியத்தின் முடி கிடைக்க வாய்ப்பே இல்லை என்ற நிலைமை.. எனது மனமோ அதை ஏற்கவில்லை.. விடவில்லை.. எப்படியும் அடைந்தே தீர வேண்டும் என்ற வைராக்கியம்...

அரசி : அப்போ...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சங்கி : நல்ல நண்பன். ஆம்... மனமொத்த நல்ல நண்பன் கனகராஜன் கிடைத்தான்... அதை விதி என்று தான் சொல்ல வேண்டும்.. இல்லை அதுவரை நடந்தவை எல்லாம் விதி என்று தான் கூற வேண்டும்..

அரசி : அதற்கென்ன.

சங்கி : நானும், என் மன ஏக்கத்தைப் புரிந்து கொண்ட நண்பன் கனகராஜனும், சதித்திட்டம் தீட்டினோம். அதன் பலன். பட்டத்து இளவரசர்கள் இருவரினதும் உயிர்...

அரசி : (ஆச்சரியத்துடன்) பிரபு..!

சங்கி : ஆம்.. பட்டத்து இளவரசர்களைச் சதித்திட்டம் தீட்டிக் கொன்று அப்பழியை வன்னியர் மீது போட்டோம். ஆனால் இது எனது தந்தைக்கு எப்படியோ கசிந்து விட்டது... சத்தியம் என்ற போர்வையில் மற்றவர்களது உயிரைக் காப்பாற்றி.. முடியை எனதாக்கிக் கொள்ளும் வழியை சுலபமாக்கினார்.. எமது சதி..

அரசி : இதில் எதுவும் சதியல்ல.... சதியென்றே கூறாதீர்கள்.. விதி.. ஆம் விதி.

சங்கி : தேவி..

அரசி : நடந்தவை அனைத்தையும் மறந்து இதுதான் விதியென்று எண்ணி யாழ்ப்பாண இராச்சியத்தை.. முடியை.. உரியவர்களிடம் கொடுத்து விடுங்கள்..

சங்கி : அதுதான் முடியாதே.. அதற்கும் விதி விடவில்லையே..

அரசி : மன்னா..

சங்கி : ஆம்.. அவர்கள் ஒருவரும் இங்கில்லை.. அனைவரும் போர்த்துக்கேயருடன் இணைந்து விட்டனர். (பதிந்து) தேவி...

அரசி : கூறுங்கள்..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சங்கி : நான் மன்னனாகிய வழி தவறானது எனினும் நாட்டுக்கோ நாட்டு மக்களுக்கோ என்றும் துரோகம் செய்யவில்லை.. செய்யப் போவதுமில்லை.. ஆம் நாட்டினை அந்நியர் வசம் போகவிடவுமில்லை.. விடப்போவதுமில்லை.. போர்த்துக்கேயத் தளபதியுடன் செய்து கொண்ட ஆறு அம்ச ஒப்பந்தத்தின்படி ஒரு போதும் போர்த்துக் கேயருக்குத் திறைசெலுத்தப் போவதுமில்லை.. அதற்கு போர்த்துக்கேயர் வசம் பணயக் கைதிகளாகவுள்ள என்பட்டத்து மகன் புவிராசனும் சேனாதிபதி சண்பகமாதாக்கரும் பலியாகினும் பரவாயில்லை.. அது அவர்களின் விதி... இது நாட்டின் விதி... ஆம் விதி....

...... நிறைவு ......

(1519 முதல் 1561 வரை யாழ்ப்பாணத்தை நல்லூரிலிருந்து ஆட்சி புரிந்த மன்னன் சங்கிலி செகராசசேகரனின் வரலாற்றிலிருந்து)

(இலங்கை ஒலிபரப்புக்கூட்டுத்தாபன தமிழ்ச்சேவையில் 11.05.2018 அன்று ஒலிபரப்பப்பட்டது)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 3. து ரோ க ம்

(1798-1805 வரையான ஆங்கிலேயர் ஆட்சி புரிந்தகாலத்தில் வன்னியின் இறுதி மன்னன் பண்டாரவன்னியனின் வரலாற்றிலிருந்து)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



| | | | |
|---|---|---|---|
| பண்டாரவன்னியன் | - ஜெயரஞ்ஜன் யோகராஜன், | காக்கை வன்னியன் | - கே சந்திரசேகரன் |
| நல்லநாச்சான் | - கலாவர்ஷினி | கப்டன் டிறிபேர்க் | - சிவராசா தக்கீசன் |
| கைலாய வன்னியன | - செ. அம்பலவாணர் | அரண்மனைச் சேவகன் | - திருக்கேதீஸ்வரன் |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 3. துரோகம்

நாடக மாந்தர்கள் :

- பண்டாரவன்னியன் — வன்னியின் மன்னன்
- நல்லநாச்சன் — பண்டாரவன்னியனின் தங்கை
- கைலாயவன்னியன் — பண்டாரவன்னியனின் தம்பி
- காக்கை வன்னியன் — வன்னியின் குறுநில மன்னன்
- கப்டன் டிறியேர்க் — ஆங்கிலேயத் தளபதி
- அரண்மனைச் சேவகன்

காட்சி : 1

களம் : பண்டாரவன்னியன் அரசவை

மாந்தர்கள் : சபையோர், பண்டாரவன்னியன்,
கைலாயவன்னியன், நல்லநாச்சன்

(பண்டாரவன்னியன் அரசவைக்கு தங்கை நல்லநாச்சனுடன் வரல்)

குரல் அணை :

பல்லாண்டு பல்லாண்டு பல்லாயிரம் ஆண்டு
பலகோடி நூறாண்டுகள்...
பார்போற்ற பலர்போற்ற வன்னியை ஆட்சி செயும்
மன்னவா நீ வாழ்கவே.. !!
பண்டார வன்னியா நீ வாழ்கவே.!!
வன்னியின் இதயமாம் பனங்காமப் பதியிலே
முன்னர் புகழ் ஆட்சிபுரிந்த...
மங்கையர் திலகமாம் மாவீர வன்னிச்சி
நல்ல நாச்சியார வளுக்கு
நல்ல நாச்சியார வளுக்கு
அஞ்சலி செலுத்திடவே தன்அருமைத் தங்கையுடன்
வந்தவா நீவருகவே..!!
மன்னவா நீ வருகவே.. !!
மன்னவா நீ வருகவே.. !!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண்டா : நன்றி.. அமருங்கள்.. அமருங்கள்..அடங்காப்பற்றின் வீரத்தை அகில உலகமும் பறைசாற்றி அந்நியப் படைகளை விரட்டியடித்த வீராங்கனை வீர வன்னிச்சி, நல்லநாச்சியாரை நினைவுகூரும் இந்தப் புனித நாளில் உங்களுடன் கலந்து கொள்வதில் மிக்க மகிழ்ச்சி.

அனைவ : வன்னியின் மாமன்னர் வாழ்க
மன்னன் பண்டாரவன்னியன் வாழ்க.. (திரும்ப)

பண்டா : இந்த வீரத்திருநாள்தான் எனது தங்கை நல்லநாச்சனின் பிறந்த நாளும் கூட... அது மேலும் மகிழ்ச்சியைத் தருகின்றது.

அனைவ : இளவரசி நல்லநாச்சன் வாழ்க
மன்னனின் கண்மணி நல்லநாச்சன் வாழ்க.. (திரும்ப)

நல்ல : அன்பான வன்னிவாழ் பெருமக்களே.. உங்கள் அனைவருக்கும் நன்றி. என்மீது நீங்கள் வைத்திருக்கும் அன்புக்கும் பாசத்துக்கும் நான் என்றும் தலைவணங்குகிறேன்.

பண்டா : இன்றைய இந்த நன்னாளில் அனைத்திற்கும் மகுடம் சூட்டுவது போல தமிழ் வித்தகர், சொல்லின் செல்வர், கவியின் காவலன், அறிவுக் களஞ்சியம், புலவர் புவியழகனை எமது அரண்மனைப் புலவராக நியமித்துள்ளேன் என்ற மகிழ்ச்சியான செய்தியையும் உங்களுடன் பகிர்ந்து கொள்ள விரும்புகின்றேன்.

அனை : புலவர் புவியழகன் அரண்மனைப் புலவரா..? பெரும் பாக்கியமல்லவா..

கைலாய : அதுமட்டுமல்ல எமது தங்கை நல்லநாச்சனின் தமிழ் ஆசிரியராகவும் பணிபுரிவார்..

பண்டா : நல்ல செய்தி.. காட்டு விநாயகர் கோவில் பூசைகள் ஒழுங்காக நடைபெறுகின்றது தானே..


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கைலா : ஆம் எந்தக் குறையுமின்றி நடைபெற்று வருகின்றது. குமாரபுரத்தில் அமைக்கப்பெற்று வருகின்ற சித்திரவேலாயுதர் கோயில் கட்டுமான வேலைகளும் முடிவடையும் தறுவாயில் உள்ளது.

பண்டா : நல்லது. இந்த நல்லநாளில் தங்கையுடன் சென்று கோவில் தரிசனம் செய்தால் நல்லது தானே..

கைலா : ஆம். பிறந்தநாளுக்கு குலதெய்வத்தின் ஆசியினைத் தவறாது பெற்றுக்கொள்வது நம் வன்னியின் மாண்புகளில் ஒன்றல்லவா. வாருங்கள் தாமதியாது செல்வோம்..

நல்ல : ஆம் அண்ணா.. வரும்போதே பூஜைத்தட்டும் ஆயத்தமாக எடுத்து வந்துள்ளேன். இப்படியே செல்லலாம்.

பண்டா : (சிரித்துக் கொண்டே) ம்.. நீ எனது தங்கை அல்லவா..

கைலா : இப்போதே புறப்பட்டால் சாயங்காலப் பூஜையைக் காணலாம்.. வாருங்கள் புறப்படுவோம்..

......... காட்சி மாற்றம் .........

**காட்சி : 2**

**களம் : பண்டாரவன்னியன் அரசவை**

**மாந்தர்கள் : காக்கைவன்னியன், பண்டாரவன்னியன்,**

காக்கை : (வந்து கொண்டு) வணக்கம் வன்னியின் மாமன்னர் பண்டாரவன்னியர் அவர்களே.. தங்களுக்கு காட்டு விநாயகர் கிருபையால் சகல சௌபாக்கியங்களும் கிடைப்பதாக.

பண்டா : நன்றி காக்கைவன்னியரே.. விநாயகர் அருள் பார்வை தங்களுக்கும் கிடைப்பதாக.. அதோ அந்த இருக்கையில் அமருங்கள். தங்கள் வரவு நல்வரவாகட்டும்..

காக்கை : நன்றி பண்டாரவன்னிய மன்னரே..

பண்டா : மிக நீண்ட காலத்திற்குப் பிறகு சந்திக்கின்றோம்.. என்ன செய்வது. ஆங்கிலேயரின் வருகைக்குப் பிறகு ஓய்வென்பதே இல்லை.. மனதுக்கும் உடலுக்கும் ஒரே அலைச்சல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காக்கை : ஆமாம் தாங்கள், தம்பியார் கைலாய வன்னியருடன் ஒல்லாந்த தேசாதிபதி அங்கிள்பிக்கை சந்தித்து மகிழ்ச்சியுடன் நட்புறவு பூண்டமை தொடர்பாக தேசாதிபதி குறிப்பிட்டார்.

பண்டா : (வேண்டாவெறுப்பாக) ம்.. தகவல் தங்களுக்கும் எட்டியுள்ளதா.. மகிழ்ச்சி.. அழைப்புக் கிடைத்தது.. சென்றேன். உதவிகேட்டார்கள்.. முடிந்ததை ஆம் என்றேன்.. அவ்வளவுதான்.. விசேடமாக குறிப்பிட எதுவுமில்லை.. ஏன் வேறு ஏதாவது கூறினார்களா..?

காக்கை : அப்படியெதுவுமில்லை.. நானும் நட்புரீதியில் சென்றேன் கதைத்தேன். தங்களுடன் ஏற்பட்ட நட்புப்பிணைப்பை மிக்க மகிழ்வுடன் பகிர்ந்து கொண்டார்கள். அவ்வளவுதான்..

பண்டா : அப்படியா..? ம். இருவரும் நட்பு ரீதியில் ஒப்பந்தம் செய்வோம் என்றனர். நண்பர்களுக்கிடையில் ஒப்பந்தம் எதற்கு என்றேன். மகிழ்வுடன் உடன்பட்டனர்.

காக்கை : ஆள்பவர்கள் அவர்கள். நட்புறவுடன் இருப்பது எமக்கும் நல்லது தானே..

பண்டா : தவறில்லைத் தான்.. ஆனால் அவர்கள் அந்நியர்கள்...

காக்கை : அந்நியர்கள் ஆனாலும்... ஆள்பவர்கள்...

பண்டா : ஆனாலும்.. அவர்கள் ஆளும் மண்ணின் சொந்தக்காரர் நாங்கள்..

காக்கை : என்றாலும் ஆள்பவருடன் நட்புரிமை கொள்வதில் தவறில்லைத் தானே..

பண்டா : அது உண்மையான நட்பு எனும் போது.. மனம் மகிழமுடியும். ஆனால் உள்ளொரு நோக்கம் வைத்து புறமொன்று பேசும் நட்பு ஆபத்தானது.

காக்கை : ஆனால் அது..

பண்டா : அது அந்நியர்களுக்கு மட்டுமல்ல நம்மவருக்கும் பொருத்தம்.. அது சரி... ஒல்லாந்தர் கதையைக் கதைத்து வந்தகதையை மறந்து விட்டோம்..

காக்கை : (தயங்கி) அது வந்து..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண்டா : தங்களது அதிகாரி தனிப்பட்ட விடயம் என்று கூறினார்..

காக்கை : ஆம். உண்மைதான் மனதில் ஒரு ஆசை.. தவறில்லை என்று எண்ணினேன்.. எனது வாழ்க்கையுடன் சம்பந்தப்பட்டதால் நானே நேரிடையாகவே கேட்கலாம் என்று எண்ணினேன்..

பண்டா : நல்ல எண்ணம். வெளிப்படையான மனப்பாங்கு.. தயங்காமல் கூறுங்கள்.. கேளுங்கள்...

காக்கை : ஆம். பண்டாரவன்னிய மாமன்னரே.. தங்களுடைய அருமைத் தங்கை அழகிலும் குணத்திலும் குறைவில்லாதவள்.

பண்டா : (ஏளனமாக) அது கடவுள் கொடுத்த கொடை.. அது மட்டுமல்ல பிறந்த இடம்.. வளர்ந்த சூழல்..

காக்கை : தங்களது அரண்மனைப்புலவரிடத்தில் தமிழும் பயிலுவதாகக் கேள்வியுற்றேன்...

பண்டா : பயிலும் பருவம். பயிலவேண்டும்.. தாய்மொழி அல்லவா.. கற்றுத்தேறுவதில் தவறில்லைத்தானே..

காக்கை : அதை யார் இல்லை என்றது.. கற்றுத் தேறாமலிருத்தல் தான் தவறு.. அத்துடன் தங்களின் தங்கைவேறு..

பண்டா : அதனால்..

காக்கை : அதனால்தான் என்றல்ல.. அதனாலும் தான்..

பண்டா : எதுஎன்றாலும் கூறுங்கள்...

காக்கை : ஆம் நேரடியாகவே விடயத்துக்கு வருகின்றேன். தங்கள் ஒரே தங்கை இளவன்னிச்சி நல்லநாச்சனை திருமணம் செய்யலாமென்று எண்ணி.. சம்மதம் கேட்க வந்தேன்.

பண்டா : (சிரித்து) மகிழ்ச்சி.. பெண்கேட்க வந்தீர்கள் என்று சொல்லுங்களேன்... அப்படித்தானே.

காக்கை : ஆமாம். தவறாக எண்ணி விடாதீர்கள்..

பண்டா : இதிலென்ன தவறு.. தாங்களும் கட்டிளம் காளை... அவளும் பருவப் பெண்... அப்படி இருக்கும் போது தாங்கள் கேட்பதில் என்ன தவறு..

காக்கை : அதனால் தான் கேட்டேன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண்டா : எனக்கு இதில் சிறிதளவும் ஆட்சேபனையில்லை..

காக்கை : (சந்தோசமாக) அப்போ..

பண்டா : ஆனால் திருமணம் எனக்கில்லையே.. திருமணம் செய்வது நானல்லவே...

காக்கை : உண்மைதான்.. ஆனால் நீங்கள் சம்மதம் கூறினால் உங்கள் தங்கை மறுக்கவா போகிறாள்..

பண்டா : (வேண்டா வெறுப்பாக) அதுவும் உண்மைதான். எனக்கிருப்பது எல்லாம் ஒரே தங்கைதான். நான் கூறினால் அவள் மறுக்கப் போவதுமில்லைத் தான்.. ஆனால் திருமணம் என்பது ஆயிரம் காலத்துப் பயிர்... தங்கையின் வாழ்க்கையில் தலையிட எனக்கு விருப்பமில்லை.. அதேபோல் அவளின் விருப்பத்துக்குக் குறுக்கே நிற்கவும் நான் விரும்பவில்லை..

காக்கை : அப்போ என்னதான் கூற வருகிறீர்கள்.

பண்டா : தங்கையின் வாழ்வு... அவளும் நாலும் அறிந்தவள்... நல்லது கெட்டது புரிந்தவள்.. தகவலைத் தெரிவிக்கிறேன்.. இவ்விடயத்தில் அவளின் விருப்பப்படி தான் நான் எதையும் செய்ய முடியும்.

காக்கை : அப்போ தாங்கள்.

பண்டா : (இடைமறித்து) அதுதானே அப்போதே கூறிவிட்டேனே.. அவளின் விருப்பத்துக்குக் குறுக்கே நிற்க ஒருபோதும் நான் விரும்பவில்லை.. அவள் முடிவுதான் இறுதியானது... அதை மறந்திட வேண்டாம். ஏனெனில் அவள்தான் வாழப் போகின்றவள்.. அவள் சம்மதம்தான் எனது முடிவு..

காக்கை : ஆம்.. முற்றிலும் உண்மைதான்... எதற்கும் சுமுகமான முடிவினை எதிர்பார்க்கிறேன்.

பண்டா : சஞ்சலப்படாது சென்று வாருங்கள்.. எல்லாம் நன்மையாகவே நடக்கும். விநாயகர் என்றும் துணைநிற்பார்...

....... காட்சி மாற்றம் ........



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**காட்சி : 3**

**களம் : பண்டாரவன்னியன் அரசவை**

**மாந்தர்கள் : பண்டாரவன்னியன், தங்கை நல்லநாச்சன்**

நல்ல : அண்ணா.. தாங்கள் திடீரென அழைத்த காரியம் யாதோ..

பண்டா : ஒன்றுமில்லை..

நல்ல : (சிரித்து) வரச்சொல்லி அழைத்து விட்டு.. ஒன்றுமில்லை என்றால்...

பண்டா : அது வந்து... வந்து...

நல்ல : (குழைந்து) வந்தும் போயுமென்று பீடிகை போதுமண்ணா.. தயக்கமேன் அண்ணா.. நேரடியாகக் கேட்டு விடலாமே..

பண்டா : நேரடியாகக் கேட்டதனால் தான்... அப்படியொரு கடமை இருப்பதையும் உணர்ந்தேன். (பதிந்து) மன்னித்துவிடம்மா..

நல்ல : யாரை யார் மன்னிப்பது.. கூறுங்கள் அண்ணா.. நேரடியாகக் கேட்டதா.. யார் அண்ணா.. (மனதுள்) சிலவேளை அவராக.. புலவர் பெருமானாக இருக்குமோ.

பண்டா : அதுவந்து.. உனக்கும் வயது வந்துவிட்டது.. திருமணத்துக்கான காலம் கனிந்து விட்டது என்பதை உணர மறந்துவிட்டேன் அம்மா...

நல்ல : அதுவா விடயம். அதற்கா இவ்வளவு தயக்கம்.

பண்டா : ஆம் அம்மா.. பருவத்தே பயிர் செய்ய வேண்டும் என்பதே அம்மாவின் ஆசையும்.. அதுமட்டுமல்ல காற்றுள்ளபோதே தூற்றிக் கொள்ளவும் வேண்டுமல்லவா..

நல்ல : என்னண்ணா.. காற்றுள்ளபோதே தூற்றிக் கொள்ள வேண்டும் என்று ஒருமாதிரிக் கூறுகிறீர்களே..

பண்டா : வேறு எதைத்தான் கேட்கிறாய் நல்லநாச்சன்..?

நல்ல : (மனதுள்) புலவர் பெருமானுடனான எனது காதல் விடயம் அம்மா வரை சென்று விட்டதோ.. யார் கூறியிருப்பார்கள்... அவரே கேட்டிருப்பாரோ.. சீச்சீ... அப்படியிருக்காது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண்டா : என்ன.. உனக்குள்ளேயே கதைக்கிறாய்..

நல்ல : (சமாளித்துக் கொண்டு) இல்லை நேரடியாகக் கேட்டதென்று கூறினீர்கள். அதுதான் இரண்டையும் இணைத்து யாராக இருக்கும் என எண்ணிப் பார்த்தேன்..

பண்டா : வேறு ஒருவருமில்லை. மன்னன் காக்கைவன்னியன் தான்.. உன்னைப் பெண்கேட்டு வந்தான்..

நல்ல : (ஏளனமாக) காக்கைவன்னியரா..?

பண்டா : ஆமம்மா.. காக்கை வன்னியரும் நாட்டை ஆள்பவன். வன்னிமை.. அழகும் வீரமும் கொண்டவர். பலசாலி.. இதைவிட வேறென்ன வேண்டும்..

நல்ல : (ஏளனமாக) ஆங்கிலேயரின் அடிவருடி..!

பண்டா : அப்போ அவனைப் பற்றி நன்றாக அறிந்து வைத்திருக்கின்றாய்.

நல்ல : ஆம் அண்ணா.. அறிந்து வைத்துள்ளேன். அதனால்தான் வேண்டாம் என்கிறேன். காற்று இருந்தாலும் தூற்ற வேண்டாம் என்கிறேன். அவ்வளவுதான்..

பண்டா : அதனால்தான் வேண்டாம் என்கிறாயா...? அன்றேல்..?

நல்ல : (மனதுள்) கேட்கும் விதத்தைப்பார்க்கும் போது நமது விடயமாக ஏதாவது அறிந்து வைத்துக் கொண்டு சுற்றிவளைத்து நாசூக்காகக் கேட்கின்றார் போலத் தோன்றுகின்றது..

பண்டா : என்ன நல்லநாச்சன் முதல் வினாவுக்கு வந்த வேகத்தில் இதற்குப் பதிலில்லையே.. கூறு.. தயக்கம் வேண்டாம்.. உன் மனக்கிடக்கையை அண்ணனிடம் தயக்கமில்லாமல் கூறு.. இது உனது விடயம்.. உனது வாழ்க்கை சம்பந்தமான விடயம்.. வாழப்போவது நீ தான்.. உன் மனதிலுள்ளதைக் கூறு.. உனக்கு விருப்பமில்லாத எதனையும் இந்த அண்ணன் வலிந்து திணிக்க மாட்டேன். அது நிச்சயம்.. தயங்காமல் கூறம்மா..

நல்ல : (தயங்கி) அது.. வந்து.. வந்து..

பண்டா : அதுதானே கூறிவிட்டேனே.. எதுவென்றாலும் தயங்காமல் கூறு தங்கையே..


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்ல : (தயங்கி) அண்ணா.. தந்தையில்லாத எனக்கு தந்தையாகவும் ஏன் தாயாகவும் அன்புகாட்டி அரவணைக்கும் தங்களுக்கு மனச் சங்கடத்தை ஏற்படுத்தி விடுவேனோ என அஞ்ச வேண்டியுள்ளது..

பண்டா : ஏன் அஞ்ச வேண்டும். இவ்வளவு காலம் இல்லாத அச்சம் இப்போது மட்டும் ஏன்வர வேண்டும்..

நல்ல : (தயங்கி) அது வந்து... வந்து.. நான் ஒருவரை என் மனதார விரும்புகின்றேன்.

பண்டா : (ஆச்சரியத்துடன்) ஒருவரை மனதார நீ விரும்புகிறாயா..? அதைக்கூற இவ்வளவு தயக்கமேன்.. (சிரித்து) நான் மறந்து விட்டேனோ என்று.. எனது பாகத்தையும் கையிலெடுத்து விட்டாய் போலும்...

நல்ல : இல்லையண்ணா.. அதுவந்து..

பண்டா : அது கிடக்கட்டும். உன்மனம் கவர்ந்த அந்த மகராசன் யாரம்மா.. உன் இதயம் கவர்ந்த அந்த இளவரசன் யாரம்மா?

நல்ல : அவர் இளவரசர் இல்லையண்ணா..

பண்டா : (ஆச்சரியத்துடன்) என்ன..? அ..அ..அ..அ.. இளவரசர் இல்லை என்றால்... யாரோ...

நல்ல : அவர்..ர்

பண்டா : (சிறிது கோபத்துடன்) என்னை இனியும் சோதிக்காதே.. யார் அந்தப் பாக்கியவான்.. இளவரசர் இல்லையென்றால்.. யார் அவன்..?

நல்ல : எனக்குத் தமிழ்கற்றுக் கொடுக்கிறாரே.. எமது அரசவைப் புலவர்..

பண்டா : (இடைமறித்து கோபத்துடன்) என்ன பாராளும் மன்னனின் தங்கை வாள்பிடிக்கத் தெரியாத ஏழைப் புலவனையா காதலிப்பது..? புலவர்புவியழகனையா எனது தங்கை காதலிக்கிறாள்...?

நல்ல : அண்ணா..!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண்டா : (கோபத்துடன்) ஆம்... ஏழைப்புலவனை நீ காதலிப்பதா.. அரச பரம்பரையில் வந்த நீ காதலிப்பதா..? பண்டார வன்னியனின் தங்கையின் கணவன் ஒருஏழைப் புலவனா..? எமது குலம்.. அந்தஸ்து.. நல்லநாச்சி.. நீ யாரோ ஒரு இளவரசனைக் காதலிக்கிறேன் என்று சொல்லு.. சகலதையும் நிறைவேற்றி வைக்கிறேன்..

நல்ல : அப்படியென்றால்..

பண்டா : ஆம்.. ஒரு புலவனைத் திருமணஞ் செய்து எமது குலத்துக்கே அவமானச் சின்னம் ஆகிவிடாதேயம்மா.. அரச பரம்பரைக்கே அவமானம்..

நல்ல : அண்ணா அப்படிக் கூறாதீர்கள்..

பண்டா : அப்போ எப்படிக் கூறச் சொல்லுகின்றாய் தங்கையே (கோபத்துடன்) புவியழகன் தமிழ்ப்பாடம் சொல்லிக் கொடுக்க வந்தானா.. அன்றேல் காதல் பாடம் சொல்லிக் கொடுத்து என் தங்கையின் மனதை கெடுக்க வந்தானா.. ம்.. எனது பிழை.. நெருப்பையும் பஞ்சையும் அருகருகாக வைத்தது நான் செய்த தவறு.

நல்ல : (அழுதழுது) அவரைக் குறைசொல்லாதீர்கள் அண்ணா.. எல்லாவற்றிற்கும் நான் தான் காரணம்.. நான் தான் காரணம்..

பண்டா : அம்மா..

நல்ல : ஆம் அண்ணா.. இருமனங்கள் ஒன்றாகும் போது அந்தஸ்தினைப் பார்ப்பதில்லை.. ஏதோ.. எனது விதி... (அழுது)... இப்படி அமைந்து விட்டது..

பண்டா : என்னம்மா.. என்னம்மா இது..

நல்ல : அண்ணா.. தங்களுக்கு விருப்பமில்லாது விடில்.. எமதும் குலப்பெயருக்கு பழிதேடித்தரத் தக்கதென்றால்.. (அழுது) எந்த ஒரு கட்டத்திலும்.. அண்ணா.. தங்களுக்கு விருப்பம் இல்லாதவரை.. தங்கள் அந்தஸ்துக்கு சமானமில்லாதவரை நான் ஒருபோதும் மணஞ் செய்யமாட்டேன்.. ஒருபோதும் உங்களைமீறி மணஞ்செய்ய மாட்டேன்.. திருப்திதானே..


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண்டா : (கலங்கி) நல்லநாச்சன்... வேதனையோடு கூறாதேயம்மா... உன்னை மன்றாடிக் கேட்கிறேன். ஆள்பவனுக்கு.. அரசு புரிபவனுக்கு குலப்பெருமை பெரிதம்மா.. ஆட்சி அதிகாரத்துக்கு அத்திவாரமே குலப்பெருமைதானே...

நல்ல : (அழுது) அண்ணா ! தங்களின் தங்கை தங்களின் ஆளும் ஆட்சிக்கோ, தங்களின் குலத்திற்கோ, தங்களுக்கோ, அபகீர்த்தி ஏற்படும் வகையில் ஒரு போதும் நடந்து கொள்ள மாட்டாள்.. உங்களின் விருப்பத்திற்கு மாறாக உங்கள் தங்கை எவரையும் திருமணஞ் செய்யவும் மாட்டாள். இது நிச்சயம்... எம்மையெல்லாம் காத்தருளும் வற்றாப்பளை கண்ணகித் தாயின் மீது சத்தியம் அண்ணா.. கவலையை விடுங்கள்..

பண்டா : (தழுதழுத்து) நல்லநாச்சன்..

நல்ல : (காட்சி முடியும் வரை அழுதழுது) ஆம். அண்ணா.. அதே வேளை நான் வேறொருவரைத் திருமணஞ் செய்யப் போவதுமில்லை.. என்றும் கன்னியாகவே... தங்களின் தங்கையாகவே இருப்பேன்.. இப்பொழுது தங்களுக்குத் திருப்திதானே..

பண்டா : அப்படிக் கூறாதேயம்மா..

நல்ல : ஆம் அண்ணா ! கற்புள்ள மங்கையொருத்தி தனது இதயத்தில் ஒருவருக்கு மட்டுமே அமர இடம்கொடுப்பாள். அது எனது விடயத்திலும் மாறாது அண்ணா..

பண்டா : வீண்பிடிவாதம் வேண்டாமம்மா.. தற்போது நீ இருக்கும் நிலையில் உன் இதயத்தைக் கீறிக் கிழிக்க விரும்ப வில்லையம்மா...

நல்ல : அண்ணா.. நல்லநாச்சன்.. இந்த வன்னிச்சி உன்தங்கை.. அதை மறந்துவிடாதே..

பண்டா : அதில் மாற்றுக்கருத்திற்கிடமேது.. சரி.. எதற்கும் காலம் தான் பதில் சொல்லும்.. இப்பொழுது மனைதைத் தேற்றிக்கொள்.

....... காட்சி மாற்றம் ......



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**காட்சி : 4**

**களம் : பண்டாரவன்னியன் அரசவை**

**மாந்தர்கள் : பண்டாரவன்னியன், கைலாயவன்னியன், காக்கைவன்னியன், நல்லநாச்சன்,**

கைலா : மன்னா காக்கை வன்னியரிடமிருந்து ஓலை கிடைத்துள்ளது..

பண்டா : அப்படியா..? அதன் உள்ளடக்கம் என்னவோ..? தன்னைப் போல் எங்களையும் ஆங்கிலேயருக்கு திறைசெலுத்தி அடிமையாக இருக்கும் படி கேட்டுக் கொண்டானா.. மானம் கெட்டவன்.. குலத்தைக் கெடுக்க வந்த கோடரிக்காம்பு..

கைலா : அதுவும்தான்.. ஆனால் அது அல்ல..

பண்டா : அப்போ..

கைலா : தங்கை நல்லநாச்சனைப் பெண் கேட்டு அனுப்பியிருக்கிறான்..

பண்டா : நேரில் கேட்டான். தங்கையின் முடிவைக் கேட்டுச் சொல்லுகிறேன் என்றேன்.. இப்போ தங்களுக்கு ஓலை அனுப்பியிருக்கிறானா.. (எரிச்சலுடன்) என்னவென்று நினைத்துக் கொண்டான்..

கைலா : நாசூக்காக இன்னொன்றையும் குறிப்பிட்டுள்ளான்..

பண்டா : அப்படி என்னவிடயம்.. விரும்பியது கிடைக்காதுவிடில் எதையும் செய்யத் துணிந்தவன். ஆட்சி அதிகாரத்தை விரிவாக்குவதற்கு வெள்ளையனிடம் சேரவில்லையா.. அது போலத்தான். என்ன விடயம் கூறுங்கள்?

கைலா : தங்கையை மன்னனுக்குக் கொடுக்காமல் அவைப் புலவர் புவியழகனுக்குக் கொடுக்கப்போகிறீர்களா என ஏளனம் வேறு..

பண்டா : (ஆச்சரியத்துடன்) இந்தவிடயம் காக்கைவன்னியனுக்கு எப்படி..?

கைலா : விடுகதை போட்டு இணங்கவைக்க முயற்சிக்கிறான் போலும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண்டா : ம். (கோபத்துடன்) வெள்ளையனுக்கு அடிமைச் சேவகம் செய்யும் மன்னன் என்று கூறப்படுபவனை விட தமிழே தன் உயிர் மூச்சு என்று வாழ்ந்து கொண்டிருக்கும் புலியழகன் மேல்.. அதை அவன் அறிந்து கொள்ள வேண்டும்..

கைலா : கோபம் வேண்டாம் சற்றுப் பொறுங்கள் எதற்கும் தங்கையிடம் நேரடியாகக் கேட்டுத்தான் பார்ப்போமே..

பண்டா : அவள் சத்தியம் செய்து தந்திருக்கிறாள்... ஒரு புலவனைத் திருமணஞ் செய்வதில்லை என்று.. பிறகென்ன..

கைலா : அப்படி இருக்கும் போது காக்கைவன்னியன் இப்படி ஓலை எழுதியிருக்கிறானெண்டால்... அவ்வளவு திமிரா..?

பண்டா : அதுதான் நானும் பார்த்தேன்.
(பின்னணியில் வாள்சண்டை. தொடர்ந்து ஆ, ஊ என்ற நல்லநாச்சன் மற்றும் காக்கை வன்னியனின் ஓலம்)

கைலா : அண்ணா.. நந்தவனப்புறத்தில் ஏதோ சலசலப்புக் கேட்கிறதே.. தங்கையின் குரல்வேறு..

பண்டா : காக்கைவன்னியரின் முனகலும் கேட்கிறது.. வாருங்கள் சென்று பார்ப்போம்.

காக்கை : (முனகிக்கொண்டு) நேரே கேட்டேன்.. பதிலில்லை..ஓலை அனுப்பினேன் அதற்கும் பதிலில்லை.. புலவரின் உறவைக் கொச்சைப்படுத்தி ஓலை அனுப்பினேன்.. அதற்கும் பதிலில்லை.. எதற்கும் நல்லநாச்சனிடம் நேரேயே கேட்போம் என்று வந்தேன்.. புலவன் தானே என்று நையாண்டி பண்ணினேன். அவன் புலவனல்ல.. புலவன் வேடத்திலிருந்த மன்னன் என்பதை அறிந்திருந்தால் இவ்வளவு முயற்சியும் செய்திருக்க மாட்டேன்..ம். ஆ..

பண்டா : (பின்புலத்தில்) என்ன..? புலவன் வேடத்திலிருந்த மன்னவனா..?

கைலா : (பின்புலத்தில்) பொறுங்கள் மன்னா.. மறைந்திருந்து முழுவதையும் கேட்போமே...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காக்கை : (தொடர்ந்தும் முனகிக் கொண்டு) சூழ்ச்சிக்காரன்.. பண்டார வன்னியன் சூழ்ச்சிக்காரன்.. துரோகி.. தனது நண்பன் நுவரவன்னியன் மகன் குமாரசிங்கவன்னியனை புலவன் என்ற மாறுவேடத்தில் அரண்மனையில் வைத்திருந்தானா. இந்த உண்மை தெரிந்திருந்தால் இவ்வளவுதூரம் வீண் வம்புக்குப் போயிருக்கமாட்டேன்.. இப்போ ஆப்பிழுத்த குரங்கின் நிலை..

பண்டா : (பின்புலத்தில்) புலவன் புவியழகன்.. நுவரவன்னியன் மகன் குமாரசிங்கவன்னியனா?..

கைலா : (பின்புலத்தில்) நான் அன்றே பார்வையில் எண்ணினேன்.. இராஜகம்பீரமும் களையும் தென்பட்டது..

காக்கை : துரோகி.. பண்டாரவன்னியா.. நீ துரோகி.. நீ ஒரு மாபெரும் துரோகி.. எனது காதல் காற்றோடு கரைந்துவிட்டது. கற்பூரமாய்க் கரைந்துவிட்டது. இனி.. இனி.. ஓலையுமில்லை.. உலக்கையும் இல்லை.. துரோகத்திற்கு துரோகம் தான் பரிசு.. பண்டார வன்னியா... காக்கை வன்னியனை நீ யாரென்று நினைத்தாய்... இன்று நாட்டை ஆளும் ஆங்கிலேயரின் நண்பன். வெள்ளையனின் விசுவாசி.. அதை மறந்திடாதே.. துரோகத்திற்கு துரோகம் தான் பரிசு.. பார்த்துக்கொள்.. போகிறேன்.. இப்போதே போகிறேன். வெள்ளையரிடம் இப்போதே போகிறேன்..

நல்ல : (கோபத்துடன்) கபடநோக்கம் கொண்டவனே.. புலவர் பெருமான் பாடம் சொல்லிக் கொடுக்கும் இடத்தில் களவாக வந்தது மட்டுமன்றி களேபரம் செய்ய முயன்றீரே.. பார்த்தீரா.. நன்றாக வாங்கிக் கட்டினீர்.. இப்போதாவது உண்மையைப் புரிந்தீரா.. (ஏளனத்துடன்) எமக்கும் புரியவைத்தீர்..

காக்கை : ம்... ஆ... வெந்தபுண்ணில் வேல் பாய்ந்தது மாதிரி நாராசமான வார்த்தைகள்..


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்ல : பண்டாரவன்னியனின் புலவன் ஒரு மன்னனின் மைந்தன், வீரன், உம்மை மாதிரிக் கோழை அல்லன் என்பதைப் புரிந்து கொண்டீரா..? புலவன் என்றவுடன் ஏளனமோ.. இளக்காரமோ..? இதுபோதுமா.. அண்ணா வருமுன் ஓடித்தப்பும்.. உமது உயிராவது பிழைக்கும்.. போய் அண்டி வாழும் ஆங்கிலேயர் இடத்தில் நடந்ததைக் கூறும்..

பண்டா : (பின்புலத்தில்) உன்னை நான் உயிரோடு விட்டால்தானே நீ ஆங்கிலேயரிடத்தில் போவதற்கு... எனது நந்தவனத்தில் வந்து.. எனது தங்கையிடம்..

கைலா : ((பின்புலத்தில்) இடைமறித்து) வேண்டாம் போகட்டும் விட்டு விடுங்கள். கொலை செய்வது மிக இலகு.. ஆனால் தங்கையின் பெயருக்கும்.. இழுக்கு.. வேண்டாம் மன்னா.. அதுவும் நன்மைக்குத்தான். அதனால் தானே புலவர் யாரென்ற உண்மை எமக்கும் புரிந்தது.. எல்லாம் நன்மைக்கே என்று இருங்கள். வாளை உறையில் போடுங்கள்... இங்குநடந்த சம்பவங்கள் எமக்குத்தெரியும் என்று எவருக்கும் காட்டிக் கொள்ள வேண்டாம்.

பண்டா : உண்மைதான்.. ஆனால் மறுபுறம் அடிபட்ட பாம்பு சும்மா கிடவாது.. ஆங்கிலேயரின் காலைச்சுற்றத் தொடங்கும்.

கைலா : உண்மைதான்.. ஆனால் நாம்தான் எதற்கும் பொறுமைகாக்க வேண்டும்..

............ காட்சி மாற்றம் .............

**காட்சி : 5**

**களம் : பண்டாரவன்னியன் அரசவை**

**மாந்தர்கள் : பண்டாரவன்னியன், கைலாயவன்னியன்**

பண்டா : தம்பி கைலாயவன்னியா.. கண்டி மன்னனிடமிருந்து ஓலை வந்திருக்கிறது..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கைலா : (சிரித்து) என்ன பெண் கேட்டா..

பண்டா : (சிரித்து) இல்லை.. இல்லை.. அது தான் முடிந்த விடயமாயிற்றே.. புலவன் புவியழகனுக்குத் தங்கை அவ்வளவு தான்.

கைலா : ஏன் அப்படிக் கூறுகிறீர்கள்.. குமாரசிங்க வன்னியனுக்கு என்று கூறுங்கள்

பண்டா : தங்கை விரும்பியது புலவர் புவியழகனைத் தானே அதனால் கூறினேன்..

கைலா : இனித் தடையொன்றும் இல்லைத்தானே.. நல்ல முகூர்த்தத்தில் நிறைவேற்றி வைப்போம்..

பண்டா : ஆம். அப்படியே செய்வோம்.. சோதிடரிடத்தில் சென்று நல்ல நாள் குறியுங்கள்.

கைலா : ஆம்.. ஆம்.. அப்படியே செய்வோம். அதிருக்க கண்டி மன்னனின் செய்தி என்னவோ..

பண்டா : வெள்ளையரின் படையெடுப்பை முறியடிக்க உதவி கோரியிருக்கிறான்.

கைலா : அப்படியா.. நமது சகோதரர்களாகிய சிங்களவர் வாழும் கண்டிப் பிரதேசத்தை கைப்பற்ற ஆங்கிலேயர் பெரிய படைகளை அனுப்பி இருப்பதாகக் கேள்வி.

பண்டா : ம் அதையே கண்டி மன்னனும் குறிப்பிட்டுள்ளான்.

கைலா : இச்சந்தர்ப்பத்தில் சிங்கள மக்களுக்கு ஆதரவாகவும் வெள்ளையனுக்கு எதிராகவும் எங்கள் படைகளை அனுப்பி வைப்பதே நல்லது..

பண்டா : ஆம் தம்பி.. நமது நாட்டில் விளைகின்ற ஏலம், கறுவா, கராம்பு, யானைத் தந்தம் போன்றவற்றை கொள்ளையடிக்கும் ஆங்கிலேயக் கும்பலுக்கு நாடுபிடிக்க இடம் கொடுக்கலாகாது.

கைலா : ஆம் அண்ணா.. இன்று கண்டி.. நாளை.. வன்னி..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண்டா : ஆம்... உண்மைதான். சிங்கள மக்களையும் கண்டி இராச்சியத்தையும் காப்பாற்ற தாமதியாது எமது படைகளைக் கண்டிக்கு அனுப்ப ஆயத்தம் செய்வாயாக..

கைலா : ஆம்.. கண்டிக்கு நமது படைகளை அனுப்புவதால் இரண்டு நன்மைகள் உண்டு..

பண்டா : விளங்கவில்லையே?

கைலா : ஒன்று சிங்கள மக்களைக் காப்பாற்ற உதவி புரிந்ததாக இருக்கும்.

பண்டா : மற்றது..?

கைலா : ஆங்கிலேயருக்கு எமது படைபலத்தைக் காட்டக் கூடியதாகவும் இருக்கும். எம்மீது படையெடுக்கும் எண்ணமிருந்தால் அதை மீள்பரிசீலனை செய்யத் தூண்டும்...

பண்டா : அது முற்றிலும் உண்மைதான். தாமதியாது படையனுப்ப ஒழுங்குகளைச் செய்... நான் சம்மதம் தெரிவித்து கண்டி மன்னனுக்கு பதில் ஓலை அனுப்புகிறேன்.

......... காட்சி மாற்றம் .........

**காட்சி : 6**

**களம் : ஆங்கிலேயத்தளபதி வாசஸ்தலம்**

**மாந்தர்கள் : பண்டாரவன்னியன், தளபதி யுவெல்**

யுவெல் : வாரும் வன்னித் தலைவரே... வெல்கம் பண்டார வன்னியரே.. சிற் டவுண்.

பண்டா : நன்றி.. தளபதி யுவெல் அவர்களே.. தங்கள் ஓலைகிடைத்தது.. வந்தோம்.. வரச் சொல்லிய காரணம்..

யுவெ : வன்னியர் வேந்தே... இன்று அகில உலகமுமே எமது ஆணைக்குள் வந்திருக்கும் இவ்வேளையில்..

பண்டா : (இடைமறித்து சிறிது கோபத்துடன்) இவ்வேளையில்..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யுவெ : தங்களுடன் பரஸ்பர அன்பு கொண்டாடி நண்பர்களாக இருக்க விரும்புகின்றோம்..

பண்டா : (பதிந்து) அப்படியா.. தாராளமாக.. அதற்கு எந்த விதமான தடையுமில்லை தளபதி யுவெல் அவர்களே..

யுவெ : நல்லது நண்பா.. நாங்கள் காக்கை வன்னியனிடம் இருந்து கரிக்கட்டு மூலையையும் முல்லைத் தீவையும் பெற்றுக் கொண்டோம்.

பண்டா : (ஏளனமாக) மிக்க நல்லது.. காக்கைவன்னியன் கொடை வள்ளல்.. தருமபூபதி.. தங்களுக்குத்தேவையானதை வாரி வழங்கினான்.. அதிலென்ன அதிசயம்..

யுவெ : (திமிருடன்) அதிசயமில்லாமல் இல்லை.. நாங்கள் ஆள்பவர்கள். யாழ்ப்பாணக் குடாநாடும் வன்னியின் பெரும் பகுதியும் எமது ஆங்கில ஆட்சிக்கு உட்பட்டது. நீர் மட்டும் தனித்து வாழ்வதில் அர்த்தமில்லை.

பண்டா : அப்படியென்றால் அதற்கு அர்த்தம் சொல்லிக் கொடுக்கவா என்னை அழைத்தீர்கள்.

யுவெ : அப்படியில்லை.. பணிந்து வாழ்ந்தால் பலனுண்டு என்று கூறவந்தேன்.

(தொடர்ந்து தர்க்கித்தல்)

பண்டா : பணிந்து வாழ்தல் எங்கள் பரம்பரையிலேயே கிடையாது அதை அறிந்து கொள்ளுங்கள்.

யுவெ : ஆணவமாகப் பேசினால் ஆபத்து நேரிடும்.

பண்டா : ஆபத்து தங்களைத்தான் அணுகிவருகின்றது. என்னையல்ல அதைப்புரிந்து கொள்ளுங்கள்.

யுவெ : பண்டாரவன்னியா.. யாருடன் கதைக்கின்றாய் என்பதை உணர்ந்து பேசு... நாவை அடக்கிப் பேசு

பண்டா : பண்டாரவன்னியன் நாவை ஆங்கிலேயர் அடக்குவதா..?

யுவெ : பெரும் அழிவைத் தேடப்போகிறீர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண்டா : (ஏளனமாகச் சிரித்து) ஆடு நனைகின்றது என்று ஓநாய் கண்ணீர் விட்டதாம்.

யுவெ : ஆங்கிலேயரைப் பகைத்தால்..

பண்டா : (மறித்து) அழிவென்று சொல்லவருகிறீர்கள். அப்படித்தானே யுவெல்துரை அவர்களே..

யுவெ : சரியாகப் புரிந்து வைத்திருக்கின்றீர்.

பண்டா : அதற்கு அஞ்சுபவனல்லன் இந்தப் பண்டார வன்னியன்.

யுவெ : பாம்புடன் விளையாடுகிறீர்..

பண்டா : பண்டாரவன்னியன் பாம்புக்குப் பருந்தாய் இருப்பானே அன்றி விருந்தாயிருக்க மாட்டான்.

யுவெ : இது வார்த்தை விளையாட்டல்ல. உம்முடைய விதியுடனான விளையாட்டு.. அடங்கி வாழ்ந்தால் அரசபோகம் நிலைக்கும். அன்றேல்..

பண்டா : அடங்கி வாழ்ந்து அரசோச்சுவதனை விட உயிர் போவது பரவாயில்லை.. என்றோ ஒருநாள் போவதுதானே..

யுவெ : எமக்குக் கொடுக்க வேண்டிய வரி..

பண்டா : அந்த வார்த்தைக்கே இடமில்லை..

யுவெ : வரி கொடுக்கத் தவறினால் வருந்த வேண்டி வரும்.

பண்டா : கண்டியில் வருந்தியது யாரென்று அறியாமல் பேசுகிறீர்.. தங்களது தளபதிபதியின் படை மண்ணோடு மண்ணாகியதை அறிந் தும் நாக்கூசாது எமக்கு எச்சரிக்கை விடுக்கின்றீர்.

யுவெ : அப்படியானால் முடிவு..

பண்டா : முடியாது என்பதே..

யுவெ : முடியாது என்றால்.. இதோ பாரும்.. (ஆணையிடல்) ம்.. கப்டன் டிறிபேர்க்.. அனைவரையும் உடனடியாக கைது செய்யுங்கள். (விழும் ஓடும் சத்தங்கள் கேட்கிறது) தப்பி ஓடவிடாதீர்கள். (சிறிதுநேரம்.. விழும் ஓடும் சத்தங்கள் கேட்கிறது)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யுவெ : ஓ.. மை கோட்.. குமாரசிங்க வன்னியனைத் தவிர அனைவரும் பிடிபடாமல் தப்பி விட்டார்களே.. முக்கியமாக பண்டார வன்னியன் கணப்பொழுதில் தப்பிவிட்டானே.. ம்.. நடந்தது நடந்துவிட்டது.. டோன்ற் வொறி.. பண்டார வன்னியனின் மைத்துனன் குமாரசிங்கவன்னியன் அகப்பட்டதே நமக்கு கிடைத்த வெற்றி கப்டன் டிறிபேர்க் அவர்களே..

.......... காட்சி மாற்றம் ............

**காட்சி : 6**

**களம் : ஆங்கிலேயத்தளபதி வாசஸ்தலம்**

**மாந்தர்கள் : காக்கைவன்னியர், தளபதி யுவெல்**

யுவெ : வாரும்.. காக்கை வன்னியரே.. தற்பொழுது தான் கப்டன் டிறிபேர்க் உம்மைப்பற்றிக் கதைத்து விட்டுச் சென்றார்..

காக்கை : கப்டன் டிறிபேக்கா.. ஏன் ஏதாவது அவசர அலுவலா.. தளபதி யுவெல் அவர்களே..?

யுவெ : முல்லைத்தீவில் அவரது படைகள் பண்டார வன்னியனிடம் தோற்றதால் மீளவும் யுத்தத்திற்கு செல்வதற்கு உமது உதவி தேவைப்படுகின்றது என்றார்..

காக்கை : எனது உதவியா.. கப்டன் டிறிபேர்க்குக்கா.. விபரமாகச் சொல்லுங்கள் தளபதியாரே..

யுவெ : பண்டாரவன்னியன் கொட்டம் அடங்க வேண்டும்..

காக்கை : ஆமாம்.. ஏற்கெனவே தலைக்கனம்.. திமிர் பிடித்தவன்.. முல்லைத்தீவுக் கோட்டை தகர்ப்பின் பின்பு அவனது அட்டகாசம் அதிகரித்து விட்டது. அடக்க வேண்டும்.

யுவெ : ஆமாம் சரியாகக் கூறினீர். மனிதர்களை மதிக்கத் தெரியாதவன்.

காக்கை : ஆமாம். இனத்தவன் என்றாகிலும் என்னையே மதிப்பதில்லை. எதற்கும் ஏளனம்..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யுவெ : பண்டாரவன்னியனிருக்கும் இடத்தில் நீர் இருந்திருந்தால்.. இருந்தால் எவ்வளவு சிறப்பாக இருந்திருக்கும் என்று கப்டன் டிறிபேர்க் ஆதங்கப்பட்டார்.

காக்கை : தளபதி யுவெல் அவர்களே..!

யுவெ : ஆம். பண்டாரவன்னியனிடமிருந்து ஆட்சியைக் கவர்ந்து உம்மிடம் ஒப்படைக்க வேண்டும் என்பதே.. கப்டனின் அவா..

காக்கை : ஆம்.. நல்லது.. அவனுக்குப் பாடம் படிப்பிக்க வேண்டும். அதற்கு என்னால் என்ன செய்யமுடியும்.

யுவெ : அப்படிக்கேளும் காக்கைவன்னியரே.. அப்படிப் பெரிதாக ஒன்றுமில்லை.. பண்டாரவன்னியனுடன் நட்புப் பூண வேண்டும்.

காக்கை : என்ன.. அந்த வஞ்சகன் பண்டாரவன்னியனுடன் நட்பா.. வெட்கம்..

யுவெ : என்ன.. உண்மையிலேயே நட்புரிமை கொண்டாடச் சொல்லியா கேட்கின்றோம்..

காக்கை : அ.. அப்போ

யுவெ : ஒரு நடிப்புக்கு.. எமது காரியம் நிறைவேறும் வரை மட்டும்.. அவ்வளவு தான்..

காக்கை : அதுதானே பார்த்தேன்.. (மனதுள்) பண்டார வன்னியனிடம் நட்புக்கொள்வது என்பது..

யுவெ : என்ன கடுமையாக யோசனை.. நடிப்பதற்கும் தயங்குகின்றீரோ..?

காக்கை : இல்லை.. இல்லை.. அவன் எனது நிரந்தரப் பகையாளி. நடிப்புக்குத்தன்னும் நட்பு என்பது.

யுவெ : பகையாளியா..? இருவரும் வன்னியர்கள்.. அப்படியிருக்க உங்களுக்குள் நிரந்தரப் பகையா..?

காக்கை : ஆம் அவன் தங்கையின் திருமணவிடயமாக சிறிய மனத்தாங்கல்..

யுவெ : தங்கையின் திருமணவிடயமாகவா.. ஏன் மறுத்தானா.. அப்படியென்றால் போரில் வென்று அவளையும் கவர்ந்து வரலாம். ஒருகல்லில் இரண்டு மாங்காய் என்பதுபோல..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காக்கை : (தடுமாறி).. இல்லையில்லை. அதுவந்து. வந்து.. தங்கையைத் திருமணம் செய்யும் படி அவன்தான் தூதுமேல் தூதுவிட்டான்... (வேண்டா வெறுப்பாக) நான்மறுத்து விட்டேன்.

யுவெ : அப்போ விடயம் இன்னும் சுலபமானது.. திருமணத்திற்குச் சம்மதிப்பது போல் சிறிது காலத்திற்கு நடியும்.. அவ்வளவு தான்..

காக்கை : அவளை அரண்மனைப் புலவனுக்குத் திருமணஞ் செய்து வைத்து விட்டனர்..

யுவெ : நடிப்பதற்குக் கிடைத்த அருமையான சந்தர்ப்பம்.. தவற விட்டுவிட்டீர்..

காக்கை : அதற்கென்ன.. நடிப்புத்தானே.. நீங்கள் கவலைப்பட வேண்டாம்.. நடித்து..

யுவெ : (தொடர்ந்து) பண்டாரவன்னியனின் யுத்த தந்திரோபாயங்களை அவ்வப்போது நமக்குத் தெரியப்படுத்த வேண்டும்..

காக்கை : அவ்வளவு தானா..

யுவெ : ஆம்.. உமது தகவல்களின் மூலம் பண்டாரவன்னியனுடனான யுத்தத்தினைத் திட்டமிட்டுத் தொடங்கி.. அவனைத் தோற்கடித்து அந்த அரச கட்டிலைத் தாங்கள் அலங்கரிக்கும் அந்த காட்சியை நாங்கள் கண்குளிரக் காண வேண்டும்..

காக்கை : நன்றி தளபதி யுவெல் அவர்களே..

யுவெ : அதற்காக தங்களுக்கு நாங்கள் சகல உதவிகளும்.. ம். படைபலமுட்பட.. சகல உதவிகளும் தரத் தயாராகவுள்ளோம். நீங்கள் நடிப்பு மட்டும் தான்..

காக்கை : நீங்கள் இவ்வளவு தூரம் எனது நலனில்.. அதுதான்.. என்னை ஆட்சிக் கட்டிலில் அமர்த்துவதற்கு அக்கறை கொள்ளும் போது முடியாது என்று எப்படிக் கூறமுடியும்.?

யுவெ : ம்.. பிறகென்ன..

காக்கை : அவனை நம்பவைப்பதற்காக தாங்கள் ஒரு யுக்தியைச் செய்ய வேண்டும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யுவெ : கூறுங்கள்.. அப்படி என்னவோ காக்கைவன்னியரே..?

காக்கை : முல்லைத்தீவுக் கோட்டை இழப்பின் போது தங்களுக்கு சரியான ஒத்துழைப்பு வழங்காததால் தாங்கள் என்னைத் துரத்தி விட்டதாக கதை கட்டி விடவேண்டும்.

யுவெ : ஆ.. அவ்வளவு தானே.. !

காக்கை : அதனால் நான் தங்களைப் பழிவாங்கத் துடிப்பதாகவும் பலவழிகளிலும் பண்டாரவன்னியனின் காதுகளில் விழச் செய்ய வேண்டும்.

யுவெ : தாராளமாக..

காக்கை : மிகுதியை நான் பார்த்துக் கொள்கிறேன்.

யுவெ : காக்கைவன்னியரே.. எல்லாம் உமது நடிப்பில் தான் தங்கியுள்ளது. நாம் தயார்.. மணிமுடி உமது தலையில் ஜொலிப்பதை நாம் காண வேண்டும்.. கப்டன் டிறிபேர்க் நான் உட்பட அனைத்து ஆங்கிலேயரின் ஆசையும்.. அதுதான்..

காக்கை : தங்கள் ஆசை என்றும் நிராசையாகாது.. தயங்க வேண்டாம்.. நான் சென்று வருகிறேன்

......... காட்சி மாற்றம் .........

**காட்சி : 7**

**களம் : பண்டாரவன்னியன் அரசவை**

**மாந்தர்கள் : பண்டாரவன்னியன், கைலாயவன்னியன், காக்கைவன்னியன், நல்லநாச்சன்,**

கைலா : மன்னா.. போரிட்டு வெல்ல முடியாத வெள்ளைக்காரக் கோழைகள் செய்த கோழைத்தனத்தைப் பார்த்தீர்களா..?

பண்டா : என்ன செய்வது.. கப்டன் டிறிபேர்க்கை கொலை செய்யாது.. தனியே நிற்கிறாய் தப்பிப் பிழைத்துக்கொள் என்று செல்ல விட்டதற்குப் பரிசு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கைலா : எமக்கு உதவினார்கள் என்று ஒன்றுமறியாத முப்பது பேரை.. ஆம் குமாரசேகரமுதலியார் உட்பட முப்பது பேரைத் தூக்கிலிட்டுக் கொன்று விட்டனர்.

பண்டா : கைலாயவன்னியா.. யுத்தமென்று வந்து விட்டால்.. இன்னும் எத்தனை பேரோ..

கைலா : காக்கைவன்னியனையும் துரத்திவிட்டார்களாம். அவனும் வெள்ளையரைப் பழிவாங்கக் காத்திருப்பதாகத் தகவல்..

பண்டா : காக்கைவன்னியன் மட்டுமல்ல.. ஒவ்வொரு பிரஜையும் வெள்ளையனுக்கெதிராகக் கிளர்ந்தால் தான் வெற்றிப் பாதையில் நாம் பயணிக்கலாம்.

கைலா : உண்மைதான்.. ஆனால் காக்கைவன்னியரின் விடயத்தில் நாம் எதற்கும் எச்சரிக்கையாய் இருக்க வேண்டும் அண்ணா..

நல்ல : ஆமாம் அண்ணா.. அவன் அடிவாங்கிய நாகம் பழிவாங்கியே தீருவான்..

பண்டா : உண்மைதான்.. ஆனால் அவனில் ஓடுவதும் நமது இரத்தம்.. வன்னி இரத்தம்..

நல்ல : ஆனால் வெள்ளையரிடம் உண்டு வளர்ந்த இரத்தம்..

பண்டா : (சிரித்து) இதுவரை தங்கையின் கோபம் தணியவில்லைப் போலும். ஆனால் காக்கை வன்னியரால் தான் புலவர் புவியழகனைக் கரம்பிடிக்க முடிந்தது என்ற நன்றியுணர்வு சிறிதளவு தன்னும் இருக்க வேண்டும். மறக்க வேண்டாம்.

நல்ல : (சிணுங்கலுடன்) சும்மா போங்களண்ணா... விதி அதுதான் என்றால் அதை எவராலும் மாற்ற முடியாது.

கைலா : இருவர் சொல்வதிலும் உண்மை பொதிந்துள்ளது தான்.

நல்ல : (சிணுங்கலுடன்) உங்களுக்கு.. சரி சரி.. காக்கை வன்னியர் இன்று வெள்ளையருக்கு வேண்டாதவர். நல்லவர். வல்லவர். போதுமா.. (போய்க்கொண்டு) அழைத்து விருந்து வைத்துக் கொண்டாடுங்கள். நான் போய்வருகிறேன்.

கைலா : கோபத்தைப் பாருங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண்டா : அது பெண்களுடன் கூடப்பிறந்தது.. நாங்கள் கொடுத்த செல்லம் வேறு..

கைலா : ம்.. உண்மைதான்

பண்டா : தம்பி ! காக்கைவன்னியன், கூடியிருந்த வெள்ளையரின் சுயரூபத்தை தாமதித்துத்தான் எடை போட்டிருக்கலாம் என்று என் மனசாட்சி கூறுகிறது..

கைலா : அப்படியும் இருக்கலாம் தங்கை கூறியது போல் சூழ்ச்சியாகவும் இருக்கலாம் எதற்கும் நாம் எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும்

பண்டா : அதோ அவரே வருகின்றார். காக்கைவன்னியரே நமைத்தேடி வருகிறார்.. வாரும் காக்கை வன்னியரே.. என்ன பாதை மாறிவந்து விட்டீரோ..?

காக்கை : வணக்கம் மகாராஜா.. வணக்கம்.. பாதை மாறி வந்து விட்டேன் என்று கூறி வெந்த புண்ணில் வேல்பாய்ச்சாதீர் மன்னவா.. எப்படியும் இருவரும் வன்னியர் தானே.. நீரடித்து நீர்பிரியுமா.. என்னை மன்னித்தேன் என்று கூறுங்கள்

பண்டா : யார் யாரை மன்னிப்பது... உம்மை மன்னிப்பதற்கு நான் யார். ஆண்டவன் இருக்கின்றான்.

காக்கை : நாம் ஏதோ வெளுத்ததெல்லாம் பால் என்று நம்பியதற்குக் கிடைத்த தண்டனை. நான் செய்த தவறுக்குப் பிராயச்சித்தம் தேடவே இவ்விடம் வந்தேன் மன்னவா.. (காலில் விழல்)

பண்டா : சீச்சீ எழுந்திரும்.. என்ன நடந்தது.. விபரமாகக் கூறும்..

காக்கை : நம்பிக்கைத்துரோகிகள். வெள்ளையர்கள் துரோகிகள். இன்று வன்னிநாடு முழுவதையுமே தங்கள் கைப்பாவை ஆக்கத் துணிந்து விட்டார்கள். வெட்கத்தை விட்டுச் சொல்லுகிறேன். வன்னி நாடு முழுவதுக்குமே என்னை அரசனாக்குவோம் என்றார்கள். நம்பிக்கெட்டேன்.. இன்று வன்னி நாடு முழுவதையும் தாங்களே கபளீகரம் செய்யும் திட்டத்தையே செயற்படுத்துகிறார்கள் என எண்ணத் தோன்றுகின்றது..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண்டா : அது அவர்களின் குணம்.. வன்னியைத் தவிர இத்தீவின் மற்றைய பிரதேசமெங்கும் கோலோச்சுபவர்கள், வேறு என்ன எண்ணத்தைக் கொண்டிருப்பார்கள்.

காக்கை : மன்னா.. உண்மையை அறிந்தவுடன் உறவே வேண்டாமென்று அவர்களுக்கெதிரான போராட்டத்தில் உங்களுக்கு உதவி செய்யலாம் என்று வந்தேன்.

கைலா : தாமதித்தாயினும் ஆங்கிலேயரின் சுயரூபம் உமக்குப் புரிந்ததே...

காக்கை : என்ன செய்வது எனது அறியாமை..

கைலா : அண்ணா.. அறியாமை உள்ளவர்களை சேர்த்துக் கொள்வது எம்மையும் ஆபத்தில் மாட்டி விடும்.. எதற்கும் அவதானம் தேவை..

பண்டா : ஆபத்துத்தான். ஆனால் தஞ்சமென்று வந்தவர்களை தட்டிக்கழிப்பது வன்னியரின் வழமையல்லவே.. எதிரி என்றாலும் அடைக்கலம் கொடுக்க வேண்டியது நமது கடமை தம்பி..

காக்கை : அறியாமையினால் செய்த தவறினை மன்னித்து எனக்கு அடைக்கலம் கொடுத்தமைக்கு நன்றி மன்னா. இனி நான் தங்கள் அடிமை. தாங்கள் கூறும் பணியைச் சிரமேற்கொண்டு நடைமுறைப்படுத்த ஆயத்தமாக உள்ளேன்.

கைலா : (எச்சரிக்கையாக) அண்ணா

பண்டா : புரிகிறது தம்பி.. நாளை நமக்கும் இக்கதி வரலாம் பொறுத்திரு

காக்கை : இந்த ஏழையைப் பற்றி சரியாகப் புரிந்து வைத்திருந்தமைக்கு நன்றி மன்னா.. நான் என்ன செய்ய வேண்டும். ஆள்பலமா.. ஆயுத பலமா..? கூறுங்கள் வன்னியைக் காப்பாற்ற எவ்விதத்தில் என்றாலும் உதவத் தயாராகவுள்ளேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண்டா : வன்னிமீது ஆங்கிலேயர் எந்நேரமும் தாக்குதலை மேற்கொள்ளலாம்.. இது ஒவ்வொரு பிரஜையும் அறிந்தது. மன்னன் என்ற முறையில் அதனை எதிர்கொள்ள நாம் தயாராகவுள்ளோம். எனவே உமது படைபலம் தற்போதைக்குத் தேவைப்படாது.. நீங்கள் வெள்ளையரின் நெளிவு சுழிவுகளை நன்கறிந்தவர். அந்த விதத்தில் எமக்கு உறுதுணையாக இருந்தால் போதும்.

காக்கை : நன்றி மன்னா.. நானும் உங்களில் ஒருவன் என்பதனை ஏற்றுக் கொண்டமைக்கு நன்றி மன்னவா.. (போய்க் கொண்டு) வருகிறேன் (நரி ஊளையிடுதல்)

கைலா : அண்ணா.. நரியொன்று ஊளையிடுகின்றதே

பண்டா : எனக்கும் கேட்கின்றது.. எங்கேயோ தொலை தூரத்தில் எதற்காகவோ ஊளையிடும் நரியைப் பற்றி நாம் ஏன் வீணாக அலட்டிக் கொள்ள வேண்டும்.

கைலா : ஆனால்..

பண்டா : (இடைமறித்து) புரிகின்றது.. நடப்பது நடந்தே தீரும்... ம்... பொறுத்திருந்து பார்ப்போம்.

............. காட்சி மாற்றம் .............

**காட்சி : 8**

**களம் : யுத்தகளம்**

**மாந்தர்கள் : நல்லநாச்சன்**

(யுத்தத்தில் குமாரவன்னியன் இறந்து விடுகிறான்)

நல்ல : (அழுது கொண்டு) ஆ..! அத்தான்.. வன்னித் தாயினைக் காக்க போராடிய பொன்மேனி இன்று நெஞ்சிலே வெள்ளையரின் குண்டினை ஏற்று அசையாமல் கிடக்கின்றதா.. அத்தான்.. தமிழ் கற்றுத்தர என்று வந்து என் கரம் பிடித்தவரே.. புலவனாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்து எம் குலம்காக்க களம் புகுந்தவரே... வெள்ளையனை வென்றுவா என்று தானே போர்க்களம் புக விடைகொடுத்தேன்.. நீ செல் என்று அல்லவே.. அத்தான்.. என்னை விடுங்கள்.. இந்த வன்னி மாதாவை விட்டுப்பிரிய மனம் வந்ததா.. அத்தான்.. என்னைத் தனியே விட்டுப்பிரிய மனம் வந்ததா.. அத்தான்.. அத்தான்..

........... காட்சி மாற்றம் ........

**காட்சி : 9**

**களம் : பண்டாரவன்னியன் அரசவை**

**மாந்தர்கள் : பண்டாரவன்னியன், காக்கைவன்னியன்,**

(காக்கைவன்னியன் வஞ்சக மனப்பான்மையுடன் உரையாடல்)

பண்டா : காக்கை வன்னியரே.. தற்போது தான் உமது பங்களிப்பு இந்த வன்னி நாட்டிற்குத் தேவைப்படுகின்றது.

காக்கை : நானும் இந்தச் சந்தர்ப்பத்துக்காகத் தானே இவ்வளவு நாள் காத்திருக்கிறேன். கூறுங்கள்.

பண்டா : வெள்ளையர்கள் ஒருபுறம் திருகோணமலையில் இருந்து வந்து வெடிவைத்த கல்லில் முகாமிட்டு உள்ளார்கள். மறுபுறம் முல்லைத்தீவுக் கோட்டையும் விழுந்து விட்டது. எல்லாவற்றிற்கும் மேலாக எனது மைத்துனன் குமாரசிங்க வன்னியன் வெள்ளையரின் துப்பாக்கிக் குண்டுபட்டு எமையெல்லாம் விட்டுச் சென்று விட்டான்.. தம்பிமாரின் நிலைமையோ என்னவென்று அறியக் கிடைக்கவில்லை.. தனியொருவன் என்றாலும்..

காக்கை : (இடைமறித்து) அப்படிச் சொல்லாதீர்கள் மீண்டும் மீண்டும் அதையே சொல்லாதீர்கள்.. (வஞ்சகமாக) இப்படியான ஒரு சந்தர்ப்பத்துக்காகத்தான் அவர்களுக்கும் தகவலனுப்பி மிக நீண்டநாளாகக் காத்திருக்கின்றேன் மன்னா..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண்டா : அவர்களுக்கும் தகவலனுப்பிக் காத்துக் கொண்டிருக்கிறீரா..?

காக்கை : (சமாளித்து) ஆம் மன்னா.. தாங்கள் உதவி கோரும் போது உதவத் தயாராகவிருக்கும்படி எனது படைத்தளபதிகட்குத் தகவல் அனுப்பி தங்கள் உத்தரவை எதிர்பார்த்துக் காத்துக் கொண்டிருந்தேன் என்றேன்....

பண்டா : அதுதானே பார்த்தேன்.. நாம் சிறிதும் தாமதித்தல் ஆகாது.. உடனடியாகச் செயலில் இறங்க வேண்டும்.

காக்கை : கூறுங்கள் மன்னா....

பண்ட : இப்பொழுது நாம் புதுக்குடியிருப்பில் படைகளை நிலை கொள்ளச் செய்ய வேண்டும்.

காக்கை : ஆம்.. ஆனால் அதற்கு முன்னதாக ஒட்டு சுட்டானில் பலப்படுத்துவதுதான் சிறந்தது.

பண்டா : உண்மைதான். ஆனால். வந்து

காக்கை : (இடைமறித்து) தயக்கமேன் மன்னா.. ஒட்டு சுட்டானுக்கே அவர்களை வரச் சொல்லுகின்றேன். அதுவே பாதுகாப்பானது.

பண்டா : ஒட்டுசுட்டானுக்கே அவர்களை வரச் சொல்லுகின்றீரா.. யாரை..? யாருக்குப் பாதுகாப்பானது? ஒன்றும் புரிய வில்லையே..

காக்கை : இல்லை எனது சேனைகளை ஒட்டுசுட்டானுக்கு வரச் சொல்லலாம் என்றேன்.. அது அவர்களுக்கும் பாதுகாப்பானது. புதுக்குடியிருப்பில் நிலைகொள்ளப் போகும் படைகளுக்கும் பாதுகாப்பானது.. அதைத்தான் கூறினேன்.

பண்டா : ஆ அப்படியா..?

காக்கை : ஏதோ என் மனதில் தோன்றியதைக் கூறினேன். தங்களுக்கு திருப்தியில்லாது விடின் மீளமைக்கலாம்.. அதற்குமுன் ஒட்டு சுட்டானுக்கு சென்று நிலைமைகளை அவதானித்து வருவது நல்லது என எண்ணுகின்றேன்.

பண்டா : ஆமாம் அப்படியே செய்வோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காக்கை : நானே சென்று பார்த்துவரவா..? அன்றேல் நீங்களும் வந்துபார்த்து எனது படைகளின் நிலைமை பற்றித் திருப்தி கொள்ள வேண்டுமா..?

பண்டா : ம்.. நல்லயோசனை.. நானும் வருகிறேன்.

.......... காட்சி மாற்றம் ..........

**காட்சி : 10**

**களம் : ஒட்டுசுட்டான்**

**மாந்தர்கள் : பண்டாரவன்னியன், காக்கைவன்னியன், யுவெல்,**

(காக்கைவன்னியனின் வஞ்சகத்தினால் வெள்ளையர்கள் பண்டார வன்னியனைக் கைதுசெய்கின்றனர்)

பண்டா : துரோகி.. உனது படை எனக்கு உதவிக்கு வருகின்றது என்று கூறினாயே.. இதுதானா உனது படை.. இந்த வெள்ளையர்கள் தானா உனது தளபதிகள்.. துரோகி.. நயவஞ்சகா.. ஒட்டுசுட்டானுக்கு இவர்களைத்தான் வரச் சொன்னாயா.. என்னைப் புதுக்குடியிருப்பிற்கு செல்லாது ஒட்டுசுட்டானுக்கு அழைத்து வந்தது இதற்காகவா.. துரோகி..

காக்கை : (ஏளனமாக) இதில் என்ன துரோகத்தைக் கண்டீர்.. ம்.. மாவீரன் பண்டாரவன்னியரே..

பண்டா : எச்சில் நாயே.. (இளக்காரமாக) என்ன துரோகமா..? வஞ்சகவார்த்தைகள் பேசி எனக்கு உதவுவதாகக் கூறி எங்கிருந்தோ வந்த வெள்ளையனிடம் நயவஞ்சகமாகச் சிக்க வைத்தது..

காக்கை : (ஏளனமாக) ம்.. எங்கிருந்தோ வந்த ஊர்பேரறியாத ஏழைப் பரதேசிப் புலவனுக்கு எனது அன்பான கோரிக்கையையும் தட்டி நீ உனது தங்கையைக் கொடுக்கலாமென்றால்... எனக்கு அரசு கட்டிலைத் தரப்போகும் ஆங்கிலேயருக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உன்னைக் காட்டிக் கொடுத்ததில் என்ன துரோகத்தைக் காண்கிறீர்? மா.. மாபெரும் மன்னரே.. இன்று.. உமது தங்கையும் பொட்டிழந்தாள்.. நீரும் நாடிழந்தீர்..

பண்டா : அடக்கு வாயை.. தலைவிதி... எனது மைத்துனன் தாய் நாட்டிற்காக மார்பிலே குண்டேந்தி மடிந்தவனடா.. அவன் வீரன்.. வீரன்.. அது தனி மனித வாழ்க்கை.. இது வன்னி மண்ணின் சரித்திரம்.. சுதந்திரம்..

காக்கை : என்ன அப்படிப் பெரிய வன்னி மண்ணின் சரித்திரம்..

பண்டா : தன்மானம் என்று ஒன்றிருந்தால் இப்படி நாக்கூசாமல் பேசுவாயா.. துரோகி.. அடிவருடி.. அந்நியன் புகழ்பாடும் அடிவருடி.. எச்சில் இலைக்காகத் தாய்நாட்டைக் காட்டிக் கொடுக்கத் துணிந்த நயவஞ்சகத் துரோகி.

காக்கை : (ஆத்திரத்துடன்) வாயை அடக்கிப் பேசு.. வார்த்தைகளை அளந்து கொட்டு.. என்ன நடந்து விட்டது என்று கொக்கரிக்கிறாய். ஒன்றை மட்டும் நினைவில் வைத்துக்கொள்.. வன்னி மாதாவின் சுதந்திரம்.. ம்.. நேற்று ஆண்டவன் பண்டார வன்னியன்.. நாளை ஆளப்போகிறவன் காக்கை வன்னியன்.. அவ்வளவு தான்.. வேறொன்றும் இல்லை புரிந்துகொள்..

பண்டா : (ஏளனமாக) துரோகி.. அப்படியும் எண்ணிக் கொண்டு இருக்கிறாயா..

காக்கை : ஏனில்லை... அனைத்தையும் இழந்து தனியனாக நிற்கும் இந்த தருணத்திலாவது உனது வாயை அடக்கு.. வாளாலும் பயனில்லை.. வாயாலும் பயனில்லை.. அனைத்தும் முடிந்து விட்டது.. அதை நினைவில் வைத்திரு.. தேவையானால்..

பண்டா : தேவையானால்...

காக்கை : ஒன்றைப் புரிந்து கொள்... சூரியனே அஸ்தமிக்காதது ஆங்கிலேயர் இராச்சியம். உலகம் முழுதும் விரிந்து பரந்தது.. எமது வன்னி அவர்களுக்கு ஒரு துரும்பு..

பண்டா : (கோபத்துடன்) காக்கைவன்னியா..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காக்கை : கதறாதே... சொல்வதைக் காது கொடுத்துக் கேள்.. வீண் விதண்டாவாதம் புரிந்து உன் உயிரை விடுவதிலும் பார்க்க... என்னிடமும் ஆங்கிலேயரிடமும் மண்டியிட்டு மன்னிப்புக் கேள்... ஏதோ அவர்கள் விரும்பிய பகுதியைப் பெற்று ஆட்சியை நடாத்தி, கப்பஞ் செலுத்திக் கொண்டு உன் கடைசி காலத்தைப் போக்கு..

பண்டா : துரோகி.. துரோகி.. என்னைக் காட்டிக் கொடுத்தது மட்டு மன்றி அடிமைச் சாசனம் வேறு எழுதச் சொல்லுகின்றாயா.. அது உனக்குத் தானடா சரி.. வெள்ளையருக்கு வெண்சாமரை வீசி வெண்கொற்றக் குடைபிடிக்க உன்னால் மட்டும் தானடா முடியும்.. துரோகிகளால் மட்டும் தானடா முடியும்.. அற்ப பதரே அதைப்புரிந்து கொள்ளடா...

காக்கை : நான் என்னைப்பற்றிப் புரிந்து கொண்டுதான் உன்னிடம் வந்து சேர்ந்தேன்.. எனக்கு நீ புரியவைக்க வேண்டியதில்லை

பண்டா : ஆம்.. தம்பி கைலாயவன்னியனும் தங்கை நல்லநாச்சனும் தடுத்தபோது கேட்டிருக்க வேண்டும் இன்று.. துரோகி.. துரோகத்திற்குப் பரிசு...

காக்கை : (இடைமறித்து) உனது உயிர்.. நாளை ஆங்கிலேயரின் நீதி மன்றத்தின் தீர்ப்பின் படி உனது உயிர்..

பண்டா : காக்கைவன்னியா.. எனது உயிர் போகலாம் ஆனால்.. ஆனால் நாளைய சந்ததி உன்னைத் துரோகத்திற்கு அடையாளமாகத்தான் பார்க்கும்.. துரோகியாகத்தான் உன்னைப் பார்க்கும்.. துரோகியாகத்தான் உன்னைச் சரித்திரம் கூறும்...

........... நிறைவு ...........

*(1798 இலிருந்து 1805 வரையான காலப்பகுதியில் வன்னியை ஆண்ட இறுதி மன்னன் பண்டாரவன்னியன் வரலாற்றிலிருந்து (இலங்கை ஒலிபரப்புக்கூட்டுத்தாபன தமிழ்ச்சேவையில் 09.07.2018 ல் ஒலிபரப்பப்பட்டது)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பு. பெண்மை

(5000 ஆண்டுகளுக்கு முன் லங்காபுரியை ஆண்ட மன்னன் இராவணேஸ்வரனின் வரலாற்றிலிருநந்து)







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மறவன்புலோ ... அம்பலவாணரின் ... உருவான
'பெண்மை' நாடக ... வின்போது
சீதாதேவி: சரனுதா சிவகுருநாதன்
சூர்ப்பனகை: புஸ்பராணி சிவலிங்கம்
மண்டோதரி: கலிஸ்ரா திருச்செல்வம்
இராவணேசன்: K. சந்திரசேகரன்
வாலி: செ. அம்பலவாணர்
இராமபிரான்: சி. தக்கீசன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 4. பெண்மை

**நாடக மாந்தர்கள் :**

- **இராவணேசன் – இலங்கையை ஆண்ட மன்னன்**
- **இராமன் – தசரதன் மைந்தன்**
- **சூர்ப்பனகை – இராவணனின் சகோதரி**
- **மண்டோதரி – இராவணனின் மனைவி**
- **சீதை – இராமபிரானின் மனைவி**
- **வாலி – கிஷ்கிந்தை மன்னன்**

**காட்சி : 1**

**களம் : லங்காபுரி இராவணேசன் அரண்மனை**

**மாந்தர்கள் : இராவணேசன், சூர்ப்பனகை, விபீசணன்**

(ராவணேசன் சிம்மாசனத்திலிருக்க மூக்கறுபட்ட சூர்ப்பனகை தலைவிரி கோலமாக வரல்)

சூர்ப் : (கோபாவேசத்தோடு அழுதபடி) ஐயோ.. ஐயோ.. இதைக் கேட்க யாருமே இல்லையா.. எனது வேதனையை நான் யாருக்கெடுத்துரைப்பேன். சகோதரர்களுடன் கூடிப்பிறந்தும் என்ன என்று கேட்க எவருமில்லையே.. ஐயோ அறுபட்ட மூக்கிலிருந்து பாயும் குருதி முந்தானையையும்.. கொய்து சின்னா பின்னமாக்கிய முலைகளிலிருந்து பொங்கும் குருதி மார்புக்கச்சையையும் தோய்த்து.. இரத்தம் தோய்ந்த ஆடையுடன் நிற்பது எவருக்குமே தெரியவில்லையா.. சிவப்பரம்பொருளே நான் செய்த பாவமென்ன..

இரா : (வந்து கொண்டு) என்ன தங்காய் சூர்ப்பனகையே என்ன நடந்தது..?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூர்ப் : வெட்டுண்ட அங்கங்களின் வேதனை ஒருபுறம் கேட்பார் இல்லாமல் தனியனாகிவிட்ட மனவேதனை மறுபுறம்.. அம்மா.. நான் யாரிடம் சென்று அழ.. என்விடயத்தில் மாத்திரம் மீண்டும் மீண்டும் சோதனையும் வேதனையும்.. ஏனப்பா.. எம்பெருமானே கண்திறந்துபார்க்க மாட்டாயா...

இரா : நாங்கள் அண்ணன்மார் இருக்கும்போது ஏனம்மா யாருமில்லை என்று அழுகிறாய்.

சூர்ப் : (அழுதல்) அ..ண்..ணா..

இரா : (ஆச்சரியத்துடன்) ம்.. இது என்ன உனது கோலம் அறுபட்ட சிதைந்த கூந்தல்.. பிடுங்கப்பட்ட மூக்கு.. மார்பு முழுவதும் காயங்கள்.. இரத்தத்தில் தோய்ந்த அலங்காரம்.. என்ன கோலமம்மா இது.. என்ன சூர்ப்பனகை உனக்கு என்னம்மா நடந்தது.. எங்காவது விழுந்தாயா.. அன்றேல் ஏதாவது மிருகங்கள்..

சூர்ப் : (இடைமறித்து) அண்ணா உங்களுக்கு நகைப்பாக இருக்கிறதா..? அங்கங்கள் வெட்டுண்ட வேதனையில் நான் தவிக்கின்றேன்.... உங்கள் கடைக்குட்டி இன்று கடைகெட்டு உங்கள் கண்முன் நிற்கிறேன்.. அது உங்களுக்கு ஏளனமாக இருக்கின்றதா..

இரா : (இடைமறித்து) வெட்டுண்டதா (சிறிது கோபம்)..! எந்த அரக்கனுக்கு இந்தத்துணிவு வந்தது.. சொல்லு.. உனக்கு இந்த நிலை வரக் காரணம் என்ன.. யார் காரணம் சொல்லு..

சூர்ப் : (இடைமறித்து) அரக்கர்களில்லை அண்ணா..

இரா : அதுதானே பார்த்தேன்.. இந்நாட்டு மன்னன் இராவணேசனின் தங்கைக்கு இப்படியொரு நிலையை உருவாக்க எந்த அரக்கர் குலத்தவனுக்கு துணிவு வந்தது.. (பதிந்து) அப்போ உன்னை இந்த நிலைக்கு ஆளாக்கியது யார்.. விபரமாகக் கூறம்மா.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூர்ப் : மானிடர்கள்.. முனிவர்களைக் காவல் செய்து மண்ணை ஆளும் மாந்தர்கள்..

இரா : (வியப்புடன்) என்ன மனிதர்கள் செய்தார்களா..?

சூர்ப் : ஆம் அண்ணா, மானிடர்கள் தங்கள் வாளை உருவி இந்தப் படுபாதக வேலையைச் செய்தார்கள்.

இரா : என்ன.. மானிடகுலத்தவர்கள் தங்கள் வாளினால் உனக்கு இந்த நிலையை ஏற்படுத்தினார்களா.? என்னால் இதை நம்பமுடியவில்லையே... பொய்சொல்லாதே பயத்தை விடு.. தயங்காமல் உண்மையைக் கூறு.. (ஏளனமாக) மனிதர்களாவது இப்படிச் செய்வதாவது.. உண்மையைச் சொல்..

சூர்ப் : நான் எதற்காகப் பொய் சொல்ல வேண்டும்.. கோணமாமலை உறையும் சிவபெருமான் சாட்சியாக.. நம்பினால் நம்புங்கள்..

இரா : (கோபத்துடன்) யார் அவர்கள்... எங்கே.. எப்பொழுது... எப்படி.. ஏன் இப்படிச் செய்தார்கள்..

சூர்ப் : அது வந்து..

இரா : வந்தும் போயும்... அந்த அற்ப மனிதர்களுக்கு நீ எனது தங்கை என்று கூறவில்லையா...

சூர்ப் : கூறினேன்.. இலங்காபுரி மன்னன் இராவணேசன் தங்கை என்று கூறினேன். அவர்கள் அதைச் செவிமடுத்தால் தானே..

இரா : யார் அவர்கள்..?

சூர்ப் : ஆடவர் இருவர்.. மரவுரிதரித்தவர்கள். தசரத சக்கரவர்த்தியின் குமாரர்களாம். இராமன், இலக்குவன் என்பது அவர்களது பெயராம். வேதத்தை ஓதுகிறார்கள்.. முனிவர்களை வணங்குகின்றார்கள்.

இரா : சீ.. அனைத்தும் இருந்தும்.. ஒரு பெண்ணை மதிக்கத் தெரியாதவர்கள்..

சூர்ப் : ஆம் அண்ணா..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரா : கோழைகள்... ஒரு பெண்ணிடமா தங்களது வீரத்தைக் காட்டுவது.. அதுவும் இப்படி அலங்கோலமாகவா.. அரக்கர் குலத்தவர்களுக்கே இப்படி ஒரு செயல் செய்ய மனம் வராது..

சூர்ப் : அண்ணா..

இரா : ஒரு பெண்ணை இப்படிச் சீரழிக்க எப்படி அவர்களுக்கு மனம் வந்தது...?

சூர்ப் : (அழுதுகொண்டு) ஆம் அண்ணா... அவன் இளையவன் பெண் என்றும் பாராது அடித்து, உதைத்து, நான் பூமியில் விழுந்து துடிதுடித்தபோதும் எனது கைகளைப் பின்புறமாகக் கட்டி, வயிற்றில் உதைத்து கையிலிருந்த வாளினால் இரத்தம் சொட்டச் சொட்ட மூக்கினையும்,காதுகளையும், மென்மையான மார்பகங்களையும் அறுத்தெறிந்து.. ஆண்டவா.. நான் பட்டவேதனை.. துடிதுடிப்பு..

இரா : கேட்கவே இரத்தம் கொதிக்கின்றது.. இவ்வளவும் இளையவன் செய்யும்போது மூத்தவன் பார்த்துக் கொண்டா இருந்தான்..

சூர்ப் : ஆம் அவன் தம்பியாரை ஏவிவிட்டு வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தான்.

இரா : எதற்காக இப்படிச் செய்தார்கள்..

சூர்ப் : அது.. அது வந்து..

மண் : (வந்து கொண்டு) கூறுங்கள் மைத்துனி அவர்களே..

இரா : (ஆச்சரியத்துடன்) மண்டோதரி... நீயும் அறிவாயா.. அறிந்திருந்தும்...

மண் : அறிந்திருந்தும் எதுவும் செய்யவில்லையே என்று தானே கேட்கவருகிறீர்கள்..

இரா : ஆம்.. தங்கையல்லவா.. ஆருயிர்த் தங்கை அல்லவா.. இலங்கை மன்னனின் அருமைத் தங்கைக்கு அற்பமானிடர்கள் இப்படியொரு இழிசெயலைச் செய்த போதும். நாம் வாளாதிருந்தால்..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மண் : அப்படிச் சொல்ல வேண்டாம் நாதா..

இரா : (கோபத்துடன்).. தப்புச் செய்திருக்கலாம். ஆனாலும். ஒரு பெண். அதுவும் இலங்கை மன்னன் தங்கை.

சூர்ப் : அண்ணா..!

இரா : அப்படித் தப்புச் செய்திருந்தால் அவர்கள் என்னிடம் அல்லவா வந்து முறையிட்டிருக்க வேண்டும். அப்படிச் செய்யாமல் எனது தங்கையை அவர்களே தண்டிப்பது என்ன நியாயம். அதுவும் இப்படிச் சின்னா பின்னமாக்கி.. எனது தங்கைக்குத் தண்டனை கொடுக்க யார் இவர்கள். அற்ப மனிதர்கள்.. தட்டிக் கேட்க யாருமில்லை என்ற எண்ணமா..

மண் : தட்டிக் கேட்கச் சென்ற கரன் முதலியோர் மூத்தவன் இராமன் என்பவனால் கொல்லப்பட்டு விட்டனர்.. இவ்விடத்தில் அதையும் தெரிவிக்கலாமென்று நினைக்கிறேன்.?

இரா : (ஆச்சரியத்துடன்) என்ன தட்டிக்கேட்கச் சென்ற கரன் கொல்லப்பட்டு விட்டானா.. என்ன சூர்ப்பனகை உண்மையா

சூர்ப் : ஆம் அண்ணா.. கரன் தன் படைகளுடன் மாண்டு விட்டான் அண்ணா..

இரா : (கோபத்துடன்).. நீ அவர்களில் ஆசைப்பட்டு.. ஏதாவது..

சூர்ப் : (இடைமறித்து) அண்ணா.. நான் ஆசைப்பட்டது அவர்களிலல்ல அண்ணா..

இரா : அப்படியென்றால்..

சூர்ப் : அவர்களுடன் தங்கியிருந்தாளே அந்தத் தேவதையை.. அழகுப் பெட்டகத்தை.. தேவர்கள் மனத்தையும் தகிக்கச் செய்யும் எழில்வண்ணத்தை.. அவளை உனக்காகப் பெயர்த்து வர முயன்றேன்.. அதற்குக் கிடைத்த பரிசுதானண்ணா..

இரா : பார்த்தாயா. எனக்காகக் கொண்டு வரமுயற்சித்து.. தன்னையே இழந்து நிற்கின்றாள் என்தங்கை.. இதோபார் என்தங்கை எவளுக்காக இந்த அலங்கோலத்தை, வேதனையை, சித்திரவதைகளைத் தாங்கினாளோ.. அவளைக் கொணர்ந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கா புரியில் சிறைவைத்து, அவர்களின் பிரிவால் அவள் படும் வேதனையைப் பார்க்க வேண்டும்.. அதுதான் சரியான தண்டனை..

சூர்ப் : ஆம் அண்ணா.. அதுதான் சரி.. அப்போதுதான் அவள் மட்டுமல்ல அவர்களும் வேதனை அடைவார்கள்.. (அழுது) எனது வேதனையைப் புரிவார்கள்..

மண் : தவறில்லைத்தான்.. நாதா.. உங்களது நிலைமை புரிகின்றது.. எதற்கும் நன்றாக யோசித்து முடிவெடுப்பது தான் தர்மம்.

இரா : (ஏளனமாக) ம்.. தர்மமாம் தர்மம்.. தனியே சென்ற பெண்ணின் அங்கங்களை அரிந்து அனுப்புவது தான் தர்மம் என்றால்.. இது அதனிலும் பார்க்கச் சிறந்தது தானே..

மண் : ஏதோ மனதில் தோன்றியதைச் சொன்னேன்.. அவ்வளவுதான். (போய்க்கொண்டு) நான் வருகிறேன்.

இரா : (ஏளனமாக) ம்... சீ... (கோபமாக) என் தங்கையைச் சிதைத்து கரனையும் கொன்ற அந்த மானிடரை என் செங்கை வடிவேலால் கொல்வேன். அன்றேல் அவர்தம் தர்ம பத்தினியைச் சிறைபிடித்து வருவேன்.. நான் யாரென்று தெரியாத அற்ப ஜீவன்கள்... புரியவைக்கின்றேன்..

....... காட்சி மாற்றம் ........

(இன்றுபோய் நாளை வா இசை)

**காட்சி : 2**

**களம் : லங்காபுரி இராவணேசன் அரண்மனை**

**பாத்திரங்கள் : இராவணேசன், மண்டோதரி**

(யுத்தத்தில் இராமன் இன்றுபோய் நாளைவா என்றனுப்ப கவலையுடன் யோசனையிலிருக்க மண்டோதரி வரல்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மண் : என்ன நாதா பலமான சிந்தனை..

இரா : அது வந்து.. மண்டோதரி.. எனது அழிவானது பெண்ணால் தான் என்பது நான் அறிந்ததொன்று..

மண் : நாதா.. பெண்ணால்தான் அழிவென்று தெரிந்து கொண்டும் மகன் இந்திரஜித்தன், சகோதரன் கும்பகர்ணன் எடுத்துக் கூறிய போதாவது.. அந்தப் பெண் சீதாதேவியை விடுவித்திருக்கலாமே..

இரா : கொஞ்சம் பொறு.. நான் பெண் என்று கூறினேனே தவிர சீதை என்று கூறவில்லையே..

மண் : அப்போ..

இரா : பழிக்குப் பழி... அந்தப் பெண்.. என் தங்கை.. என்தங்கை சூர்ப்பனகை..

மண் : (ஆச்சரியமாக) சூர்ப்பனகையா..? பழிக்குப் பழியா...

இரா : ஆம்.. தன் கணவனைக் கொலை செய்தேன் என்ற மனவஞ்சத்தைத் தீர்க்க கிடைத்த சந்தர்ப்பம்தான் இந்தச் சீதை.. அன்று கரன் இன்று நான்.. இல்லை நாம்..

மண் : நாதா..

இரா : மானிடர்களாம் ராம இலக்குவரைக் கண்டாள்.. அவர்களின் அழகில் மையல் கொண்டாள். விரகதாபத்தினால் மூக்கறுபட்டாள். மூக்கறுபட்ட நிலையில் என் விதவைத் தங்கை தனக்கு யாரும் இல்லை என்று புலம்பினாள். சகோதர பாசம்.. தங்கைக்கு.. அவள் பெண்மைக்கு.. தனிமைக்கு.. நடந்தவற்றை கண்ணுற்று வெகுண்டேன். சீதையைக் கவர்ந்து என்தங்கையின் மானத்தையே பெரிதாக எண்ணி அதற்குக் காரணமான இராம இலக்குவர் அணுஅணுவாக வேதனைப்பட வேண்டும் என எண்ணினேன். அதன்மூலமாவது சூர்ப்பனகையின் கணவரைக் கொன்ற பெரும் பழியை, தங்கையின் உள்ளத்திலே கொழுந்து விட்டெரியும் வஞ்சகத் தீயை அணைக்கலாம் என எண்ணினேன். ஆனால் நினைத்ததற்கு மாறாக.. அந்தத் தீ என்னையல்லவா பற்றிக்கொண்டு விட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மண் : அப்போ.. தங்களுக்கு சீதையின்மேல்.. சீதையின் அழகின்மேல்.. ஆசை மோகம் என்பது எல்லாம்..

இரா : (ஏளனச்சிரிப்புடன்) மண்டோதரி... நீ எண்ணுவது.. இல்லை உலகமே எண்ணுவது புரிகிறது... இதையே தான். கேள்... இல்லை என்பது தான் விடை.. ஆனால் எவரும் நம்ப மாட்டீர்கள்.. நீங்கள் எல்லோரும் நினைப்பது போல் சீதையின் அழகினை அடைய வேண்டும் என எண்ணியிருந்தால் நான் எத்தனையோ வழிகளைத் தேர்ந்தெடுத்திருப்பேன்.. (சிரித்து).. அதற்குத்தான் இந்திரனாதியோர் முன்னோடியாக இருக்கிறார்களே..

மண் : உண்மைதான்.. அப்படியானால்.. எல்லாம் அறிந்த நீங்களே உங்கள் சகோதரியின் வஞ்சத்தில்.. தெரிந்தும்..

இரா : (பெருமூச்சு) ம்... அது விதி... ஆம் இன்று தங்கையின் பாசத்தினால் நான் பாவியானேன்.... தம்பியின் வேசத்தால் நான் ஆவிபோவேன்.. மண்டோதரி கேள்.. உண்மையில் விபீடணன் என்செயல் கண்டு வெறுத்தானில்லை.. தான் அரசுகட்டிலேற.. இந்திரஜித்தனை முந்த குறுக்குவழி தேடிக் கொண்டான். அவ்வளவுதான்.. வஞ்சகன். குலத்தைக் காட்டிக் கொடுக்கும் கோடரிக்காம்பு..

மண் : அப்படியா.. நாதா..?

இரா : ஆமாம்.. அதேபோன்று தான் சூர்ப்பனகையின் புலம்பலுக்கு நான் இணங்கியிருக்காது விடில், அன்றேல் விபீடணன் இப்படியொரு பாதையைத் தேர்ந்தெடுக்காது விடில்.. நிச்சயம் உள்ளூர் கலகமே உருவாகி இந்த இராவணன் மடிந்திருப்பான்.

மண் : அனைத்தும் அறிந்தும்..

இரா : ஆம் தேவி. ஒருவனுக்கு அழிவு பிறனால் அல்ல ஏதோ ஒருவழியில் தன் சுற்றம் சூழலால் தான். இதற்கு இந்த இராவணனே சாட்சி.. எது எப்படி இருந்த போதும் வஞ்சத்தில் மடிவதைவிட வெஞ்சமரில் வீரனாக மடிவதுதானே உண்மையான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீரனுக்கு அழகு.. நான்.. அந்த இராமன் வாலியைக் கொன்றது போல் ஒளித்து விளையாட விரும்பவில்லை.. முன்னின்று போரிட்டு வீரனாகவே மடிகின்றேன். போரில் இறப்பதனால் நான் தோற்றேன் என்றால் அந்த இராமனும் என்றோ ஒருநாள் தோற்கத்தான் போகிறான். காலம் பதில் சொல்லும்.. கலங்காதே மண்டோதரி..

.......... காட்சி மாற்றம் ..........

**காட்சி : 3**
**களம் : லங்காபுரி அசோகவனம்**
**மாந்தர்கள் : சீதாபிராட்டியார், சூர்ப்பனகை, மண்டோதரி**

(பறவைகள் கீச்சிடுதல், அருவி பாய்தல், கானக ஒலி)

மண் : இதோபார் சீதாதேவி.. எனது கணவனைப்பற்றி நன்றாகத் தெரிந்தவள் நான்.. அவர் பெண்பித்தனல்லன். அவர் விரும்பினால் இங்கு கிடைக்காத பெண்களா.. அவர் பெண்மையை மதிப்பவர்.. தெய்வத்திற்குச் சமனாகப் போற்றுகின்றவர்.. அவரைப்பற்றி தப்பாக எடைபோடாதே..

சீதை : அப்போ என்னை எதற்காகவாக்கும் கடத்தி வந்து சிறை வைத்துள்ளார்.

மண் : பாசம்.. தங்கையின் மீதுள்ள அதி தீவிரமான பாசம் உங்களது கணவர் பார்த்திருக்க, ஏன் நீங்களும் அதைப் பார்த்து மௌனம் காக்க, உங்கள் மைத்துனர் எனது மைத்துனி சூர்ப்பனகைக்குச் செய்த கொடுமையின் விளைவு..

சீதை : அது சூர்ப்பனகை செய்த செயலுக்கான தண்டனை..

சூர்ப் : ஒரு பெண்ணாகவிருந்தும் அவர்கள் தனிமையிலிருந்த என்னைச் சித்திரவதை செய்து இரத்தத்தினால் குளிப்பாட்டும் பொழுது.. நீங்களும் பார்த்துக் கொண்டு தானே இருந்தீர்கள். ஒரு வார்த்தை.. ஒரு வார்த்தை நீங்களாவது கூறியிருக்கலாம்.. தடுத்திருக்கலாம் தானே..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மண் : கொஞ்சம் பொறுங்கள் மைத்துனி.. அப்போ இலக்குவர் செய்தவை சரி என்று கூறவருகின்றீர்களா ஜனகன் மகளே.. இலங்காபுரி மன்னனின் தங்கை என்று சொன்னதன் பிற்பாடு ஆகிலும், மரியாதை நிமித்தமாக என்றாலும்.. எமக்கு அறிவித்திருக்கலாம் தானே.. சித்திரவதை செய்யாமல் சிறை வைத்திருக்கலாம் அல்லவா.. அது பெண்மைக்கு கொடுக்கும் மதிப்பு..

சூர்ப் : இல்லை என்னைக் கொன்றே போட்டிருக்கலாம் ஆண்மைக்கு அழகு.. ஆனால் மூக்கறுபட்டு முலை அறுபட்டு.. சீ உங்கள் மைத்துனரை ஒரு பெண்மையை மதிக்கும் ஆண்மகன் என்று சொல்வதற்கு.. வெட்கமாயில்லை. இது ஆண்மைக்கே அருவருப்பு இல்லையா..?

மண் : பாருங்கள் சீதாதேவியாரே.. நீங்கள் நினைப்பது போல எனது கணவர் பெண்பித்தராகில் உங்களை இங்கு கொண்டுவர வேண்டிய தேவையில்லை.. அங்கேயே சுவைத்திருக்கலாம். ஏன் வரும் வழியில் அனுபவித்திருக்கலாம். ஏன் இங்கேயும்.. அவருக்கு எந்தத் தடையும் இல்லை..

சீதை : என் பெண்மை.. கற்பு.. சுட்டெரித்து விடுமோ என்று பயம்..

சூர்ப் : (ஏளனமாக) அப்போ நாங்கள் பெண்மை தவறியவர்களோ.. அதனால்தான் உங்கள் மைத்துனர் எனது அங்கங்களை அரிந்துபெண்மையைத் தேடினாரோ..

சீதை : அது வந்து.. வந்து..

மண் : பார்த்தீர்களா.. உங்கள் மனசாட்சியே பதில் கூற விடவில்லை.. உங்களது மைத்துனரின் செயலுடன் எனது கணவனின் செயல்களை ஒப்பிட்டுப் பாருங்கள்.. எனது கணவர் என்றாவது உங்களை தவறாக அணுகினாரா.. இல்லையே.. சிந்தித்துப் பார்த்தீர்களா.. அது மட்டுமல்ல தங்களுக்கு.. தங்கள் பெண்மைக்கு.. தன்னால் மட்டுமல்ல வேறு எவர் மூலமாவது எந்தவொரு தீங்கும் நிகழக்கூடாது என்றுதானே..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறந்தவளான தாய்க்குத் தாயான குணம் கொண்ட திரிசடை அம்மையாரை காவலுக்கு அமர்த்தியுள்ளார். இதிலிருந்தாகிலும் எனது கணவர் எவ்வளவுதூரம் பெண்மையைப் போற்றுபவர் என்பதை உணர வில்லையா..

சூர்ப் : ஏன்.. அண்ணா இராவணனிடம் சடாயுவை வெட்டிய ஆயுதங்கள் இருந்தனவே. உங்கள் மைத்துனர் செய்தது போல் உங்களையும் உங்கள் அங்கங்களையும் வெட்டி இருக்கலாம். ஏன் அவர் அப்படிச் செய்ய வில்லை. அவரது நோக்கம் தங்களைச் சிதைப்பது அல்ல.. தங்களை அனுபவிப்பதல்ல.. பூப்போல இங்கேயே கொண்டு வந்து சேர்ப்பது மட்டுமே.. இதிலிருந்து தங்கள் மைத்துனரும் என் அண்ணன் இராவணேஸ்வரனும் பெண்மையைப் போற்றுவதில் எப்படிப்பட்டவர்கள் என்ற வேறுபாடு புரிய வில்லையா.. அழகான ஆண்மைக்கும் அருவருப்பான ஆண்மைக்கும் உள்ள வேறுபாட்டைப் புரிந்து கொள்ளுங்கள்.

சீதை : அப்போ மாயமான் வேடத்தில் வந்தது.. தவறான நோக்கத்தில் தானே....

மண் : அது உண்மை தான். அங்கும் அவரது நோக்கம் உங்களை ஏதோ ஒரு விதத்தில் கணவனிடத்தில் இருந்து பிரித்துக் கொணர்வதே தவிர, உங்களை அனுபவிப்பது அல்ல... அது தான் பெண்மையைக் கசக்கவல்ல.. அதை நினைவில் வைத்திருங்கள்..

சூர்ப் : தட்டிக்கேட்க ஒருவருமில்லாத போதும் தங்களைத் தன் விரலால் கூட அண்ணா தொடவில்லையே... ஏன் எதிரியின் மனைவி என்றாலும் பெண்மை மாசுபடக் கூடாதென்று.. இதிலிருந்தாகிலும் அவர்யார் என்பதைப் புரிந்து கொள்ளுங்கள்..


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சீதை : தாங்கள் மூக்கறுபட்டது சந்தர்ப்பவசத்தால்.. அது தான் என்னைப் பாதுகாக்கவென்று நடைபெற்ற சம்பவம் ஒன்று. அதற்காக மட்டும் இருவரும் என் நாதன் பெண்மையின் அருமை புரியாதவர்கள் என்று கூற வேண்டாம்.

மண் : அப்படிக் கூறாதீர்கள்.. தங்கள் கணவரும்.. மைத்துனரும்.. தங்களை மணம் செய்ய முன்பு சரி பின்பு சரி செய்தவற்றைச் சிறிது சிந்தித்துப் பாருங்கள். எத்தனை பெண்களை சித்திரவதை செய்தார்கள். முனிவர்கட்கு காவல் என்ற போர்வையில் அவர்களுக்கு எதுவித இடைஞ்சலும் கொடுக்காத தாடகைப் பாட்டி உட்பட எத்தனை எம் இனப் பெண்களை வதம் செய்தார்கள் (ஏளனமாக) அவர்களுக்கு அதிலும் இளையவருக்கு.. பெண்களிடம் வீரம் காட்டுவதில் அலாதிப்பிரியம்...

சீதை : இருக்கலாம்.. அது முனிசிரேஷ்டர்களின் தவத்தைப் பாதுகாக்க.. எனது பிராண நாதனைப்பற்றி நன்கு அறிந்தவள் நான். அவர் ஏக பத்தினி விரதர்.

மண் : அதே போன்று தான் என் கணவரைப் பற்றியும் நன்கு அறிந்தவள் நான். அவரும் பெண்மையைப் போற்றுபவர். மதிப்பவர். தன்னை எதிர்க்கும் ஆண்களையும் எதிரிகளையும் கொன்றொழிப்பாரே தவிர உங்கள் கணவரைப்போல் பெண்களை வதைப்பது மற்றவர்களுக்காக கொலை செய்வது போன்ற பெண்மையை அவமதிக்கும் எந்தத்தீய செயல்களுக்கும் உடன்படாதவர். செய்யாதவர். பெண்மையைத் தெய்வமாக மதிப்பவர். அதை மறந்து விடவேண்டாம்.

சீதை : பெண்மையை மதிப்பவர் என்றால்.. சிற்றின்ப மோகம் இல்லாதவரென்றால் அடுத்தவர் மனைவியைக் கடத்தி வந்து காவலில் வைப்பது சரியென்று கூறுகிறீர்களாக்கும்.

மண் : தாங்கள் இப்பொழுதும் எப்படி இருக்கிறீர்கள் உங்களின் பெண்மைக்கு ஏதாவது இழுக்கு ஏற்பட்டதா என்பது உங்களுக்கே.. உங்கள் மனச் சாட்சிக்கே நன்றாகப் புரியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடத்திவந்தாரே தவிர கைவிரல் கூடப்படவில்லை என்பது நான் தான் உங்களுக்குக் கூற வேண்டியதில்லை..

சீதை : ஆனால்..

மண் : கூறவிடுங்கள்.. எனது பதி, எட்டுச் சித்தும் ஆடவல்ல சித்தன். விரும்பிய உருவை எடுக்கும் வல்லமை கொண்டவர். கேளுங்கள்.. விஷ்ணு சலந்தரன் உருவெடுத்து பிருந்தையைக் கூடினார். இந்திரன் கௌதமரின் உருவெடுத்து அகலியையுடன் சேர்ந்தார். மோகமுள்ளவரெனில் என்னவரும் தசரத புத்திரன் வடிவெடுத்து உங்களுடன் கூடியிருக்கலாம் தானே.. அவர் பிறர் மனை விரும்பும் பேதை அல்ல.. அதுமட்டுமல்ல பகை அரசர் மனைவியரைச் சிறை எடுப்பது போர் முறைகளில் ஒன்று என்று அரச நீதி தெரிவிப்பது தங்களுக்குத் தெரியாதது ஒன்றல்லவே..

சூர்ப் : முனிவர்கள் உயிரினங்களை வதம் செய்து யாகம் செய்வார்கள். சாபம் போடுவார்கள். இவர்கள் அவர்களை அழிப்பார்கள்.. சீ.. பெண்மையைப் பற்றி அறியாதவர்கள்.. தாடகை, அயோமுகி வரிசையில் என்னையும் இணைத்தார்கள்.. வெல்ல முடியாத வீரர்களைக் கோழைபோல் ஒளித்திருந்து கொல்லுவார்கள்.

சீதை : என்ன? வெல்ல முடியாத வீரர்களைக் கோழை போல் ஒளித்திருந்து கொல்லுவார்களா..? எனக்கு ஒன்றும் புரியவில்லையே..!

மண் : வாலியை இராமர் ஒளித்து நின்று கொல்லும் போது வாலி கூறியதை அறிவீர்களா..

சீதை : நான் அசோகவனச் சிறையில் இருந்த போது நடந்தது.. கூறுங்கள்.. அப்படி வாலி என்னதான் கூறினான்..

மண் : கேளுங்கள்..

வாலி : இராகவா என்ன வேலை செய்தாய். தக்கவர்கள் செய்கின்ற வேலையா இது. உன்னைப் போன்ற உத்தமர்கள் செய்கின்ற வேலையா இது.. என் மனைவி கூறினாள் நான் தான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கேட்கவில்லை.. இராமன் அப்படிப்பட்ட காரியத்தைச் செய்ய மாட்டான் என்று சவால் விடுத்தேன்.. நீ இன்று.. எனது முகத்தில் கரிபூசி விட்டாயே என்று புலம்பியது.... தாங்கள் அறியாததா

சீதை : அப்படியா.. அப்புறம்

சூர்ப் : அதுமட்டுமல்ல தனது உயிர்போகும் இறுதித் தருணத்தில் கூட வாலி புலம்பியதை கேளுங்கள்

வாலி : இராமா.. எந்த மூடன் உனக்கு வேதம் சொல்லிக் கொடுத்தான். மறைந்து நின்று பாணம் விடுவது தான் நீ கற்ற நீதியா.. உன் மனைவியை இராவணன் தூக்கிக் கொண்டு போனதற்காக வாலியைக் கொல் என்று எந்த வேதம் சொல்லியிருக்கின்றது. தவறுசெய்தது யார்.. தண்டிப்பது யாரை.. நான் உனக்கு என்ன குற்றம் செய்தேன்.. ஏன் இப்போது தவறு செய்தாய்.. சீதாதேவியைப் பிரிந்ததனால் தானே.. மனைவியைப் பிரிந்ததால் புத்தி தடுமாறிவிட்டதா.. ஆம்.. அன்னம் போய் விட்டதால் உனக்குப் புத்தி தடுமாறிவிட்டது.. அமிர்தம் போய்விட்டது விசம் கக்கி விட்டாய் என்று கர்ஜித்திருக்கிறான்..

சீதை : அப்படியா.. தெரியாத ஒன்றுக்கு நான் எப்படிப் பதில் கூறமுடியும்..

மண் : அதை விடுங்கள்.. இனி நாம் சந்திப்போமா என்பதை நான் அறியேன்.. எது எப்படி இருந்தாலும் பஞ்சவடியிலிருந்து இலங்காபுரியில் எப்படி அடிவைத்தீர்களோ அப்படியே திரும்பிச் செல்வீர்கள். ஆனால் லங்காபுரி தன் பெண்மையை இழந்து, பெண்மை சிதைந்து தன்னையே இழந்து நிற்கும்.. ஏனென்றால் உங்கள் கணவரும் அவர்கூட சேர்ந்த நண்பர்களும் எனது மைத்துனர் விபீடணன் உட்பட பெண்மையின் மென்மையை அறியாதவர்கள்.. யுத்தத்தில் வஞ்சனையையே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதலீடு செய்பவர்கள்.. என் மன்னவன் பெண்மையைப் பாதுகாத்து, நேர்மையாக யுத்தத்திற்கு முகம் கொடுக்கும் கொள்கை உடையவன். நாங்கள் மடிந்து விடுவோம். உங்களை மீட்டெடுக்கும் யுத்தத்தில் மடிந்தால். எனது கணவன்.. அந்த இராவணேஸ்வரன்.. இந்த இலங்காபுரிமன்னன்.. பெண்மையைக் காப்பதற்காக நேரில் சமரிட்டு மடியும் முதல் மாவீரனாவான்.. அதைச் சரித்திரம் கூறும்.. மறந்து விடாதீர்கள்..

.......... காட்சி மாற்றம் ..........

(யுத்த ஒலி தொடர்ந்து... உள்ளத்தில் நல்ல உள்ளம் இசை மட்டும்)

**காட்சி : 4**
**களம் : அயோத்தி**
**மாந்தர்கள் : ராமன், சீதை**

(போரில் ராவணன் கொல்லப்பட சீதையை ராமன் சோதிப்பது)

சீதா : நாதா.. (அழுது) யுத்தம் முடிந்து ராவணன் கொல்லப்பட்டும் அழைத்துவா என ஆணையிட்டு விட்டு வந்தும். இப்படி நீங்கள் வேண்டா வெறுப்பாக தீண்டத் தகாதவளைப் போல்..

ராம : (மறித்து) ஆம் ஜனகனின் மகளே..! உன்னை சிறைப் பிடித்தானே அந்த எதிரியைக் கடும்போரில் தோற்கடித்து பணயப்பரிசான உன்னை மீட்டு வந்துள்ளேன்.. எதிரியை வீழ்த்தி என் மதிப்பைக் காப்பாற்றியுள்ளேன். இந்த மானக்கேட்டினால் ஏற்பட்ட இழிவைத்துடைக்க மனிதனால் எக்கடமை செய்யப்படவேண்டுமோ அது இராவணனைக் கொன்று என்னால் செய்யப்பட்டது. அவ்வளவுதான்..

சீதை : (அழுது) நாதா..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ராம : (உறுதியாக) எந்தப் போர் முயற்சி என் வீரமிக்க நண்பர்களின் உதவியுடன் என்னால் செய்யப்பட்டதோ.. அது உன் பொருட்டல்ல என்பதை மட்டும் நீ தெரிந்து கொள்.. எனது நற்பெயருக்கு எல்லா இடத்திலிருந்தும் வரும் இழுக்கையும் புகழ்வாய்ந்த என்குலத்தின் மீது ஏற்படும் காழ்ப்புணர்வையும் துடைத்தெறிவதற்காக மட்டுமே என்பதை மறந்து விடாதே..

சீதை : (அழுது) பிராணநாதா.. இழிசெயல் செய்து விலக்கப்பட்ட இழிந்தவளிடம் பேசுவதைப்போல் கேட்பதற்குத்தகாத கடும் சொற்களை ஏன் வீசுகிறீர்கள்.. இவை தங்கள் திருவாயிலிருந்தா வருகின்றன.. நீங்களா.. சுவாமி..

ராம : ஆம் நானேதான்.. அந்நியன் வீட்டில் இருந்த பெண்ணை நற்குலத்தில் பிறந்த எவனாவது ஆவலுடன் திரும்ப ஏற்றுக் கொள்வானா.. என் மனச்சாட்சியின் படிசொல்வதானால்.. ஜனகனின் மகளே ! உன் நடத்தையை நான் சந்தேகிக்கிறேன். உன்னைப் பார்க்க எனக்கு கூச்சமாகவுள்ளது.. எரிச்சலூட்டுகிறது. உனக்கு விருப்பமுள்ள எவனை என்றாலும் மணக்கலாம்.. உன்னோடு எனக்கு எந்தச் சம்பந்தமுமில்லை.. போரிட்டு உன்னை மீட்டு வந்தேன். என்னுடைய நோக்கம் அவ்வளவே !

சீதை : (அழுது) நீ.. நீ.. நீங்கள் தீய நடத்தை கொண்ட பெண்களைக் கேள்விப்பட்டு பெண்குலத்தையே நம்பமறுக்கின்றீர்கள். (அழுது) ஆம்.. அன்று மண்டோதரி கூறியது நிஜமாகின்றது.

ராம : உன்னைப் போன்ற அழகிய பெண்ணொருத்தியை பத்து மாதகாலம் இராவணன் சும்மா விட்டிருப்பான் என்பதை என்னால் நினைத்துக் கூடப் பார்க்க முடியவில்லை..

சீதை : இராவணன் களங்கப்படுத்தியிருப்பான் என்ற எண்ணத்தை, சிறைப்பட்டிருந்த வேளையில் என்னை சந்திக்க வந்த அனுமன் மூலம் சொல்லியனுப்பி, கை கழுவி விடுகிறேன், என்று அன்றே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புலப்படுத்தி இருந்தால் இவ்வளவு சிரமத்திற்கு இடம் இருந்திருக்காது.. நானே தற்கொலை செய்து என்னை மாய்த்துக் கொண்டிருப்பேனே.. ஏன் மீட்டீர்கள். கொன்றிருக்கலாம் தானே..?

ராம : உன்னை மீட்க வேண்டியது எனது ராஜகௌரவம்..

சீதை : அப்போ.. நீங்களும் அப்படியே எண்ணுகிறீர்களா.. என் பெண்மையில் சந்தேகம் கொள்ளுகிறீர்களா.. ம்.. அந்த மகான் இராவணன் ஒரு தடவையாவது என்னைத் தொடவில்லை... இராவணன் மட்டுமல்ல எந்தவொரு பிற ஆடவனும் என்னை அணுகவில்லை என்று சொன்னால் நீங்கள் நம்பவா போகின்றீர்கள்.. ஆண்டவனும் திரிசடைத் தாயும் தான் எனக்குச் சாட்சி..

ராம : நான் நம்புவதும் நம்பாமல் விடுவதும் ஒருபுறம் இருக்கட்டும்... இந்த உலகம் நம்ப வேண்டுமே.. அதற்குத் தற்கொலை தீர்வல்ல..

சீதை : அப்போ..?

ராம : இலக்குவன் அக்கினிச்சிதை வளர்த்திருக்கிறான்.. நீ அதில்புகுந்து நிரூபிக்க வேண்டும்..

சீதை : அக்கினிப் பிரவேசமா..

ராம : ஆம்.. உன் கற்பினை.. பெண்மையின் புனிதத்தை நிரூபிக்க ஒரு சந்தர்ப்பம்..

மண் : (எதிரொலி) பார்த்தாயா சீதாதேவி.. உன் கணவர் உன்னை மீட்டது தன் வீரத்தைப் பறைசாற்றவேயன்றி உன் பெண்மையைப் போற்றவல்ல.. இப்போதாவது இந்த மண்டோதரி சொன்னது புரிகின்றதா..? பெண்மையை நிரூபிக்க அக்கினிப் பிரவேசம்.. (எக்காளமிட்டுச் சிரித்தல்).. செய்.. செய்.. அக்கினிப் பிரவேசம்செய் சீதாதேவி.. உனக்காக மட்டுமல்ல.. எனக்காகவும்.. ஆம் என்கணவர்.. என் இனம்.. என் லங்காபுரி ஆடவர்கள். புனிதமானவர்கள்.. பெண்மையை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மதிப்பவர்கள்.. என்பதனை உன் கணவரும் பெண்களின் அங்கங்களையே அரிவதிலும் அரக்கர் குலத்தினையே அழிப்பதிலும் தேர்ச்சி பெற்ற உன் மைத்துனரும்.. பெண்களைப் போகப்பொருளாக நினைக்கும் இந்திராதி தேவர்களும், சாபத்தினாலே பெண்களை நிர்மூலம் செய்யும் முனிசிரேஷ்டர்களும், ஏன் முழு உலகமுமே உணரட்டும்.. தயங்காதே.. அக்கினிப் பிரவேசம் செய்.. தயங்காதே.. அக்கினி உன்னைத் தீண்டாது.. அது நிச்சயம்.. ஏனெனில் எனக்கு என் கணவனில் பூரண நம்பிக்கை உள்ளது.. இலங்காபுரி மைந்தர்களில் நம்பிக்கை உள்ளது..

சீதை : என்ன... மரணமடைந்த மண்டோதரியின் அசரீரி.. ஆம்... அன்று நீ கூறியதை ஏற்கவில்லை.. இன்று ஏற்கிறேன்.. என் புனிதத்தன்மையை மட்டுமல்ல.. உங்கள் கணவனின்.. குலத்தின் புனிதத் தன்மையையும்.. பறைசாற்ற நான் அக்கினிப் பிரவேசம் செய்கிறேன்... அக்கினிப் பிரவேசம் செய்கிறேன்..

........... காட்சி மாற்றம் ...........

**காட்சி : 5**

**களம் : அயோத்தி**

**மாந்தர்கள் : ராமன், சீதை**

(ராமன் போலி அன்புடன் சீதையுடன் உரையாடல்)

ராம : (போலி அன்பு) சீதா.. பெண்கள் கருவுற்றிருக்கும் காலத்தில் விசேஷமான சில பொருட்கள் மீது ஆசைப்படுவார்கள், அத்தகைய ஆசைகளை, விருப்பங்களை நிறைவேற்றுவது கணவனது கடமை. என்பதை நான் அறிவேன். என் பிரியதர்சினி உனக்கும் அப்படி ஏதேனும் விருப்பமுண்டா... தெரிவிப்பாயா..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சீதை : ஆம் நாதா.. உங்களிடம் கூறலாம் என்றிருந்தேன்.. நீங்களே கேட்டுவிட்டீர்கள்.

ராம : கூறம்மா.. தயங்காதே.. அதை நான் நிறைவேற்றக் காத்திருக்கின்றேன்..

சீதை : கங்கைக் கரையோரம் அமைந்துள்ள ஏதாவதொரு முனிவரின் ஆசிரமத்தில் தங்கி, அங்கு கிடைக்கும் பழங்களையும், கிழங்குகளையும் சாப்பிட்டு ஒரு இரவாவது தங்கித் திரும்ப வேண்டும் என்பதே என் ஆசை.

ராம : ஆ.. இதுவா.. அன்பே, கொஞ்சம் பொறுத்துக் கொள். நாளையே நீ அங்கு போக நான் ஏற்பாடு செய்கிறேன்.

சீதை : என் உள்ளத்திலிருந்தவற்றை குறிப்பாலுணர்ந்து நிறைவேற்ற சம்மதித்தமைக்கு நன்றி நாதா...

ராம : ம்...ம்... (மனதுள்) என்னுள்ளத்திலிருப்பதுவும் தான்.. காகமிருக்க பனம் பழம் விழுந்தது போல இதுவே நல்ல சந்தர்ப்பம்... சகோதரர்களுக்கு மட்டும் கூறி விட்டு தம்பி இலட்சுமணனிடமும் சாரதி சுமந்திரனிடமும் ஒப்படைத்தால் சரி....

......... காட்சி மாற்றம் .........

**காட்சி : 6**

**களம் : அயோத்தி**

**மாந்தர்கள் : ராமன், இராவணன்**

(ராமன் சீதையை வஞ்சகமாக காட்டுக்கனுப்பத் திட்டம் போடுகிறான்)

ராம : சகோதரர்களே.. சீதையைப் பற்றி நாட்டில் உலவிய வதந்திகளை எமது அரசவைக் கோமாளியான பத்ரன் மூலம் கேட்டறிந்தேன்.. சீதையோ நிறைமாதக் கர்ப்பிணி.. இதுவும் நீங்கள் அறிந்ததே.. சீதையின் புனிதமான கற்பும், தூய்மையும் இலங்கையிலேயே நிரூபிக்கப்பட்டது. அதற்குக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடவுள்களும் சாட்சியாக இருந்தார்கள். நானும் அதனை முற்றிலும் நம்புகின்றேன். எனினும் பொதுமக்களோ சீதை மீது வதந்திகளைக் கிளப்புவதாகவும் என்னைப் பழிப்பதாகவும், எனக்கு அவமானம் ஏற்படும் வகையில் பேசுவதாகவும் அறிகிறேன். இத்தகைய இழிவினை ஆட்சிக் கட்டிலுள்ள யாராலும் சகித்துக்கொள்ள முடியாது. மானம், கௌரவம் என்பது பெரும் சொத்து. இத்தகைய இழிவையும் அவமானத்தையும் தாங்கிக் கொண்டு ஆட்சியை நடாத்த என்னால் முடியவில்லை. அப்படிப்பட்ட இழிசொல் மற்றும் அவமானத்திலிருந்து என்னை நான் காப்பாற்றிக் கொள்ளவும் நாட்டு மக்களின் வதந்திகளிலிருந்து தப்பிவிடவும் சீதையை காட்டிற்கு நிரந்தரமாகவே அனுப்பி விடுவதொன்றே சுலபமான வழியென எண்ணியுள்ளேன். அதற்கு நல்லதொரு சந்தர்ப்பம் கைகூடியுள்ளது. அதை உங்களுடன் பகிர்ந்து கொள்ளவே அழைத்தேன். எனது புகழையும் பெருமையையும் காப்பாற்ற ஒரே வழி. அதற்கு மீண்டும் இலக்குவரின் உதவி தேவை..

இரா : (அசரீரி) இராமா.. நீ பெண்மையை மதிக்கத் தெரியாதவன். சிறுபிள்ளையில் மந்தரையுடன் விளையாடிய விளையாட்டு உன் மணிமுடியை பன்னிரண்டு வருடங்கள் பறித்தது. தொடர்ந்தும் முனிகளுடன் இணைந்து பெண்பாவங்கள். சிந்தித்துப் பார்.. நான் நிரபராதி.. இதை ஏழுலகத்தவர்களும் ஏன் முதல்வன் எம்பெருமானாம் சிவபெருமானும் அறிவான்.. சிவபக்தனாகிய என்னைக் கொன்ற பிரம்மஹத்தி தோசம் நீ இராமேஸ்வரத்தில் சிவனுக்கு கோவில் எழுப்பியதால் தீர்ந்து விட்டது என மட்டும் எண்ணிவிடாதே.... உன்வாழ்வில்... உன் ஆட்சியில் இனி ஒருபோதும் நிம்மதியில்லை அதை மறவாதே.. அனுபவி..

ராம : ம்... ராவணனின் அசரீரி... நடப்பது நடக்கட்டும்...


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**காட்சி : 7**

**களம் : கானகம்**

**மாந்தர்கள் : சீதை**

(கானகத்தில்)

சீதை : ஐயோ என்னைப் போல் பாவி இவ்வுலகில் வேறு யாராவது உண்டோ.. அக்கினி சாட்சியாக மணம் செய்து.. பன்னிரு வருட கானகவாழ்வு வாழ்ந்து.. பத்துமாதம் சிறையிருந்து.. மீண்டும் அக்கினியில் என் புனிதத்தன்மையை நிரூபித்து வாழத்தொடங்கி இன்று கர்ப்பிணியாக உள்ள எனக்கு ஏன் இந்தக் கதி. என்னையே கதியென்று வேறொரு ஆதரவும் இல்லாத மனையாளுக்கு நம்மையன்றி வேறொரு ஆதரவும் இல்லையென்று கொஞ்சமேனும் கருணை செய்யாமல், ஊரார் பழிக்கஞ்சி காட்டில் ஒண்டியாக விட்டுவா என்று கட்டளையிட்ட நாயகரும் வன்நெஞ்சம் கொண்டவரல்லர்.. அவர் கட்டளையை கொடிய செயலென்று எண்ணாமல் மிருகங்களின் கர்ஜனை நிறைந்த இந்தப் பயங்கரக் காட்டில் தனியாக விட்டுச் சென்ற இலக்குவரும் வன்நெஞ்சரல்லர். நாயகனால் நிராகரிக்கப்பட்டு வனத்திலே விடப்பட்டும் பிராணனை விடாமல் இன்னும் உயிரோடு இருக்கும் நானல்லவா வன்நெஞ்சம் உடையவள். விதியே.. நீ இன்னும் என்ன கொடுமைகளைச் செய்யக் காத்திருக்கிறாய். ஐயோ... என் பொறி கலங்குகிறதே..புத்தி மயங்குகிறதே.. காதடைக்கிறதே.. தாயே.. தலை சுற்றுகிறதே ஒன்றும் தெரியாமல் வருகின்றதே.. (மயங்குதல்).. அம்மா..

.......... காட்சி மாற்றம் ..........



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**காட்சி : 8**

**களம் : கானகம்**

**மாந்தர்கள் : சீதை, மண்டோதரி**

(கானகத்தில் லவன் குசன் கிடைத்த பின்... இடைஇசை குழந்தைகள் அழும் ஒலி...)

**ஆராரோ ஆரிரரோ... ஆராரோ ஆரிரரோ**
**சீராரும் பைங்கிளிகாள் செல்வமே கண்ணுறங்கு**
**நாடதை ஆள்வீர்களென்று நான் நினைத்திருந்தவேளை**
**கானகம் தன்னில் உதித்த லவ குசா கண்ணுறங்கு**
**வால்மீகி முனி வளர்க்கும் லவ குசா கண்ணுறங்கு**
**வால்மீகி வசம் வளரும் லவ குசா கண்ணுறங்கு (மீண்டும்)**
**லவ குசா கண்ணுறங்கு**

மண் : (அசரீரி) சீதாதேவி... எல்லாம் முடிந்ததென்று எண்ணாதே.. அயோத்தியில் முனிவர்கள் மழை வேண்டி, வளம் வேண்டி அசுவமேத யாகம் செய்யத்தயாராகி விட்டார்கள். முனிந்து முனிந்தே உலகைக் கெடுத்த முனிவர்கள் மீண்டும் யாகம் செய்யத் தயாராகி விட்டார்கள்.. மீண்டும் பெண்மைக்குச் சோதனையம்மா..

சீதை : என்ன.. குழந்தைகளைத் தூங்கச் செய்யும் பொழுது நானும் தூங்கி விட்டேனா.. மண்டோதரியின் அசரீரி.. இது கனவா..

........... காட்சி மாற்றம் ...............

**காட்சி : 9**

**களம் : அயோத்தி**

**மாந்தர்கள் : சீதை, ராமன்**

சீதை : என்ன.. (கோபத்துடன்) இரண்டாவது அக்கினிப் பரீட்சையில் குசன் சாம்பராகியமையால் மீண்டும் அயோத்தியில் தீக்குளிக்க வேண்டுமா..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ராம : அது முனிவர்களின் கட்டளை

சீதை : ம்... (பெருமூச்சுவிட்டு) முற்றும் துறந்த முனிவர்களுக்கு சந்தேகத்தை துறக்க முடியவில்லை.. அதேவேளை மனைவி களங்கமற்றவள் என்று கூற மாலை இட்டவனுக்கு மனம் வரவில்லை. நான் ஏன் தீக்குளிக்க வேண்டும். இதில் என்ன நியாயம் இருக்கிறது..

ராம : அது அயோத்தியின் நன்மை கருதி..

சீதை : அயோத்தியின் நன்மைக்கு.. சீ வெட்கமாயில்லை.. அயோத்தியின் மகளாக வந்திருந்த நாளிலிருந்து நான் என்னத்தைக் கண்டேன்.. அரசபோகத்தைத் துறந்தேன். அரண்மனை சுகங்களை இழந்தேன். துன்பம்.. துன்பம்.. வேறு என்னத்தைக் கண்டேன்..

ராம : அது சத்தியத்தைக் காக்க..

சீதை : ம்.. (ஏளனமாக) சத்தியத்தைக் காக்க.. மரவுரி தரித்து தங்கள் மடியில் படுத்திருக்கும் போது இந்திரன் மகன் சயந்தன் காகவடிவில் என் நெஞ்சைக் கொத்தினான்.. இராவணனன் சிறை எடுத்தான்.. இவை தங்களால் என்னைக் காப்பாற்ற முடியாததால் இடம்பெற்றவை.. இப்படியிருக்கையில் என்னை அக்கினிப் பிரவேசம் செய்ய வைத்தீர்கள்.. செய்தேன்.. நிரூபித்தேன்.. வாழலாம் என்று வாழ்ந்தேன்.. யாரோ ஒரு துணிதுவைப்பவன் ஏதோ சொன்னான் என்பதற்காக பெண் என்றும் பாராமல், நம்பி வந்தவள் என்றும் பாராமல், கர்ப்பிணிப்பெண் என்றும் இரங்காமல் என்னை வைத்துக் காப்பாற்றுவதைப் பாரமாக எண்ணி கானகத்தில் விட்டீர்கள்.

ராம : அது..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சீதை : (இடைமறித்து) வேண்டாம் சமாதானம். என்னை விரும்பா விட்டால் என்னிடமே கூறியிருக்கலாம். அன்றேல் மிதிலைக்கு அனுப்பியிருக்கலாம். கொடிய விலங்குகள் கொன்று தின்று தொலைக்கட்டும் என்றே வனத்தில் விட்டீர்கள். ஆம்.. கொடுங்கோலாட்சி நடக்கும் இந்த நாட்டிலும் பார்க்க கொடிய விலங்குகள் வாழும் கானகம் சிறந்ததே என்று எண்ணுகின்றேன். உங்களுக்கு.. சந்தேகம்.. எதிலும் சந்தேகம்.. எடுத்தற்கு எல்லாம் சந்தேகம்..

ராம : அப்டியல்ல

சீதை : அப்படியில்லையென்றால்.. ஒன்றைமட்டும் நினைவூட்ட விரும்புகிறேன். இராவணன் என்னை மாடச்சிறையில் வைத்தானே தவிர மனச் சிறையில் வைக்கவில்லை.. அதனால் தான் தங்கள் பாணங்கள்... கள்ளிருக்கும் மலர் கூந்தல் சானகியை மனச்சிறையில் கறந்த காதல் உள்ளிருக்கும் என நினைந்து உட்புகுந்து தடவியும்.. எங்கும் கிடைக்காமல் வெளியேறியது... அது நினைவிருக்கின்றது தானே.

ராம : ஜானகி நீ...

சீதை : ஆம் உண்மைதான். உன் நடத்தையில் களங்கம் உள்ளது உன்னை ஏற்றுக்கொள்ள மாட்டேன் அக்கினிப் பரீட்சை என்றபோதே நான் உயிர்விட்டிருக்க வேண்டும்

ராம : ஆனால் இன்று..

சீதை : விடுங்கள் என்னைப்பேசவிடுங்கள்.. பெண்மையின் குரலையும் அடக்காதீர்கள். ஊரார் சந்தேகம் கொள்ளும் போதெல்லாம்.. உலகில் தம்புகழ் ஓங்க, பழிநீங்க வேண்டும் என்று ஆண்கள் நினைக்கும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் பெண்கள் தங்கள் பெண்மையை... கற்பினை நிரூபிக்க அக்கினிப் பிரவேசம் தான் ஒரே வழி என்றால்.. அந்த நாட்டில்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிரந்தரமாகவே ஒரு அக்கினிக் குழி கொழுந்து விட்டெரிய வேண்டியது தான். எப்போது அக்கினிப் பிரவேசத்திற்கு உத்தரவு வரும் என்று ஒவ்வொரு பெண்ணும் பயந்து பயந்து காத்திருக்கும் நிலை வரும். இது பெண்மைக்குத் தேவைதானா.. (அழுதுகொண்டு)

ராம : அது வந்து...

சீதை : கல்வி கேள்விகளில் சிறந்த பெரியோரே, வேள்விகள் தவங்கள் புரியும் முனி முதல்வர்களே.. நீதியும் அரச நெறியும் அறிந்த அமைச்சர்களே... அயோத்தியின் இந்த நிலையைக் கண்டு கோபம் கொள்ள மாட்டீர்களா..? அநீதியை அநியாயத்தை நிறுத்து என்று கூறுவதற்கு யாருமேயில்லையா..? வேதநீதி புறக்கணிக்கப்பட்டதா.. இறைவா நான் என் செய்வேன்.. நான் என் செய்வேன்.. (தொடர்ந்து அழுதல்).. (பதிந்து..) உங்களிடம் புலம்பிப் பிரயோசனம் இல்லை.. நீங்கள் அனைவரும் பெண்மையை மதிக்கத் தெரியாதவர்கள். பெண்மையின் மென்மையை அறியாதவர்கள்.. பெண்மையின் உண்மையை உணராதவர்கள்.. (சோகமாக) அம்மா... பூமாதேவியே.. என் அன்னையே.. அம்மா தாயே... மீண்டும் அக்கினிப் பிரவேசத்திற்கு நான் பயப்படவில்லை.. ஆனால் இது இறுதியாக அமையு மென்பதற்கு.. என்ன உத்தரவாதம்.. இல்லை. இல்லை.. அம்மா.. பூமாதேவியே.... உனக்காவது என் நிலைமை புரிகின்றதா. எனக்கு ஏற்பட்ட இந்த நிலைமை வேறு எந்தப் பெண்ணிற்கும் ஏற்படக் கூடாது.. அம்மா பூமாதேவி.. தாயே.. வேண்டாம்.. இந்தப் பூவுலக வாழ்க்கை வேண்டாம். என்னை எடுத்துக் கொள்.. எடுத்துக் கொள்.. என்னை ஏற்றுக் கொள். என் பெண்மையை நிரூபிக்க மீண்டும் மீண்டும் அக்கினிப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரவேசம் செய்ய முடியாது. என்னை ஏற்றுக் கொள்ளம்மா.. (பதிந்து).. பூமாதேவியே என்னை ஏற்றுக் கொள்ளம்மா.. பெண்மை தாங்காதம்மா.. பூமாதேவியே போதுமம்மா... என்னை ஏற்றுக் கொள்ளம்மா.. ஏற்றுக் கொள்ளம்மா.. (இறுதிமூச்சு) ஏற்றுக் கொள்ளம்மா.. (வெடிப்பொலி பூமி பிளந்து சீதையை உள்வாங்குகின்றது)

குரல் : ஆம் பூமாதேவி தன் செல்வத்தை தானே எடுத்துக் கொண்டாள். பிளந்த பூமி சீதாபிராட்டியாரை தன்னுள்ளே உள்வாங்கியது. சோக இசை)

........... நிறைவு .............

(5000 ஆண்டுகளுக்கு முன்பு இராமாயண காலத்தில் லங்காபுரியை ஆண்ட தமிழ் மன்னன் சிவ பக்தன் இராவணேஸ்வரனின் வரலாற்றிலிருந்து)

(இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபனத்தில் ஒலிபரப்பப்பட்டது)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 5. சாபம்

(மகாபாரத காலத்தில் மாந்தையில் ஆட்சிபுரிந்த சிற்றரசி அல்லிராணியின் கதையிலிருந்து)







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 5. சாபம்

**நாடகமாந்தர்கள் :**

- **அல்லிராணி** – **மணலூர் (மன்னார்) நாட்டு அரசி**
- **அர்ச்சுனன்** – **பாண்டவர்களில் வில்வீரன்**
- **தந்தை** – **அல்லிராணியின்தந்தை சித்திரவாகன்**
- **குரல்** – **நிகழ்ச்சி ஒருங்கமைப்பாளன்**

**காட்சி : 1**

**களம் : திருக்கேதீச்சர கோவில் முன்னுள்ள மைதானம்**

**நாடகமாந்தர்கள் : குரல், அல்லிராணி, தந்தை சித்திரவாகன், அர்ச்சுனன்**

(அல்லியின் தலைமையில் நடைபெறும் முத்தணிப்பு பெருவிழா. பெரும் சனக்கூட்டம் விழா நடைபெறும் பின்னணி இசை குரலுடன் காட்சி முடியு மட்டும் தொடர வேண்டும்)

குரல் : அன்பான மகாசனங்களே, "அட்ட மன்னர் ஆர்ப்பிசை வெருவும் குட்டுவன் மாந்தையன்ன வெம் குழல் விளங்காய்" என கடைச் சங்க நூலாம் எட்டுத் தொகையில் குறுந்தகையில் சிறப்பித்துக் கூறப்பட்ட வளம் கொழிக்கும் துறைமுக வணிக நகராம் மாந்தையில், இசையால் நீலகண்டனாம் சிவனை வென்று திசை எட்டும் ஆட்சிபுரிந்த சிவ பக்தனாகிய இராவணனின் பட்டத்து மகிஷி மண்டோதரி அன்னையார் வணங்குதற்காக, அவர்தம் மாமனான கட்டடக்கலையில் மாயம் காட்டும் மாயனால் வடிவமைக்கப்பட்ட, நாகர்களின் நாகரிகத்துக்கே எடுத்துக் காட்டாகிய இந்த திருக்கேதீச்சர ஆலய முன்றலில் அமைக்கப்பட்டுள்ள முத்தணிப்புத் திடலில் கூடியுள்ள அனைவரையும் இந்த மாந்தை மண்ணின் சார்பாக வரவேற்கின்றோம்.

(கைதட்டும் ஒலி.. மனிதர்களின் சலசலப்பு)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அல் : தந்தையே.. பார்த்தீர்களா அறிமுகத்தினை.. பார்போற்றும் மாந்தையின் பெருமையை எப்படிக் கூறுகிறான் என்று.. தேகம் புல்லரிக்கின்றது.. எல்லாம் வல்ல எம்பெருமானாம் சிவனின் கிருபையினால் விழா சிறப்பாக அமைய வேண்டும்..

தந் : ஆம் மகளே... உலகின் நாலாபுறத்திலிருந்தும் முத்துக் குளிப்பதற்கும் வியாபாரத்துக்கும் வந்தவர்கள் நம் மண்ணின் அருமை பெருமையை அறிவது எமக்கும் பெருமைதானே..

குர : (தொடர்ந்து) இந்த முத்தணிப்பு விழாவில் தந்தையாருடன் கலந்துகொண்டு சிறப்பிக்கும், அன்பிலும் இரக்கத்திலும் தாயிலும் சிறந்த தாய் என எமது மக்கள் மனதில் இடம்பிடித்த மங்கை, மாந்தை வாழ் மக்களின் செல்வப் புதல்வி, கடற் கலையில் வல்லாள், போர்முறையில் சூரி, பயந்தரும் பலமுடையாள், எதிரிகளின் உயிர் உறிஞ்சும்காளி, மாந்தை மண்ணை ஆளும் வீரமங்கை அல்லிராணி அம்மையாரும் கலந்து, மல்யுத்த, வில்யுத்த, மற்றும் காளையேற்றப் போட்டிகளில் வெற்றிகொள்ளும் வெற்றியாளருக்கு தனது திருக்கரங்களினாலேயே பரிசாக முத்து மாலையை அணிவித்துச் சிறப்பிக்க வந்திருப்பதையிட்டு நாட்டுப் பிரஜைகளாகிய நாங்கள் அனைவரும் மகிழ்ச்சி அடைகின்றோம் (கைதட்டல் ஒலி)

அல் : தந்தையே..

தந் : கூறு மகளே அல்லி.. (சிரித்து) இல்லை அல்லிராணியே..

அல் : (சிரித்து) தங்களுக்கு என்றும் நான் மகள் தான் தந்தையே.. அல்லி என்றே அன்றேல் மகளே என்று அழையுங்கள் தந்தையே.. அதுதான் மனதுக்கு மகிழ்ச்சி..

தந் : அதை இல்லையென்று சொல்லவில்லை அம்மா.. ஆனால்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அல் : ஆனால் என்று ஏனப்பா இழுக்கின்றீர்கள்.. கூற வந்ததை முழுமையாகக் கூறுங்கள்.

தந் : ஆண்பிள்ளை நமக்கு இல்லையே.. அதனால் நாட்டைக் காக்கும் பொறுப்பு, மகளான உனக்குத் தானே என்று எண்ணி உனக்கு பெண்களுக்கே உரித்தான பாட்டும் நாட்டியமும் கற்றுத்தராமல்..

அல் : ஏன் நிறுத்தி விட்டீர்கள்..

தந் : என்னைப் போல் வீரத்தில் சிறந்து விளங்க வேண்டு மென்று வில்லும், வாளும், கையாளக் கற்றுக் கொடுத்து வீரப் பெண்ணாக்கியது தவறோ என இப்பொழுது எண்ணத் தோன்றுகின்றது மகளே..

அல் : ஏன் தந்தையே.. அதில் என்ன தவறு.. நாட்டை ஆள்பவர் அவர் ஆணாக இருந்தால் என்ன பெண்ணாக இருந்தால் என்ன வீரம் என்பது அவசியம் தானே அதிலென்ன தவறு தந்தையே...

தந் : அதில் தவறில்லைத் தான்... ஆனாலும்...

அல் : (இடைமறித்து) கூறுங்கள்..

தந் : எந்த வீரத்தைப்பார்த்து நான் மனம் மகிழ்ந்தேனோ அந்த வீரமே இன்று தர்மசங்கடமான நிலையை ஏற்படுத்தி விடுமோ என்று பயமாக இருக்கின்றது..

அல் : ஏன் தந்தையே.. என்ன நடந்தது.. எதற்காகச் சங்கடப் படுகின்றீர்கள்.. கூறுங்கள்.. கல்வியும் வீரமும் வாய்க்கப்பட்ட நானும்.. வெறும் குழந்தை பெறும் இயந்திரமாகத்தான் பயன்படுத்தப்படுத்தப்பட வேண்டும் என எண்ணுகிறீர்களா...

தந் : நாட்டை மன்னவன் ஆண்டாலும் மற்றவர்களின் முடிவுக்கும் செவிசாய்க்க வேண்டும் அல்லவா..? குடிமக்களில் ஒருசாரார் நீ திருமணஞ் செய்யாமல் இருப்பதைப்பற்றி அரசல் புரசலாகக் கதைப்பதாகக் கேள்வி..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அல் : (ஏளனமாக) குடிமக்கள் எனக்குத் திருமணமாக இல்லை என்று கவலைப்படுகிறார்களாம்.... ஏன் தந்தையே.. ஆண்களைப் பெற்றுத்தரும் பெண் எந்த விதத்தில் ஆணை விடக் குறைந்து போய் விட்டாளாம். மீசை வைத்த கோழையை விட சேலை கட்டிய வீரம்தான் நாட்டிற்குத் தேவை என்பது மக்களுக்குப் புரியாமல் போகலாம். மன்னனுக்கும் மந்திரிகளுக்குமா.. ஏன் தங்களுக்கும்.. இது உறைக்கவில்லை..

தந் : ஆம் மகளே.. அவர்கள் கூறுவது ஒருபுறம் இருக்கட்டும்.. (கவலையாக) ம்.. ம்... உனது திருமணம் தொடர்பாக எடுத்த அத்தனை முயற்சிகளும் தோல்வியில் முடிகின்றனவே.. அதுதான் எனக்கும் கவலையளிக்கின்றது மகளே... பருவவயதில் பெண்ணுக்கு மணமுடித்து வைப்பதும் தந்தையின் கடமைகளில் ஒன்றல்லவா.. உன் பிடிவாதம்.. தடுக்கின்றதம்மா.. உன்னைக் கல்யாணக் கோலத்தில் பார்க்கும் பாக்கியத்தினை எனக்குத் தருவாயா..

அல் : தந்தையே.. ஏன் கவலைப்படுகின்றீர்கள்.. என் பிடிவாதம் என்று ஏன் கூறுகின்றீர்கள்.. நான் என்ன வேண்டாம் என்றா சொல்லுகின்றேன்..

தந் : மகளே..

அல் : ஆம் தந்தையே.. கணவனுக்கு அடங்கியவளாய் மனைவி இருக்க வேண்டும் என்று சாத்திரங்கள் சொல்லுகின்றன. நான் அடங்கி நடக்க வேண்டு மானால் அவன் எல்லா விதத்திலும் என்னைவிட வல்லவனாக இருக்க வேண்டும். அப்படி ஒருவனை அழைத்து வாருங்கள் உங்கள் ஆசையை நிறைவேற்றுகிறேன் என்று தானே சொல்லுகின்றேன். ஒரு பொழுதும் திருமணம் வேண்டாம் என்று நான் கூறவில்லையே..

தந் : நீ எப்போது தான் என்னைக் கதைக்கவிட்டாய். திருமணம் பற்றிப் பேசியவுடன் ஏதோ ஒன்றைச் சொல்லி என் வாயை மூடிவிடுவாய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அல் : என்னிலும் பார்த்த வீரனைக் காட்டுங்கள். நான் எந்தவித மறுப்புமின்றி மணந்து கொள்ளுகின்றேன்.

தந் : (பெருமூச்சு விட்டு) ம்.. அதுதான் முயற்கொம்பாக உள்ளதே.. கேதீச்சரத்தான் கண்திறக்கிறான் இல்லையே..

குரல் : நீங்கள் அனைவரும் எதிர்பார்த்துக் காத்திருக்கும் எமது மாந்தை மண்ணுக்குப் பெருமை சேர்க்கும் மல்யுத்தவீரன் விடையேறி நாகன் கலந்து கொள்ளும் மல்யுத்தப் போட்டி ஆரம்பிக்க உள்ளது.

அல் : கடந்த நான்கு ஐந்து வருடங்களாக தொடர்ச்சியாக வெற்றிவாகை சூடும் வீரன் விடையேறி நாகனே இம்முறையும் வெற்றிவாகை சூடுவான் என்று நான் எண்ணுகின்றேன் தந்தையே.

தந் : இம்முறை தன்னும் வெற்றி கொள்ள யாராவது வீரன் ஒருவன் வருகிறானா என்பதைப் பொறுத்திருந்து பார்ப்போம். (மின்னல் முழக்கம் கேட்கிறது)

அல் : வெற்றி கொள்ள வீரன் வரவில்லை.... (சிரித்துக் கொண்டு) மாறாக இடியும் மின்னலும் தான் வந்திருக்கிறது.. ஏன் அவனைக் கோழையாக்குகின்றீர்கள் தந்தையே.. வீரன் வீரனாகவே இருந்து விட்டுப் போகட்டும். அது சரி திடீரென்று மின்னல் முழக்கம் பலமாக இருக்கின்றது.

தந் : ஆம்.. மகளே.. திடீரென்று.. அர்ச்சுனா உனக்கு அபயம்.... மாந்தை மக்களைக் காப்பாற்று.. முத்தணிப்பு விழாவிற்கு பங்கம் ஏற்படுத்தி விடாதே..

அல் : (சிரித்து) என்ன தந்தையே நீங்களுமா..

தந் : இதில் என்ன தவறு மகளே.. இடி மின்னலிலிருந்து நம்மைப் பாதுகாக்க நாம் வேண்டுவது ஒன்றும் புதிதல்லவே..

அல் : ஏன்... எதற்கென்று விபரம் தெரியாது... ஏதோ கூறுகிறோம். அவ்வளவு தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தந் : அது வந்து.. பாண்டவர்களில் வில் வீரனான அருச்சுனனின் தவத்தினால் பெற்ற வரம் அம்மா.. அது ஒரு நீண்ட கதை..

அல் : கூறுங்கள் தந்தையே.. ஒருபுறம் இடி மின்னல்ஒருபுறம் மல்யுத்தம் சூடுபிடித்திருக்கிறது.. கூறுங்கள்..

தந் : பாண்டவர்களில் வில் வீரனான மாவீரன் அருச்சுனன் வனவாச காலத்தில் காளபைரவ வனத்தில் கடுந்தவம் செய்யத் தொடங்கினானாம். எழுபதடிக் கம்பம் ஒன்றை நட்டு அதன் மேல் இளநீர் ஏழை வைத்து அவற்றின் மேல் ஏழு விளாம்பழங்களை வைத்து அவற்றுக்கும் மேலாக ஏழு எலுமிச்சம் பழங்களையும் அதன் மேலே ஏழு கொட்டைப் பாக்குகளையும் வைத்து அதன் மேலே

அல் : அதன்மேலே.. மேலே.. என்று முடிவில்லாமல் சொல்லிக் கொண்டே போகின்றீர்கள்..

தந் : எதற்கும் அவசரம்தான் உனக்கு.. நிதானமாகக் கேள்... ஏழுகொட்டைப் பாக்குகளிற்கு மேலாக ஏழு குன்றிமணிகளை வைத்து அதுவும் போதாதென்று குன்றிமணிகளுக்கு மேல் ஏழு கடுகுகளை வைத்து அதன்மேலே ஏழு செப்பு ஊசிகளை வைத்து அதன் மேலே ஏறிநின்று கோரத்தவம் செய்தானாம்.

அல் : அப்பாடா.. (ஆச்சரியத்துடன்) அப்புறம்.. அப்புறம்...

தந் : தவத்தின் உக்கிரத்தினால் எழுந்த வெப்பத்தினைத் தகிக்க முடியாத தேவர்கள் தவத்தைக் கலைக்கும் முயற்சியில் இறங்கினார்களாம் அப்போது மேகராசன் அவனுக்குத் தன்மகள் மின்னொளியாளை மண முடித்துக் கொடுத்து இடி அஸ்திரமும் கொடுத்து கலியுகத்திலே அர்ச்சுனன் பெயரைச் சொன்னாலே காததூரம் தள்ளிப்போய் இடிவிழும் என்று வரம் கொடுத்தானாம். அந்த வரம் தான் எல்லோரையும் இப்படிக் கூறவைத்துள்ளது..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அல் : அந்த வீரன் பெற்ற வரம்தான் உங்களைக் காக்கும் என்று நம்புகிறீர்களாக்கும்...

தந் : ஆம்.. ஆம்.. எது எப்படியோ.. நம்பிக்கை

அல் : (சிரித்தல்)...

(பலத்த கைதட்டல்)

குரல் : இதோ.. இம்முறையும் விடையேறி நாகன் வெற்றி பெற்று தனது மல்யுத்தப் பராக்கிரமத்தினை மீண்டும் ஒருதடவை நிரூபித்துள்ளான்.

தந் : ஆம்.. இம்முறையும் அவனே வெற்றியாளன் போல் தெரிகின்றது..

குரல் : ஆம்.. மல்யுத்தத்தில் வென்ற விடையேறி நாகன்.. தன்னுடன் மோதுவதற்கு இந்த மாந்தை மண்ணணில் மட்டுமல்ல முத்துவியாபார நோக்கிற்காக இங்கு வருகை தந்திருக்கும் அரேபிய, துலுக்க, சீன, இந்திய சிங்கள வீரர்கள் யாராயினும் உள்ளார்களா என்று சவால் விடுகின்றான். சவாலை ஏற்கத் தயாராக யாராவது.. உள்ளீர்களா.. உங்கள் வீரத்தை இந்த மண்ணில் பறைசாற்ற யாராவது முன்வருகின்றீர்களா.. (தொடர்ந்து இடி இடிக்கின்றது)

தந் : இங்கே பார் இந்த வெற்றிக்களிப்பில் விடையேறி நாகன் கூறும் மமதையான, ஆணவம் மிக்க வார்த்தைகளைக் கேள்.

அல் : கோழைகள்.. துணிவற்ற கோழைகள்.. பார்த்தீர்களா தந்தையே.. இதனால் தான் நான் திருமணமே வேண்டாம் என்று கூறுவது.. அனைவரும் பயந்தாங் கொள்ளிகள்..

தந் : உண்மைதான்.. பொறுத்திரு.. என்ன நிகழ்கின்றது என்று தான் பார்ப்போம்.. இடியும் மின்னலும் வேறு வானைக் கிழித்துக் கண்ணைக் குருடாக்கி காதைச் செவிடுபடுத்துகின்றது..

அல் : (ஏளனமாக) உங்கள் மகாவீரன் அருச்சுனன் தங்களைக் காக்க வரவில்லைப் போலும்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அர் : (ஆக்ரோசமாக மேடையில்) இதோ நானிருக்கிறேன்... மல்யுத்தம் மட்டுமல்ல.. வில்வித்தை.. வாள்சண்டை எதிலும் மோதத் தயாராக இருக்கின்றேன். விடையேறி நாகன் மட்டுமல்ல வேறு எந்த வீரனுடன் என்றாலும் நான் சவாலை ஏற்றுப் போட்டியிடத்தயார்.. (கைதட்டல்)

குர : மல்யுத்தத்தில் மோதுவதற்கு இளம்காளை ஒன்று மேடைக்கு வந்துள்ளது... விடையேறி நாகனின் வீரச்சவாலை ஏற்று வீர இளைஞன் இங்கே மேடையில்.. பார்ப்போம்.. காத்திருங்கள். (சபையில் கைதட்டல்)

தந் : அங்கே பார் மகளே.. அனைவரும் கோழை என்றாய்.. சவாலை ஏற்று ஒரு இளைஞன் மேடையில்..

அல் : (தனக்குள்) ம்.. இப்படி ஒரு வீரனை கனவிலும் பார்த்ததில்லை.. அழகும், கம்பீரமான தோற்றமும் ..ம்.. இனம் புரியாத ஒரு கவர்ச்சியும்.. வீரனென்றால் இவன்தான்.. ஆண்மகன்.. இல்லை இல்லை.. என் மனம் வீணாகச் சஞ்சலப்படுகின்றது.. ஏதோ காந்தம் இரும்பைக் கவர்வது போல் என்னையறியாமலே என் மனம் அவனை நோக்கி... சீச்சீ... அப்படி ஒன்றுமில்லை.. ம் ம்...

தந் : என்ன மகளே.. போட்டிக்கு வீரனொருவன் தயார் என்றவுடன் உனக்குள்ளேயே முணுமுணுக்கிறாய்.

அல் : (தடுமாற்றத்துடன்) இல்லை.. இல்லை தந்தையே.. இவன் மாந்தையின் மைந்தனைப் போல் தெரியவில்லை.. அதுதான் எந்த நாட்டவனோ மாறு வேடத்திலிருப்பதால் சரியாகத் தெரியவில்லை.. அதுதான் சிந்தித்தேன்.. அவ்வளவுதான்.. வேறொன்றுமில்லை..

தந் : எந்த நாட்டவனோ... முதலில் வெற்றிபெறட்டும்.. ஆணவத்தை அடக்கட்டும் அதன்பின் ஆராயலாம்.. பொஞ்சம் பொறு மகளே...


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அல் : (தடுமாற்றத்துடன்) ஆ.. ஆம்.. இவ்வீரன்

தந் : வென்றால் உன்னுடன் விற்சமர்.. புரியவும் வேண்டுமா.. அப்படிப் புரிந்தாலும்.. துணிவுள்ளவனாகத் தெரிகின்றான். (சிரித்து) அவனுக்கு மீசை எடுக்க வேண்டிய அவசியம் இருக்காது என்று எண்ணுகின்றேன்..

அல் : (வெட்கத்துடன்) போங்கள் தந்தையே.. ம் பார்ப்போம்.. வீரனுக்குத்தான் மீசை அழகு கோழைகளுக்கல்ல.. அதுவே என் கொள்கை.. அதில் என்ன தவறு ம்.. எதற்கும் முதலில் மல்யுத்தத்தில் வெற்றிக் கொடியை நாட்டட்டுமே.. மிகுதியை அப்புறம் பார்ப்போம்..

குர : ம்.. சரியான போட்டி.. இம்முறையும் விடையேறி நாகன் வெற்றியைத் தக்கவைக்க பெரும்பாடுபடுகின்றான்.. புதிதாக வந்த பிறநாட்டு வீரன் சளைக்காமல் போராடுகிறான். அதோ.. இளைஞனின் குத்து பலமாக விழுந்ததனால் வேகத்தைக் கட்டுப்படுத்தமுடியாது விடையேறி நாகன் பின்வாங்குவது போலத் தெரிகின்றது.. ஆம்..ஆம்.. அப்படியே..

அல் : (மனதுள்) இந்த வீரன் வெல்ல வேண்டும்.. சீச்சீ.. என் மனம்.. என்ன.. யாரென்று முன்பின் தெரியாத இளைஞனின் புறக் கவர்ச்சியில் பறிகொடுத்து.. என்சொந்த நாட்டுப்பிரசை தோற்க வேண்டும் என எண்ணுகின்றேனே.. ஏன் இந்த மாற்றம்.. ஏன் இப்படி ஒரு எண்ணம்..

தந் : பார்த்தாயா மகளே.. அதோ அந்த இளைஞன்... விடையேறி நாகனை அலாக்காகத் தூக்கி வானத்தில் சுழற்றுவதை..

குர : இதோ.. விடையேறி நாகன் இப்படி ஒரு நிலை இன்று ஏற்படும் என்று கனவில்கூட நினைத்திருக்கவே மாட்டான். தோல்வியின் விளிம்பில்.. வீர இளைஞனின் தாக்குதலுக்கு ஈடுகொடுக்க முடியாது.. ஆம்.. இதோ வெற்றி.. (பலத்த கைதட்டும் ஒலி) வெற்றி.. வீர இளைஞன் வெற்றிக்கனியை பறித்து விட்டான்..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அல் : ஓ..ஓ.. (கைதட்டல்) தந்தையே அங்கே பாருங்கள்..

குரல் : ஆம். இம்முறை மல்யுத்தத்திற்கான வெற்றி மாலையை இந்த இளைஞன் தனதாக்கிக் கொண்டான்..

தந் : பார்த்தாயா.. உன் எண்ணத்தின் படியே வெற்றி அந்த வீரனுக்கே கிடைத்துவிட்டது..

அல் : வீரம் எங்கு உள்ளதோ அது கௌரவிக்கப்பட வேண்டியது... வீரம் வென்றுவிட்டது.. அது யாராக இருந்தாலும் சரி.

........ காட்சி மாற்றம் ........

**காட்சி : 2**

**களம் : அந்தப்புரப் பூஞ்சோலை**

**பாத்திரங்கள் : அல்லிராணி, தந்தை சித்திரவாகன், அர்ச்சுனன்**

(ஆண்கள் புகமுடியாத பூஞ்சோலையினுள் அர்ச்சுனன் சென்று விடுகின்றான். அதை அல்லியின் தோழிகள் கண்டு அல்லியிடம் முறையிட அல்லி வருகிறாள்)

அல் : (ஆணவத்துடன்) சேடிகள் கூறினார்கள்.. சோலையில் ஒரு ஆடவன் என்று.. நீ எமது தேசத்தவன் போலத் தெரியவில்லை.. இது அந்தப்புரச் சோலை.. (அதட்டி) இங்கு என்னைத்தவிர.. அதுதான் அல்லிராணியைத் தவிர.. வேறு எவரும் வரக்கூடாது என்பது உனக்குத் தெரியாதா..

அர் : (ஏளனமாக) தாங்கள்தான் இந்த நாட்டின் அரசி அல்லிராணி என்பது எனக்குத் தெரிந்த விடயம். தங்கள் கையினால் முத்துமாலையை விருதாக வாங்கும் பொழுதே தெரியும். ஆனால் அரசி அல்லிராணியைத் தவிர.... வேறு எவரும் இங்கு வரக்கூடாது என்பது மட்டும்... எனக்குத் தெரியாது..

அல் : விருதோ..? விருது என்கையால் வாங்கினாயா..? என்னது கையினால் விருது நீ..நீ.. வாங்கினாயா..?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அர் : ஆம்.. விடையேறி நாகனை வென்று மல்யுத்தத்தில்

அல் : (தனக்குள்) ம்.. அவன்.. நீ தானா.. அதுதான் இவளவு ஆணவமா.. திமிர் பிடித்தவன்.. அந்த ஆணவத்தில் தான் இங்கே வேறு எவரும் வரக்கூடாது என்பது தெரிந்தும் வந்தாயா..

அர் : ஆணவமல்ல.. அறியாமை... தெரியாத்தனம்...

அல் : பிறநாட்டவன். எமது நாட்டு நடைமுறைகள் தெரியாது என்று கூறுகின்றாய்.. அதனால் மன்னித்து விடுகிறேன். தெரியாமல் சோலையில் நுழைந்தமைக்கு மன்னிக்கலாம்..

அர் : எனக்கு உங்கள் மன்னிப்புத் தேவையில்லை...

அல் : அப்போ..

அர் : மன்னிப்பு வேண்டாம்.. ஆனால் (அழுத்தி) தங்கள் காதல் வேண்டும்.

அல் : (ஆணவத்துடன்) என்ன சொன்னாய்.. என்ன துணிச்சல் உனக்கு.. நான் இந்த பிரதேசத்தின் அரசி.. ஆண்களைக் கேட்டால் தெரியும் இந்த அல்லிராணி யாரென்று.. எனது வீரத்தைப் பற்றி.. ம்.. காதலாம் காதல்.. (மனதுள்) ம்.. துணிந்தவன்..

அர் : நான் மற்றவர்களின் கருத்தினைப் பற்றி அக்கறை கொள்வதில்லை. அதைப்பற்றி கவலைப் படவுமில்லை.. எனக்கு.. எனக்கு.. தாங்கள் அழகான பெண்ணாக மட்டும்தான் தெரிகின்றீர்கள்..

அல் : (கோபமாக) என்ன.. யாரிடம் பேசுகிறாய் என்பது புரிகிறதா.. இடம் கொடுத்தால் மடமே கட்டி விடுவாய் போலல்லவா இருக்கிறது.. எதையும் அளந்து பேசக் கற்றுக் கொள்... என்ன வேண்டும் உனக்கு..


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அர் : அது தானே கூறிவிட்டேனே.. தாங்கள்.. தங்களது காதல்.. இவை இரண்டுமே எனக்குத் தேவைப்படுகின்றது. அதனை மட்டுமே தங்களிடம் நான் எதிர்பார்க்கிறேன்.. அவ்வளவு தான்..

அல் : அது அத்தனை சுலபமில்லை புரிந்துகொள்.. அதற்கு நீ என்னோடு போரிட்டு வெல்ல வேண்டும்..

அர் : (பயந்தது போல நடித்து) போரா.. ஐயோ.. ஆயுதமா..

அல் : ஆம்.. நீ எந்த ஆயுதத்தை இயக்குவதில் வல்லவன் என்பதைச் சொல். நான் அதே ஆயுதத்தால் போட்டிக்கு வருகிறேன். வீண் வார்த்தைஜாலம் தேவையில்லை..

அர் : போட்டியா.. (ப்பு.. சிரித்தல்)

அல் : என்ன சிரிப்பு.. ஏளனமாக இருக்கின்றதா.. போட்டி போடுவதற்கு பின்வாங்குகின்றாயா..

அர் : எனக்குப் போட்டியிடுவதில் நாட்டமில்லை.. என் மனசு தங்களையே சுற்றி வருகின்றது. ஆனால்... அவசியம் போட்டியிட்டு வென்றுதான் அதைப்பெற்றுக் கொள்ள வேண்டுமென்றால் அதற்கும் தயார். ஒன்று.. என்னைப் போருக்கு அழைக்கும் தாங்கள் தான் ஆயுதம் எது என்பதையும், முடிவு செய்தல் வேண்டும்.

அல் : நீர் ஆழம் தெரியாமல் காலை விடுகின்றீர்.

அர் : (ஏளனமாகச் சிரித்து) எனக்கு நன்றாக நீச்சல் தெரியும் பெண்ணே..

அல் : என்ன.. ஏளனமா.. ம்.. எங்கே பார்ப்போம்.. நீர் வில்லோடு வந்திருப்பதால் விற்போர் புரியலாம். சம்மதம் தானே..

அர் : ம்.. (மனதுள்) நான் அறிந்தது உண்மைதான்.. வில் வித்தையில் இவள் எனக்கு நிகரான கெட்டிக்காரி.. அதனால்தான் துணிந்து அதையே தேர்ந்தெடுத் திருக்கிறாள்..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அல் : வார்த்தை வினோதங்கள் போதும்.. எங்கே உன் வீரத்தைக் காட்டு.. அதோ பறக்கின்றதே நாரை.. அதைக்குறி வைக்கலாம்.. யார் எய்த அம்பு அதை வீழ்த்துகின்றதோ அவரே வெற்றி பெற்றவர் என்ற முடிவுக்கு வரலாம். இருவரும் ஒரே நேரத்தில் விடவேண்டும்.. மறந்து விடாதே.. தயாராகு.. எங்கேவிடு.. (இருவரும் அம்பு விடுகின்றார்கள்)

அர் : நீங்கள் விட்ட அம்பு நாரையின் காலில் தைத்துள்ளது..

அல் : அதிலென்ன தவறு.. ஆனால் உங்கள் அம்பு நாரையின் சிறகில் தான் தைத்துள்ளது..

அர் : குறி தவறவில்லைத் தான்.... ஆனால் பறக்கும் நாரைக்குச் சிறகில்தான் எய்ய வேண்டுமென்பது தெரியாதா..

அல் : ஆ.. (ஆச்சரியத்துடன்).. (நாணத்துடன்) ம்.. ஏற்றுக் கொள்ளுகின்றேன்..

அர் : புரிகின்றதா..

அல் : (நாணத்துடன்) ம்.. வில் வித்தையில் என்னை வெல்ல ஒருவரால் முடியுமானால் அது அர்ச்சுனனால் மட்டும் தான் என்று இறுமாந்திருந்தேன்.. இன்று தங்களிடம் தோற்று விட்டேன்.. நான் சந்திக்கும் முதல் வீரமகன் தாங்கள் தான்.. தாங்கள் யார் என்று தெரிந்து கொள்ளலாமா..?

அர் : போட்டியில் ஜெயித்தால் காதலிப்பதாய் சொன்னீர்கள்.. நான் ஜெயித்து விட்டதாக தாங்களே ஒப்புக் கொண்டும் விட்டீர்கள்.. அப்புறமென்ன.. காதலைத் தொடங்கலாமா..? நான் யார் எவர் என்பதனைப் பற்றி அக்கறைப் படத்தேவையில்லை..

அல் : (நாணத்துடன்) அது.. அது.. வந்து.. வந்து.. என்றாலும் புருஷன் வம்சத்தை மனைவி அறிவது அவசியம் அல்லவா..

அர் : அதோ தங்கள் தந்தையும் வருகிறார்..

அல் : (பதட்டத்துடன்) ஆ.. ஆ.. தந்தையாரா....

தந் : என்ன.. இருவரும் நாரையுடன் தர்க்கம் புரிகின்றீர்கள்..

அல் : அது வந்து.. வந்து.. தந்தையே..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தந் : (ஆச்சரியத்துடன் அர்ச்சுனரைப்பார்த்து) நீங்களா..

அல் : இவர்தான் தந்தையே அன்று மாறுவேடத்தில் வந்து மல்யுத்தத்தில் விடையேறிநாகனை வென்றவர்.. அது சரி.. நீங்களா.. நீங்கள் இங்கு எப்படி.. என்கிறீர்களே.. உங்களுக்கு இவரை முன்னரேயே தெரியுமா தந்தையே..

தந் : ஆம் மகளே.. பாண்டவர்களில் வில்லுக்கு விஜயன் என்றழைக்கப்படும் அர்ச்சுனர் தான் இவர்...

அல் : (நாணத்துடன்).. வந்து.. வந்து.. அது தெரியாமல் நா.. நான்.. ஏதேதோ.. தர்க்கம் பண்ணிவிட்டேன்.

அர் : அதே தர்க்கம் தானே வெற்றியை எனக்குப் பெற்றுத் தந்தது..

அல் : அது.. அதுவந்து..

தந் : வெற்றியா.. அப்படியென்றால்...

அல் : ஆம் தந்தையே.. வில்வித்தை என்றார்.. ஆம் என்றேன்.. நாரைக்குக் குறிவைப்போம் என்றார்.. இருவரும் வைத்தோம்.

அர் : இருவரினதும் குறி தவறவில்லைத் தான்.. ஆனால் பறக்கும் நாரைக்குச் சிறகில்தான் எய்ய வேண்டும் என்பது உங்கள் மகளுக்குப் புரியவில்லை.. அதனால் தான்..

அல் : அவர் வென்றதை ஏற்றுக்கொண்டேன் தந்தையே..

தந் : பிறகென்ன.. ஈசனே.. எம்பெருமானே.. கேதீச்சரத்துறை கேதாரநாதரே.. என்று என் மனக்குறைதீரும்... மாந்தை மக்களின் பேராசைநிறைவேறும் என்று காத்திருந்தேன்.. எங்கள் குலம் காக்க உன்கடைக்கண் பார்வையைச் செலுத்தி விட்டாயப்பா..

அர் : அப்படியா.. எல்லாம் அவன் செயல்.

தந் : அதுசரி அர்ச்சுனரே.. ஏது இந்தப் பக்கம்.. ஏதாவது இராச்சிய அலுவலாகவா..

அர் : இல்லை இல்லை.. அப்படி ஒன்றும் இராச்சிய அலுவல் இல்லை..

தந் : அப்போ ஏதாவது..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அர் : இல்லை அப்படி ஒன்றுமில்லை..

தந் : அப்படி ஒன்றுமில்லை என்றால் போட்டியில் பங்கேற்கவென்றே வந்தீர்களாக்கும்..

அர் : எதிர்பாராத ஒரு சிறு சம்பவம் நடந்து விட்டது.. அதற்காகத் தீர்த்த யாத்திரை வந்தேன்.. கீரிமலை நகுலேச்சரத்தையும் மணிபல்லவத்தையும் தரிசித்து கேதீச்சரநாதரையும் தரிசித்துச் செல்ல எண்ணி வந்தேன்.. தரிசித்தேன்.. வந்தபோது முத்தணிப்பு விழா நடந்தது.. பார்வையாளனாக வந்தேன்.. வீரனின் ஆணவம் மிகுந்த வார்த்தைகள் நாராசமாக எனது காதில் விழுந்தது.. மாறுவேடத்தில் வந்து விடையேறி நாகனை வென்றேன். தங்கள் மகளிடமிருந்து பரிசிலை வென்றேன்.. இப்போ தங்கள் மகளையே பரிசாக்க..

தந் : (இடைமறித்து) அதற்கென்ன.. தடை ஏதும் இல்லை.. இந்த நாடே அறிந்தது.. வீரனுக்கு மாலையிடுவது.. தோற்றவனுக்கு மீசை மழிப்பது.. அவ்வளவுதான்.. என் மகளின் கொள்கை.. வென்று விட்டீர்கள்.. பிறகென்ன..

அர் : அப்போ என் மீசை தப்பிவிட்டது என்று கூறுங்கள்..

அல் : (சிரித்து) இல்லாமல்... அது சரி... எதிர்பாராத சம்பவம் நடந்து விட்டது.. அதற்காகத் தான் மாறுவேடம் பூண்டு தீர்த்த யாத்திரை வந்தேன்.. என்றீர்களே.. அப்படி என்னவோ..

அர் : நிச்சயம் அறியத்தான் வேண்டுமா அல்லிராணியாரே..

அல் : (வேண்டா வெறுப்பாக) கேட்டேன். அவ்வளவு தான்.. இஷ்டமென்றால் கூறுங்கள்.. இல்லாது விடில் பரவாயில்லை.. (பெருமூச்சுவிட்டு) ம் பரவாயில்லை..

அர் : திரௌபதி அம்மையார் பஞ்சபாண்டவர் ஐவருக்கும் மனைவியர் என்பது உலகறிந்த விடயமே...

அல் : ஆமாம்.. அதற்கென்ன...

அர் : திரௌபதியின் அறைக்குள் ஒரு நேரத்தில் ஒரு சகோதரன் மட்டுமே நுழைய வேண்டும் என்பதுவும், அந்நேரத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மற்றையவர்கள் அங்கே நுழையக் கூடாது என்பதுவும் பாண்டவர்கள் நாம் ஐவரும் ஒத்துக் கொண்டிருந்த ஒரு பொது விதி..

அல் : அப்படியா..?

அர் : ஆம்.. அவரின் அறைக்குள் நுழையும் சகோதரன் தன் பாதுகையை கதவிற்கு வெளியே விட்டு விட்டு செல்ல வேண்டும்.

அல் : அப்படியா.. அப்போ.. பிறகு.

அர் : ஆவலைப்பார்.. பெண்களுக்கு அடுத்தவன் அதிலும் பெண்கள் சம்பந்தப்பட்ட கதைகேட்பதில் உள்ள ரசனை வேறு எதிலும் கிடையாது..

அல் : (சிணுங்கலுடன்) போதும்.. வேண்டாம்.. கூற வேண்டாம்.

அர் : கோபத்தில் முகத்தின் அழகு இன்னும் ஒருபடிமேல்.

அல் : (பொய்க்கோபத்துடன்) விரும்பினால் கூறுங்கள் அதற்காக தேவையற்ற வர்ணனைகளை விடுங்கள்.

அர் : சரி.. ஒரு நாள் எங்களில் மூத்தவர் யுதிஷ்டிரன் திரௌபதியின் அறையில் இருந்தார். அப்போது கதவிற்கு வெளியே இருந்த அவரது பாதுகையை நாய் ஒன்று தூக்கிச் சென்று விட்டது. இதை அறியாத நான், திரௌபதியின் அறைக்குள் நுழைந்து விட்டேன்..

அல் : (கொல்லென சிரித்து) அப்புறம்..

அர் : தங்களுக்கு சிரிப்பாக இருக்கிறது..

அல் : இல்லையில்லை.. அப்புறம்.. அப்புறம்.

அர் : பிறகென்ன ஒப்பந்தத்தின் படி, நான் தென்திசை நோக்கி ஒருவருடம் தீர்த்தயாத்திரை செல்ல வேண்டியதாயிற்று..

அல் : (ஏளனத்துடன்) அப்போ அந்த பாதுகையை எடுத்த நாய்.. அதுவும் உங்களுடன் கூட வந்ததா...

அர் : அதை ஏன் கேட்கிறீர்கள்.. அதன் பரம்பரைக்கே சாபமாயிற்று

அல் : நாயின் பரம்பரைக்கே சாபமா..?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அர் : ஆம்.. தமையனார் உள்ளே இருந்ததையும் நான் உள்ளே சென்றதையும் தர்மசங்கடமாக உணர்ந்த திரௌபதி பாதுகையைத் திருடிய அந்த நாயின் மீது கடும் கோபத்திற்கு ஆளானார். அதனால் அனைத்து நாய்களுக்கும் "நீங்கள் உடலுறவில் ஈடுபடுவதை இந்த உலகமே பார்க்கும். இதனால் நீங்கள் அவமானமடைவீர்கள்" என்று சாபமிட்டார்...

அல் : ஐயோ பாவம்.. வாயில்லாப் பிராணிகள்..

அர் : உண்மைதான்.. ஆனால் அதனால்தானே நான் இன்று தங்கள் நாட்டுப் புனிதத் தலங்களையும் தங்களையும் தரிசிக்க முடிந்தது..

அல் : (ஏளனமாக) அப்படியாயின் அந்த நாய்களின் குலத்துக்கு சாபவிமோசனம் கொடுக்கலாம் தானே..

அர் : அது என்னால் இயலாத காரியம் ராணியாரே...

அல் : (நாணத்துடன்) வேண்டாம். அல்லி என்றே கூறுங்கள். அது எம்மிடையே ஏற்பட்டுள்ள உறவின் இடை வெளியைக் குறைக்கும்.. உறவின் உரிமையைக் குறிக்கும்..

அர் : ம்.. அதுவும் சரிதான், அதற்கிடையில் ஆசையைப்பார்..

அல் : (நாணத்துடன்) சீ.. போங்கள்..

அர் : ஆ.. அதோ கேதீச்சரநாதரைச் தரிசிக்கச் சென்ற தந்தையாரும் வருகிறார்..

அல் : வாருங்கள் தந்தையே.. பூஜைத்தட்டுடன்..

தந் : (இடைமறித்து) ஆமம்மா... இந்தாருங்கள் பூஜை பிரசாதம்.. விபூதியைப் பூசுங்கள்..

அல் : சரி தந்தையே.. (விபூதி பூசுதல்)

அர் : கண்ணை மூடுங்கள்... விபூதி கண்ணுள் விழப் போகின்றது.. (ஊதுதல்..)பூ..பூ..

தந் : கண்ணைப் பாதுகாத்தது போலவே என் கண்ணான மகளையும் பாதுகாப்பீர்கள் என எண்ணுகின்றேன்..

அர் : அதில் சந்தேகம் வேண்டாம்..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அல் : (ஏளனமாக) தந்தையே கேதீச்சரநாதரிடம் போய் இவ்வளவு நேரம்..

தந் : அது வந்து.. ஆனந்தம்... பூரிப்பு... நான் கேட்டுக் கொண்டபடியே.. நீ நினைத்தபடியே ஒருவனைக் கொண்டு வந்து சேர்த்தாரல்லவா..

அல் : அப்போ..

தந் : என் மனப்பாரத்தை சிவன் சன்னதியில் இறக்கி வைத்தேனம்மா.. இந்த மணவாழ்க்கையினால் உனக்குக் கிடைக்கும் முதற் குழந்தை ஆண்மகவாகப் பிறந்து இந்த மாந்தையை ஆளவேண்டும் என்றும் வேண்டி வந்தேன் அம்மா..

அல் : (வெட்கத்துடன்) தந்தையே அதற்கிடையில் நீங்கள்..

தந் : அதில் என்ன தவறம்மா.. பிரதம சிவாசாரியார் எதிர்வரும் துலாராசியும் சுவாதி நட்சத்திரமும் சேர்ந்து அமையும் புதன்கிழமை திருமணத்தை நடாத்தக் கூடிய சுபயோக தினம் அமைந்துள்ளது என்றும் தெரிவித்தார் அம்மா..

அர் : ஆண்டவன் விருப்பம் அதுதான் என்றால் ஒழுங்கு செய்யுங்கள்..

அல் : (நாணத்துடன்) பாருங்கள்.. அவசரத்தை..

தந் : ஆண்டவன் அனுமதித்து விட்டான் பிறகென்ன.. எனக்குத் தேவை பேரன்.. நாடாள ஒரு ஆண் வாரிசு.. அவ்வளவுதான் (அனைவரும் சிரித்தல்)

..... காட்சி மாற்றம் .....

**காட்சி : 3**

**களம் : மாந்தைக் கடற்கரை**

**மாந்தர்கள் : அல்லி, அர்ச்சுனன்**

(இருவரும் காதல் போதையில்)

அர் : அல்லி..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அல் : ம்..

அர் : அதோ பார் அந்த முழுநிலவை..

அல் : ம்.. முழு நிலவு.. கடற்காற்று.. பஞ்சுபோன்ற மணல்.. இவை எங்கள் மாந்தையின் சொத்துக்கள்..

அர் : கடலில் விளையும் முத்துக்கள்.. தாங்கள் பரிசாகத் தந்த மாலையில் தவளும் முத்துக்கள்.. (கன்னத்தைக் கிள்ளி).. ஏன் என் மடியில் தவழுகின்ற இந்தச் செல்ல முத்து.. அவைகளும் இந்த மாந்தையின் சொத்துக்கள் தானே.. (முத்தம் கொடுத்தல்)

அல் : சீ.. விடுங்கள்.. எப்போதும்... இடம் கொடுத்தால் விடமாட்டீர்கள்.. சந்தர்ப்பம் கிடைத்துவிட்டால் போதும்.. அதே எண்ணம் தான்.. விடுங்கள்..முழுநிலவு பார்க்கப் போகின்றது..

அர் : அதற்கென்ன.. தரையில் உள்ள முழுநிலவுக்குக் கொடுத்த முத்தத்தினைப்போல் வானத்து நிலவுக்கும் கொடுத்திருப்பேன்.. அவ்வளவு தான்..

அல் : ம்.. அவ்வளவு துணிச்சலா..

அர் : தடைபோட்டால்.. கிடைக்கும் இடத்தில் பெறுவது தவறில்லைத் தானே..

அல் : ஆளைப் பாருங்கள்.. அர்ச்சுனன் காதல் பெண்களின் சக்கரவர்த்தி என்று கேள்விப்பட்டுள்ளேன்.. அது எத்துணை உண்மை என்பதை சொல்லில் மட்டுமல்ல செயலிலும் காட்டுகிறீர்கள்..

அர் : ம்.. எனது உடைமை.. இப்போது அனுபவியாமல் கிழப் பருவத்திலா அனுபவிப்பது.. தமிழறிஞர்களும் அதை உணர்ந்து தானோ பருவத்தே பயிர் செய் என்றார்கள்..

அல் : எதற்கும் குறும்பு தான்.. போங்கள்..

அர் : உண்மையைச் சொல்.. நான் அர்ச்சுனன் என்று தெரிந்திருந்தால் போட்டிக்கு வில்லைத் தேர்ந்தெடுத்திருக்க மாட்டாய்.. அப்படித்தானே..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அல் : இல்லை.. அப்போதும் வில்லைத் தான் தேர்ந்தெடுத்திருப்பேன்..

அர் : உண்மையாக..

அல் : ம்.. அது காமன் கையிலிருக்கும் கரும்பு வில்லாகத்தான் இருந்திருக்கும்..

அர் : அவ்வளவு ஆசையா..

அல் : போங்கள்.. என்னை விடுங்கள்.. (போதல்.. கொலுசுச் சத்தம் கேட்டல்)

அர் : எங்கே ஓடுகிறாய்.. தந்தையாரின் முக்கிய வேண்டுதலை மறந்து விட்டாயே...

அல் : (திரும்பி ஆச்சரியத்துடன்) என்ன தந்தையாரின் வேண்டுதலா... அது என்னவோ... கூறுங்கள்...

அர் : உரத்துக் கூறமுடியாது.. பரமரகசியம்.. எம்மைச் சுற்றியும் ஒற்றர்கள் இருக்கலாம்.. அருகேவா.. இரகசியமாகவே கூறுகிறேன்.

அல் : (அருகில் வந்து ரகசியமாக) கூறுங்கள்.. என்னவோ..

அர் : மற்றவர்களுக்கு கேட்டுவிடும்.. அருகே வா காதைக் கொடு... ரகசியமாகச் சொல்லுகிறேன்...

அல் : (அருகில் செல்ல கட்டிப்பிடிக்க) சீ... விடுங்கள்.. (சிரித்து) திருடன்.. ஒற்றர்கள் பார்த்துவிடப் போகிறார்கள்..

அர் : தந்தையார் தனக்கு ஒரு பேரன் வேண்டுமாம்.. நாடாள ஒரு ஆண்வாரிசு வேண்டுமாம்..

அல் : கொடுங்கள்.. யார் வேண்டாமென்றது..

அர் : உனது துணையில்லாமலா..

அல் : போங்கள்.. (போய்க்கொண்டு) ம்.. அதற்கென்ன.. சிரித்தல்...

அர் : கள்ளி... ஓடிவிடலாம் என்று நினைத்தாயா...

அல் : ஆ.. விடுங்கள்..

அர் : கையில் கிடைத்ததை விட்டுவிட்டு தந்தையிடம் நான் என்னத்தைக் கொடுப்பதாம்...

அல் : ச்சீ... போங்கள்... ம்... (இருவரும்) சிணுங்கல்

.......... காட்சி மாற்றம் .........



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**காட்சி : 4**

**களம் : அரண்மனை மாந்தை**

**மாந்தர்கள் : அல்லி, தந்தை**

அல் : என்ன தந்தையே திடீரென்று..

தந் : சேனன், குத்திகன் என்ற இரு குதிரை வீரர்கள் கப்பல் மூலம் படையெடுத்து வந்து இலங்கை தேசத்தில் பண்டுகாபயனால் தோற்றுவிக்கப்பட்ட அநுராதபுரத்தைக் கைப்பற்ற வந்திருப்பதாக ஒற்றர்களின் தகவல்.. அதுதான்..

அல் : (இடைமறித்து) அநுராதபுர இராச்சியத்தை அவர்கள் கைப்பற்றுவதற்கும் எமக்கும் என்ன சம்பந்தம் தந்தையே..

தந் : அது வந்து..

அல் : கூறுங்கள்... என்ன படைபலம் கேட்கிறார்களா.. அன்று வேறு ஏதாவது உதவி கேட்கிறார்களா..

தந் : அப்படியென்றால் பரவாயில்லை..

அல் : அப்படிக் கூறாதீர்கள் தந்தையே... அநுராதபுர மன்னன் எங்கள் அண்டை இராச்சியக்காரன்... எம்முடன் பகைமை பேணாதவன்... அவனுக்கு ஏதாவது ஆபத்து என்றால் நாம் உதவி செய்ய வேண்டுமே தவிர அவனை அழிக்க நினைப்பவர்களுக்கு உதவி செய்வது அல்ல..

தந் : மகளே.. நீ கூறுவது நியாயம் தான்... ஆனால் அந்த சேனன் குத்தியன் இருவரும் வந்து இறங்கியுள்ள இடமானது புத்தளத்துக்கும் பூக்குளத்துக்கும் இடையில் உள்ள குதிரைமலையில் அல்லவா..

அல் : (ஆச்சரியத்துடன்) என்ன குதிரை மலையிலா...

தந் : ஆம் மகளே.. அவர்கள் குதிரைமலையில் இறங்கியது மட்டுமல்ல.. பாசறையும் அமைத்துள்ளார்களாம்.

அல் : எமது ஒற்றர்கள் அவ்வளவும் நடக்கும் மட்டும் என்ன செய்தார்களாம்..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தந் : அவர்கள் தந்த தகவல் தான் இது. அது மட்டுமல்ல முசலி முத்தரிப்புக் கோட்டையைக் கைப்பற்றினால் தான் தாங்கள் அநுராதபுரம் நோக்கிய படை நகர்வுக்கு சுலபமாக இருக்கும் என்றும் திட்டங்கள் இருப்பதாகத் தகவல்..

அல் : அப்புறம்..

தந் : படைபலத்தால் இயலாதவிடத்து நயவஞ்சகமாகத் தன்னும் கோட்டையைக் கைப்பற்ற முயல்வதாகவும்.. தகவல்...

அல் : அவ்வளவுதூரம் துணிந்து விட்டார்களா..? தகவல் கிடைக்க ஏன் இவ்வளவு தாமதம் தந்தையே..

தந் : முத்துக் குளிக்கும் இந்தப் பருவகாலத்தைச் சாதகமாகப் பயன்படுத்தி முத்துக்குளிக்க வருபவர்கள் போலவும், முத்து வியாபாரிகள் போலவும் சுலபமாக ஊடுருவி விட்டார்கள்...

அல் : தாமதம் தான்... என்றாலும் தகவலுக்கு நன்றி..தகவல் தந்த ஒற்றனுக்கு சன்மானத்தை தவறாது வழங்க ஆவன செய்யுங்கள்.. நாம் இந்த விடயத்தில் மிகவும் எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.. பார்ப்போம்.. நான் ஏற்ற நடவடிக்கையை எடுக்கிறேன்.. பார்ப்போம்.

....... காட்சி மாற்றம் ........

**காட்சி : 5**

**களம் : அரண்மனை**

**மாந்தர்கள் : அல்லி, அர்ச்சுனன்**

அர் : (செருமிக்கொண்டு) அல்லி...

அல் : கூறுங்கள்.. என்ன தங்கள் குரல் ஒருமாதிரி...

அர் : அது.. ஒன்றுமில்லை.. நான் புறப்படுகிறேன்... விடைகொடு

அல் : போகப்போகிறீர்களா..? விடைகொடுப்பதா.. எங்கே.. திடீரென்று..?

அர் : வேறு எங்கே.. தீர்த்த யாத்திரை முடிந்துவிட்டது... அழைப்பு வந்துள்ளது.. நாட்டுக்குப் போகிறேன்..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அல் : அப்படியா.. தந்தையிடம் சொல்கிறேன்.. நாளையே நாங்கள் இருவரும் புறப்படலாம்...

அர் : நீயும் என்னோடு வந்து விட்டால் நம் குழந்தையை யார் கவனிப்பது..?

அல் : வேறு யார்... நானேதான்...

அர் : அதெப்படி... ஆண்குழந்தை கிடைத்து விட்டால் தனக்குத் தந்துவிட வேண்டுமென்று உன் தந்தை கேட்டிருந்தார்... நானும் வாக்குக் கொடுத்து விட்டேன்..

அல் : கேட்டது தெரியும்... ஆனால் என்குழந்தையை அவருக்குத் தத்துக்கொடுக்க யாரின் அனுமதியுடன் வாக்குக் கொடுத்தீர்கள்.

அர் : அது வந்து... கேட்பவர் உன்தந்தை... நாட்டை ஆள வாரிசு வேண்டும் என்கிறார். வாரிசுக்காக மன்னவன் யாசிக்கும் போது மறுக்கக்கூடாதல்லவா..?

அல் : என் தந்தை எனக்குத் திருமணஞ் செய்து வைக்க ஆசைப்பட்டது நாட்டை ஆள வாரிசு தேடியா..?

அர் : தந்தையாரின் எண்ணம் எதுவோ... அது நானறியேன்.. ஆனால் அவரின் வேண்டுதலைத் தட்டமுடியாது..

அல் : அதற்கு..

அர் : அது மட்டுமல்ல... இராஜ அலுவல்.. அழைப்பு வந்துள்ளது... நான் செல்ல வேண்டும். தவிர்க்க முடியாது.. (குழந்தை அழும் சத்தம்).

அல் : இங்கும் முக்கியமான ராஜ அலுவல் உள்ளது. அநுராதபுர இராச்சியத்தை கைப்பற்றுவதற்கு.. சேனன் குத்தியன் என இருவர் வந்து இறங்கி.. புத்தளத்துக்கும் பூக்குளத்துக்கு மிடையில் உள்ள குதிரைமலையில் பாசறை அமைத்துள்ளதாகத் தகவல்.. இந்நிலையிலேயும் நான் தங்களுடன் வரத்துணிந்தேன்.. ஆனால் நீங்களோ...

அர் : நான் உடனடியாகச் செல்ல வேண்டியது.. ம்..ம்.. செல்வது என்று முடிவெடுத்து விட்டேன்.. கூறி அனுப்பியும் விட்டேன்... தாமதிக்க முடியாது...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அல் : அப்படியெனில்... தாங்கள் முடிவெடுத்து விட்டு என்னிடம் கேட்கவேண்டிய காரணம் என்னவோ..

அர் : கடமை..

அல் : உங்களுக்கு உங்கள் கடமை முக்கியம்..

அர் : இராஜ கடமையில் தாமதிக்க முடியாது...

அல் : நாங்கள் முக்கியமல்ல.. அப்படித்தானே.. இராஜ அலுவல் தான் முக்கியம் என்றால்.. சென்று வாருங்கள்.. (குழந்தை அழும் சத்தம்). எனது முடிவைக் கேட்க வேண்டிய அவசியம் இல்லை..

அல் : (அழுதழுது.. குழந்தையைத் தேற்றுதல்) என் செல்லம்... அழாதையடா என் மகனே... என் பப்புருவாகனா.. அழுகையினாலேயே என் தாய்மையைச் சோதிக்கிறாயா. என்னதான் வீரமிருந்தாலும் விவேகமிருந்தாலும் பெண்ணென்பவள் தாய்மையின் அடையாளம் என்பதைச் சொல்லித் தான் அழுகிறாயா... அன்றேல்... தந்தை செல்கின்றாரே என்று கலங்குகின்றாயா.. கலங்காதேயடா.. நான் உன்னைப் பெற்றவள்.. உன் தாய்.. உன்னை விட்டுப் போகமாட்டேனடா செல்லம்.... இங்கே தானடா பெண்கள் பாவம் செய்தவர்கள்.. புரிகின்றதடா.. பெண்மை என்பது.. என்னதான் வீரம் இருந்தாலும் தாய்மை என்று வரும்போது பாசத்துக்குக் கட்டுப்பட்டதடா.. நான் இருக்கிறேன்... என் வீரம் விவேகம்.. அனைத்தையும் மறந்து.. துறந்து உன்னுடன் உண்மையான தாயாக இருக்கிறேன்.. அது தந்தையாக இருந்தாலும் வேறு எவராக இருந்தாலும் போகிறவர்கள் போகட்டும்.. போக விடைகொடு.. நான் உன்னுடனேயே இருப்பேன்.. உன் தாய் என்றும் உன்னுடன் இருப்பாளடா.. (அழுதழுது) உன் தாய் என்றும் உன்னுடன் இருப்பாளடா...

.......... காட்சி மாற்றம் ........



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**காட்சி : 6**

**களம் : அரண்மனை**

**மாந்தர்கள் : அல்லி, தந்தை**

(அர்ச்சுனன் வராமையினால் சந்திக்க உலோபியின் மகன் சென்றும் சந்திக்க முடியாமல் வந்துள்ளான். அல்லி கோபத்துடன்)

தந் : மகளே.. உலோபியின் மகன் அரவான் இந்திரன் சபைக்குச் சென்ற போதும் அர்ச்சுனர் ஏனென்று ஏறெடுத்தும் பார்க்க வில்லையாம்...

அல் : உலோபியின் தோழி மூலம் தகவல் கேள்விப்பட்டேன்..

தந் : அப்படியா மகளே..

அல் : ஆம் தந்தையே.. நான் எதிர்பார்த்தது தான்... அன்று மல்யுத்தம் தொடங்கிய போதே இடி இடித்து மின்னல் வெட்டும் போது நீங்கள் கூறியதை நினைத்துப் பாருங்கள்.. எல்லாம் இந்திரனின் மாயா ஜாலங்கள் தான்..

தந் : ஆம் மகளே.. அது மட்டுமல்ல நாராயணனுடன் சேர்ந்து சதி செய்து உலோபி மகன் அரவானை பலிகொடுக்கத் திட்டம் போடுவதாகவும் ஒரு தகவல்..

அல் : ம்.. அதையும் அறிந்தேன்.. ம்.. அறிந்தேன்..

தந் : எல்லா முயற்சியும் வீணம்மா...

அல் : ஆம்... திரௌபதியாரின் சாபம்... தீர்த்த யாத்திரை என்று கூறி இங்குள்ள புனிதத்தலங்களுக்கு வந்து செய்த பாவத்தைப் போக்குவோம் என்றில்லை.. இன்னும் பாவத்தை சேர்த்துக் கொண்டல்லவா போயிருக்கிறார்கள்.

தந் : ஆம் மகளே.. இந்திரனும் எப்போதும் எமது இனமான நாகர்களுக்கு எதிரானவர் என்பது நாமறிந்ததே..

அல் : ஆம் தந்தையே... இங்கு இலங்கையின் வடகரைக்கு வந்ததுவும்.. எம்மை மணம் முடித்ததுவும் ஏதோ வஞ்சக எண்ணம் என்று தான் நினைக்கிறேன்.

தந் : என்ன கூறவருகிறாய் மகளே..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அல் : ஆம்... எமது கடற்படையின் பலத்தை வேவு பார்க்க இந்திரன் நடாத்திய நாடகமோ என எண்ணத் தோன்றுகின்றது..

தந் : அப்படியும் இருக்கலாம்...

அல் : அர்ச்சுனரின் வரவுடன் இடியும் மின்னலும் ஆர்ப்பரித்ததை நினைத்துப் பாருங்கள்..

தந் : ஆம் புரிகின்றது.. நாம்தான் வெளுத்ததெல்லாம் பால் என்று நம்பி ஏமாந்து போய்விட்டோம்.

அல் : ஆம் தந்தையே.. திரௌபதியார் தனக்குச் சாபம் போட்டதென்றார்.. வாயில்லாப் பிராணிகளான நாய்களுக்குச் சாபம் போட்டதென்றார்.. எல்லாம் நன்றாகத் திட்டம் போட்டுச் செயற்படுத்தி இருக்கின்றார்.

தந் : எடுத்த எடுப்பிலேயே தப்பாக எடைபோட்டுவிடாதே மகளே..

அல் : இல்லை தந்தையே.. மன்னிக்க வேண்டும்.. திரௌபதியார் மட்டும் தான் பெண் என எண்ணினாரா..

தந் : அது வந்து..

அல் : திரௌபதியார் மட்டுமல்ல.... நானும் பெண்தான் என்பதை உணர்ந்திருக்க வேண்டும்.. என்னாலும் முடியும் என்பதை எண்ணியிருக்க வேண்டும்..

தந் : என்ன கூறுகிறாய் மகளே..

அல் : ஆம் தந்தையே.. அவரும் பெண்தான் நானும் பெண்தான்... எனது சாபத்திற்கும் அவர் கட்டுப்பட்டே ஆக வேண்டும்...

தந் : என்ன அவசர விடயமோ..!

அல் : எது எப்படியென்றாலும்.. (கோபமாக) எனது செல்வன் பப்புருவாகனனின் நிலையை தாய் நான் மட்டும்தான் அறிவேன்.. என் மனம் எரிவது எனக்கு மட்டும் தான் புரியும்.. காதல்கதை பேசி காம விளையாட்டுக்களுக்குத் தான் இந்த அல்லிராணி என்று அர்ச்சுனனார் நினைத்தாரோ..

தந் : மகளே..

அல் : ஆம் தந்தையே.. நானும் பெண்தான்.. எனக்கும் சக்தியுள்ளது என்று தெரிந்திருக்க வேண்டும்.. (ஆவேசமாக) பெண் என்றவுடன் அவள் கொண்டிருந்த அன்பைத் தவறாகப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புரிந்து கொண்டு. தனக்குச் சாதகமாக்கி காமக்கிழத்தி என்று தவறாக எடை போட்டவருக்கு இதுதான் ஒரேவழி...

தந் : மகளே..

அல் : ஆம் தந்தையே.. பெண்ணையும் அவளன்பையும் காமத்துக்கும் தன் கேடுகெட்ட எண்ணத்துக்கும் பயன்படுத்தும் கயவனின் குலம் தமக்குள் மூழும் சகோதரப் பகையால் பேரழிவைச் சந்திக்கட்டும்..

தந் : மகளே.. அல்லிராணி..

அல் : பெண்மானத்தை தனக்காகப் பயன்படுத்தும் நயவஞ்சகனின் குலத்தாள் சபைநடுவே அவன் சகோதரர்களாலேயே மானபங்கப்படுத்தப்படட்டும்..

தந் : வேண்டாமம்மா... அவரவர் செய்ததற்கு மற்றயவர்களை ஏனம்மா தொடர்புபடுத்துகிறாய்..

அல் : இல்லை தந்தையே.. அவர்கள்தான் இதற்கு மூலகாரணம்.. அவன் அன்னையோ, மனையாளோ அந்த வம்சத்தின் எவருக்குமே முறையாக காதலுறவும் மணவாழ்வும் வாய்க்கப் பெறாது அல்லலுறட்டும்..

தந் : மகளே.. வேண்டாமம்மா.. தனி ஒருவர் செய்த தவறுக்கு சமுதாயத்தையே சாபம் போடுவது தவறம்மா..

அல் : இல்லை தந்தையே... அதே சமூகம் தான் அர்ச்சுனரை என்னிடம் வரவிடாமல் தடுத்தது.. அனுபவிக்கட்டும்.. நன்றாக அனுபவிக்கட்டும்.. முனிசிரேஷ்டர்களால் மட்டுமல்ல.. திரௌபதி அம்மையாரால் மட்டு மல்ல.. (அழுது) இந்த ஏழை.. இந்த அபலையின் கண்ணீருக்கும் பதில் சொல்லியே ஆக வேண்டும்.. (ஆக்ரோசமாக) இந்த ஏழையின் சாபத்திற்கும் பதில் சொல்லியே ஆக வேண்டும்.. (பதிந்து) இந்த ஏழையின் சாபத்திற்கும் பதில் சொல்லியே ஆக வேண்டும்..

........ நிறைவு ...........

(மகாபாரத காலத்தில் மாந்தையில் ஆட்சி புரிந்த சிற்றரசி அல்லி ராணியின் கதையிலிருந்து)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிறுவர் நாடகங்கள் (குட்டிநாடகங்கள்) பிரதியாக்கம்...



பதினைந்து நிமிட குட்டி நாடகங்கள். சிறுவர் வானொலி நாடகங்கள். இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில்ஒலிபரப்புச் செய்யப் பட்டவை. இவை அனைத்தையும் தயாரித்து சிறுவர்மலர் நிகழ்ச்சியில் வழங்கியவர் சிறுவர்மலர் தயாரிப்பாளரும் சிரேஷ்ட ஒலிபரப்பாளருமான 'வானொலி மாமா' திரு.எஸ்.எழில்வேந்தன் அவர்கள்


1. நீயே உனக்கு நீதிபதி *(1992)*
2. மனச்சாட்சி *(1992)*
3. ஏமாற்றாதே ஏமாறாதே *(1992)*
4. எதிர்பாராதது *(1992)*
5. விளையாட்டு வினையானது *(1993)*
6. சட்டம் *(1992)*
7. வடிகால்கள் *(1992)*
8. பாவத்தின் தண்டனை *(1992)*
9. எல்லோரும் கொண்டாடுவோம் *(1992)*
10. கடவுளுக்குக் காணிக்கை *(1993)*
11. ஆசையா பாசமா *(1993)*
12. சந்திக்கு வந்த சில சத்தியங்கள் *(1993)*
13. பழிக்குப் பழி *(1993)*
14. யார் சிநேகிதி *(1993)*
15. எது பொழுது போக்கு *(1993)*
16. தனக்கு வந்தால் தான் தெரியும் *(1993)*
17. தூசு *(1994)*
18. அடி தடி *(1994)*
19. காயாத வடுக்கள் *(1994)*




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

20. பழி (1994)
21. நீதி (1994)
22. ஒற்றை றோஜா (1994)
23. கணிதமும் கப்பமும் (1994)
24. வலி (1994)

(முதன்முதலில் நாடகப் பிரதியை ஏற்றுக்கொண்டமை தொடர்பாக அன்று தயாரிப்பாளர் அனுப்பிய தபாலட்டை.. இத்தபாலட்டையே என்னை என்மீது நம்பிக்கை கொள்ளச் செய்து எனது வானொலி எழுத்துத் துறைக்கான கதவினைத் திறந்து விட்டது)


இ.ஒ.கூ. தாபனம்,
த.பெ. இலக்கம் 574,
கொழும்பு.
24-6-92


அன்புடையீர்,
தாங்கள் அனுப்பிவைத்த [illegible] நாடகப்பிரதி கிடைத்தது. இதுபோல் [illegible] மேலும் 4 அல்லது 5 நாடகப் பிரதிகளை அனுப்பி வையுங்கள். அவையும் கிடைத்ததும் ஒலிபரப்புவதற்கேற்ற ஒழுங்குகள் செய்வோம். முடிந்தால் ஒருதடவை எம்மைத் தொலைபேசியிலோ அல்லது நேரிலோ தொடர்பு கொள்ளவும்.


எமது தொலைபேசி இலக்கம் 6 5001.
நன்றி.
இங்ஙனம்,
(எஸ். எழில்வேந்தன்)
[illegible]

S. AMBALAVANAR,
No 1, QUARRY LANE,
OFF COLLEGE STREET
KOTAHENA,
COLOMBO - 13


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வானொலி நாடகங்கள் (30 நிமிடங்கள்) பிரதியாக்கம்...



முப்பதுநிமிட வானொலி நாடகங்கள். மூத்த, மிகக்கட்டுப்பாடான தயாரிப்பாளரான திரு.ஜோரஜ் சந்திரசேகரன் ஐயா அவர்களினால் தயாரிக்கப் பட்ட சட்டத்தின் திறப்பு விழாவுடன் ஆரம்பமான பயணம்.

1. சட்டத்தின் திறப்புவிழா *(1992)* தயாரிப்பு : திரு.ஜோர்ஜ் சந்திரசேகரன்
2. காயாத வடுக்கள் *(1994)* தயாரிப்பு திரு.வி.என். மதிஅழகன்
3. இருபது ரூபாநோட்டு *(2012)* தயாரிப்பு திரு.லூக்கஸ் திருச்செல்வம்
4. மனவைரம் *(2012)* .......... ” ..........
5. அறுவடை *(2013)* .......... ” ..........
6. செய்வினை *(2013)* .......... ” ..........
7. தகைமை *(2013)* .......... ” ..........
8. மயிர்க்கொட்டிகள் *(2014)* .......... ” ..........
9. பெட்டிசம் *(2014)* .......... ” ..........
10. பெறுமதி *(2014)* .......... ” ..........
11. வசியம் *(2014)* .......... ” ..........
12. விதை *(2015)* .......... ” ..........
13. வீரம் *(2016)* தயாரிப்பு திரு. சிவராஜா தக்கீசன்
14. சொந்தங்கள் *(2017)* .......... ” ..........
15. வடிகால்கள் *(2018)* .......... ” ..........
16. விதி *(2018)* .......... ” ..........
17. துரோகம் *(2018)* .......... ” ..........
18. வாக்குறுதிகள் *(2018)* .......... ” ..........
19. பெண்மை *(2018)* .......... ” ..........
20. சாபம் *(2018)* .......... ” ..........



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலைஞர் ஒப்பந்தப் பத்திரம்

தொலைபேசி இல: 695001
தமிழ்ச் சேவை.
தந்தி: [illegible]
எமது இல: எல்.எஸ்.ரீ.1

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்
தமிழ்ச் சேவை
த.பெ.இல: 574,
கொழும்பு.

..........199 .

அன்புடையீர்,

கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள விபரங்களுக்கமைய வானொலி நிகழ்ச்சியில் பங்குபற்றுமாறு / ஒலிப்பதிவுக்காக எழுத்துப்பிரதியை அனுப்புமாறு கேட்டுக்கொள்கிறோம்.

நிகழ்ச்சித் தலைப்பு: [illegible]

உபதலைப்பு: [illegible]

ஒத்திகை: திகதி.....25/11/92.....நேரம்.....1:30 பி.ப.

ஒலிப்பதிவு: திகதி.....25/11/92.....நேரம்.....3:30 பி.ப.

ஒலிபரப்பு: திகதி.....5/12.....நேரம்.....7:30 பி.ப.

சன்மானம்: ரூபா..325/-.........

இவ்வமைப்பு கீழ்க்குறிப்பிட்ட நிபந்தனைகளுக்குட்பட்டதாகும்.

1. நிகழ்ச்சிப் பிரதியின் கருப்பொருள் சொந்தக்கற்பனை / தழுவல் / தமிழாக்கம் என்பனவற்றிற்கு நீங்களே முழுப்பொறுப்பு என்பதை வலியுறுத்துகிறோம்.

2. பூரணமான எழுத்துப்பிரதியையும் நிகழ்ச்சி பற்றிய இதர விபரங்களையும் இரண்டு வாரங்களுக்கு முன் எமக்கு அனுப்பி வைக்க வேண்டும். சகல நிகழ்ச்சியின் ஒவ்வொரு பிரிவும் குறிப்பிட்ட அளவு நேரத்திற்கமைய வேண்டும். அத்துடன் ஆக்கியோன், ஒழுங்கு செய்தோன், வெளியீட்டாளர் ஆகியோரது பெயர்களையும் ஆங்காங்கே குறிக்கவேண்டும்.

3. முக்கியமாக நீங்கள் பங்குபற்றும் திகதிகளை / கூட்டுத்தாபனம் எது என்பதையும் மாறவேண்டும், படியேற்ற திகதி அந்த விபரங்களையும் தவறாது விடைப்பத்திரத்தில் குறிப்பிட வேண்டும்.

4. மேற்குறிப்பிட்ட எல்லா நிபந்தனைகளுடன் ஒத்திகை / ஒலிப்பதிவு ஆகியவற்றிற்கு 30 நிமிடங்களுக்கு முன்பே வானொலி நிலையத்திற்கு சமுகமளிக்க வேண்டும். புகையிரத பயணச்சீட்டு தேவையேற்படின் அனுப்பி வைக்கப்படும்.

5. இத்துடன் இணைக்கப்பட்டுள்ள விடைப்பத்திரத்தைத் தேவையான விபரங்களுடன் பூர்த்தி செய்து கையொப்பமிட்டு..............ம் திகதிக்கு முன்னர் எமக்குக் கிடைக்கக்கூடியதாக அனுப்பி வைத்தல் வேண்டும். விடைப்பத்திரம் கிடைக்காவிடின் நீங்கள் நிகழ்ச்சியில் பங்குபற்றச் சம்மதமில்லை எனக்கருதப்படும்.

திரு / திருமதி / செல்வி...S. ஞானசேகரன்......
Mr/....Gnany Fan........
C/o...College St........
Col 13

இங்ஙனம்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வானொலி நாடகங்கள் - 30 நிமிடங்கள் குரல்கொடுத்தவை...

1. பவளவிழா (2008)
2. குமுதா பல்கலைக் கழகம் போகிறாள் (2008)
3. வெகுமதி (2008)
4. வரங்கள் (2009)
5. சன்மானம் (2009)
6. இழப்புகளில் ஒரு உயிர்ப்பு (2009)
7. புயலும் மழையும் (2010)
8. நிம்மதியைத் தேடி (2010)
9. சய தர சய சமன் சக (2010)
10. மறுஜென்மம் (2010)
11. நாங்கள் கனடாவுக்குப் போகிறோம் (2010)
12. விழிப்பு (2010)
13. சுடலைஞானம் (2010)
14. நாடக விருந்து (2010)
15. நெஞ்சுக்கு நீதி (2010)
16. ஒரு கலியாணம் ஒப்பேறுகின்றது (2010)
17. விதிவரைந்த பாதை (2010)
18. நெஞ்சாங்கட்டை (2010)
19. ஊனம் (2011)
20. கையூட்டு (2011)
21. பிடிவாதம் (2011)
22. அயலவர்கள் (2011)
23. தானம் (2011)
24. கல்யாணமும் குடும்ப வாழ்வும் (2011)
25. ஒரு தீபம் அணைகின்றது (2011)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

26. மர்மம் *(2011)*

27. தனிமை *(2011)*

28. கவிதையா கல்யாணமா *(2011)*

29. தன்வினை *(2011)*

30. குத்துவிளக்கு *(2011)*

31. இருப்பதற்கு ஒரு இடம் *(2011)*

32. தப்பு *(2012)*

33. பிள்ளைக்கொரு பிள்ளை *(2013)*

34. அந்தஸ்து *(2012)*

35. தனிமனித சுதந்திரம் *(2012)*

36. பொய்த்தோற்றம் *(2012)*

37. மன்மதன் அம்பு *(2012)*

38. அம்மாவும் அப்பாவும் *(2012)*

39. இருபது ரூபா நோட்டு *(2012)*

40. எல்லோரும் வாழுவோம் *(2012)*

41. பட்டதாரிகள் *(2012)*

42. அரசாங்கச் சொத்து *(2012)*

43. பவளக்கொடி *(2012)*

44. கிராமத்தின் ஒளிவிளக்கு *(2012)*

45. மனவைரம் *(2012)*

46. மாட்டுக்கொட்டிலிலே *(2012)*

47. பொன்னம்மாவுக்கு ஒரு பூமாலை *(2013)*

48. இல்லம் *(2013)*

49. துணிவேதுணை *(2014)*

50. காதலும் கலியாணமும் *(2014)*

51. சிமியோன் *(2014)*

52. தாழ்வுமனப்பான்மை *(2014)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

53. அறுவடை (2014)

54. தொழினுட்பப் பூங்கா (2014)

55. செய்வினை (2014)

56. பிரமச்சாரி (2014)

57. வெளிநாட்டுப்பயணம் (2014)

58. மனிதம் மலர்கின்றது (2014)

59. துறவு (2014)

60. தனிமரம் (2014)

60. தகைமை (2014)

62. டவுட்டு கணேசன் (2014)

63. போலிக்கெளரவம் (2014)

64. பூமனம் (2014)

65. ஊனமான உள்ளம் (2014)

66. பெட்டிசம் (2014)

67. பெறுமதி (2014)

68. வசியம் (2014)

69. பாயோடை படுக்கப் பண்ணியிடுவாங்க (2014)

70. விதை (2015)

71. இலவுகாத்தகிளி (2016)

72. வீரம் (2016)

73. மொட்டைக்கடிதம் (2016)

74. சொந்தங்கள் (2017)

75. வடிகால்கள் (2018)

76. விதி (2018)

77. துரோகம் (2018)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*நான் குரல் கொடுத்த பெரும்பாலான நாடகங்களைத் தயாரித்த அம்மா ராஜேஸ்வரி சண்முகம், திரு லூக்கஸ் திருச்செல்வம் அவர்களுடன் 'இருப்பதற்கு ஒரு இடம்' நாடக ஒலிப்பதிவின் போது*




## வானொலி தொடர் நாடகங்கள் குரல் கொடுத்தவை...

1. 'அலைகடல் ஓடங்கள்'

   இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

   1992

2. 'கண்ணகி புரம்'

   யங் ஏசியா ரெலிவிசன் நெற் வேர்க்

   2011

3. 'திரை'

   யங் ஏசியா ரெலிவிசன் நெற் வேர்க்

   2013



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நானும் தொலைக்காட்சியும் ....

1. 'சுஜாதா தியனிய' - பின்னணிக்குரல்
இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனம்
2014

2. 'God in Shackles' தமிழ் - பின்னணிக்குரல்
இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனம்
2017

3. 'முதற் கனவே' - பின்னணிக்குரல்
Open Theater நடராஜா மணிவாணன்
2018

## நானும் புத்தகங்களும் ....

1. 'பஞ்சாமிர்தம்' - *(2015)* சிறுவர் நாடகங்கள் ஐந்து
இலங்கை கலாசாரத்திணைக்கள கையெழுத்துப் பிரதிப் போட்டியில் இரண்டாம் இடம்

2. 'சட்டத்தின் திறப்புவிழா' *(2016)* - வானொலி நாடகங்கள் ஒன்பது
இலங்கை கலாசாரத்திணைக்கள அரசவிருது விழா 2017 இன் திறந்த சுயநாடகப் பிரிவில் இறுதிச்சுற்றுக்கு தெரிவு செய்யப்பட்ட மூன்று நாடகங்களில் ஒன்றாக இடம்பெற்று சான்றிதழ் பெற்றது

3. 'பஞ்சாயுதம்' *(2017)* - சிறுவர் நாடகங்கள் ஐந்து
இலங்கை கலாசாரத்திணைக்கள அரசவிருது விழா 2018 இன் திறந்த சுயநாடகப் பிரிவில் இறுதிச்சுற்றுக்கு தெரிவு செய்யப்பட்ட மூன்று நாடகங்களில் ஒன்றாக இடம்பெற்று சான்றிதழ் பெற்றது


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மனவைரம்

## நூலாசிரியர் அறிமுகம்

மறவன்புலோ செல்லம் அம்பலவாணர் அவர்கள்
நவீன அறிவியல்துறையில் ஒரு
பொறியியலாளராகத் திகழ்கிறார்.
அதேவேளை நாடக இலக்கியத் துறையில்
பல்பரிமாண நாடகக்கலைஞராகவும்
தன்னை அடையாளப்படுத்தியுள்ளார்.......
நாடகக் கலையில்
மேடைநாடக நடிகர், கூத்து நடிகர்,
வானொலி நாடக நடிகர், நாடக எழுத்தாளர் என
நான்கு பரிணாமங்கள் இவருக்கு உண்டு......
தற்போது வெளிவரும்,
எமது நாட்டை ஆண்ட ஐந்து தமிழ் மன்னர்களின்
ஆட்சியில் நிகழ்ந்த ஐந்துவித அவலங்களைக்
கருவாகக் கொண்ட 'மனவைரம்' ஆனது,
என்றும் நின்று நிலைக்கும் என்பது உறுதி.
நம் நாடாண்ட மன்னர்களை
நினைவுகூர வைத்திருப்பது காலத்தினால்
செய்த நன்றியாகும்.

சைவப்புலவர்,
கலாபூசணம்
**சு. செல்லத்துரை**



ISBN 978-955-42626-3-8
விலை 500/=

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org